**South Harrow Food & Wine**
தமிழ்க் கடை
Tel: 0181-4236321
234 Northolt Road, South Harrow,
Middlesex Ha2 8 du
தரமான இலங்கை Groceries
உடனுக்குடன் மரக்கறி வகைகள்
CD Audio's அதனுடன் புதிய தமிழ்
திரைப்படங்கள் வாடகைக்கு
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
(மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட)
We Accept All Credit cards & Chaques

Euro 1.55 France: 10FFrs. Germany: 2.50DM Swiss: 2.50SFrs. GB: 90P

# ஈழமுரசு
பிரித்தானியா
Eelamurasu Weekly

ஆண்டு: 4 30 ஜூலை – 05 ஆகஸ்ட் 1998 முழக்கம்: 185

**Sakthy Video**
Video Filming for Wedding's B'day's & any other Occasion's
By 3 CCD CAMERA'S
Please Cont: 0181-6956822
Mob: 0961313436
K.R.S.
33 Lee High Road, Lewisham Se-13
Tel: 0181-2979432

# யாழ். நகர் தாக்குதலில் சிறுத்தைக் கொமாண்டோக்கள்?

(27.07.98)

யாழ் நகரப் பகுதியிலுள்ள காவலரணில் அதிர்ச்சியூட்டும் தாக்குதலை நடாத்திய விடுதலைப் புலிகளின் சிறப்புப்படையணியானது மன்னார் தீவுப் பகுதியிலிருந்து கடல்மார்க்கமாக குருநகர் கரையோரத்தில் தரையிறங்கியதாக அறிவிக்கப்படுகின்றது. சுமார் 25 பேரைக் கொண்ட விசேட கடல்-தரைப் போர்களில் பயிற்சிபெற்ற சிறப்புப் படையணி ஒன்றே இத் தாக்குதலில் ஈடுபட்டிருக்கலாம் என கொழும்பு இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

சிறிலங்காவின் 51ம், 52ம் படைப் பிரிவுகளும், கட்டளைப்பீடமும் நிலைகொண்டுள்ள குடாநாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த யாழ் நகர் பகுதியை சிலமணிநேரம் இவ் அணிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தமை சிறிலங்கா இராணுவ வட்டாரங்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி உள்ளது. புலிகளின் இத் திடீர் முயற்சியை முறியடிப்பதற்கு சிறிலங்கா இராணுவத்தினர் கனரக எறிகணைகளை பாவித்துள்ளமை சிலமணிநேரம் நகரின் நோக்குப்

(☞ 2ம் பக்கம்)



## யாழ். நகரில் 5 மணிநேரச் சமர்

(26.07.98)

யாழ் சின்னக்கடைப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ - பொலிஸ் கூட்டுத்தளம் விடுதலைப் புலிகளின் சிறப்புப் படைப்பிரிவொன்றின் அதிரடித் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளது.

சனியன்று அதிகாலை 12.15 மணியளவில் யாழ் நகர்ப்பகுதிக்கு அருகாமையில் அமைந்திருந்த சின்னக்கடை கூட்டுத்தளம் புலிகளினால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது. அதிகாலை 5 மணிவரை இத் தளத்தினை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த விடுதலைப் புலிகள் அங்கிருந்து சில ஆயுத தளபாடங்களை கைப்பற்றிய பின்னர் பின்வாங்கி சென்றுள்ளனர்.

இத்தாக்குதல் இடம்பெற்றுக் கொண்டிருந்த அதேவேளையில் கொழும்புத்துறை, குருநகர் பகு

(☞ 2ம் பக்கம்)

## மாங்குளம் 30 இராணுவம் பலி

(26.07.98)

மாங்குளம் நகரை கைப்பற்றுவதற்கான சிறிலங்கா இராணுவத்தின் மற்றுமொரு முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இன்றுகாலை 1.30 மணியளவில் கனரக பீரங்கிகள், மற்றும் எறிகணை தாக்குதல்களை நடாத்தியவாறு சிறிலங்கா இராணுவத்தினர் தமது நகர்வை ஆரம்பித்தனர். மாங்குளத்தின் தென் மேற்குப் பகுதியூடாக நடாத்தப்பட்ட இவ் நகர்வு

(☞ 2ம் பக்கம்)

## ஈழத் தமிழர்களுக்காக கனடாவின் தேசியக்கொடி அரைக் கம்பத்தில் பறந்தது

சிங்கள பேரினவாத அரசு தமிழ் தேசியத்தின்மீது திட்டமிட்டு நடாத்திய 1983-ம் ஆண்டு ஜூலை இனப் படுகொலை நினைவாக சர்வதேசமெங்கும் நடாத்தப்பட்ட நிகழ்வுகளில் கனடா நாட்டின் புதிய வரலாறு ஒன்று கடந்தவாரம் நடைபெற்றுள்ளது. கனடாவின் ஒன்ட்டாரா மாநிலத்தில் உள்ள கார்லன் பிரதேச தேப்பியன் நகர சபையில் கறுப்பு ஜூலை நிகழ்வுகளுக்காக கனடாவின் தேசியக்கொடி அரைக்கம்பத்திற்கு இறக்கி விடப்பட்டு தமிழீழ மக்களின் அத்துயர வரலாற்றில் தாமும் பங்கெடுத்துக் கொண்டுள்ளது.

நகர சபையின் உதவி முதல்வர் திரு. நிக் சிபோலோஸ்கி அவர்கள் கனேடியத் தேசியக் கொடியை அரைக்கம்பத்திற்கு இறக்கி அங்கு கூடியிருந்த தமிழ் மக்கள் மத்தியில் தனது உணர்வுகளை பகிர்ந்துகொண்டுள்ளார். அவர் தனது உரையில்

(☞ 2ம் பக்கம்)

## பிரான்ஸ் மாவீரர் போட்டிகளில் ஈழவர் முன்னணியில்

(27.07.98)

பாரிசில் மாவீரர் நினைவு மெய்வல்லுநர் போட்டிகள் எதிர்வரும் 02.08.1998 ஞாயிறன்று Porte de Pantin மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

சுமார் 300 க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் பங்கேற்கும் இப் போட்டிகளில் பாரிசின் எட்டு விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்கின்றன.

அன்றைய தினம் [illegible]

(☞ 2ம் பக்கம்)

## இந்திய நிலைப்பாடு [illegible]ற வேண்டும்

- பாராளுமன்றத்தில் வேண்டுதல் -

(27.[illegible])

[illegible]வாச கடற்பகுதியில் நிகழ்ந்த படகு விபத்தில் பலியான ஈழத் தமிழருக்கு இரங்கல் தெரிவித்து தமிழக தலைவர்களான திரு வை. கோபால்சாமி (மதிமுக), திரு சத்தியமூர்த்தி (அதிமுக), திரு டீ.ஆர் பாலு (திமுக) ஆகியோர் இந்திய நாடாளுமன்றத்தில் இன்று குரலெழுப்பியுள்ளனர்.

கேள்வி நேரம் முடிந்ததும் திரு.வை.கோபால்சாமி அவர்கள் சிறிலங்கா அரச படைகளின் தாக்குதல்கள் காரணமாக ஈழத் தமிழர்கள் தமிழகத்தை நோக்கி வரும் வேளையில் இவ்வாறான ஒரு அனர்த்தம் நிகழ்ந்தது எனக் குறிப்பிட்டு அதற்கு அனுதாபத்தையும் தெரிவித்து வாஜ்பாய் அரசு ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்திய நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனக் கோரினார்.

## ஆயுதக் கொள்வனவுக்காக ரத்வத்தை சீனா பயணம்

சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை சீனாவுக்குச் சென்றுள்ளார். முன்னறிவிப்பு எதுமின்றி திடீரென சீனா பயணமான ரத்வத்தை பயணத்தின் நோக்கம் குறித்து உத்தியோக பூர்வமாக எதும் தெரிவிக்கவில்லை. சார்க் மாநாடு நடைபெறவுள்ள இவ்வேளையில் ரத்வத்தை சீனாவிற்கு பயணத்தை மேற்கொண்டது அரச மட்டத்தில் ஆச்சரியத்தைத் தோற்றுவித்துள்ளது. எனினும் தொடரும் ஜெயசிக்குறுய் சமரில் அரச படைக

(☞ 2ம் பக்கம்)

லண்டனில் நம்பிக்கை = நாணயம் = உத்தரவாதம் = குறைந்த விலை
மங்கையர் நெஞ்சங்களில் குறுகிய காலத்தில் இடம்பிடித்தவர்கள்
**RATHY JEWELLERS**
தாலிக்கொடி தயாரிப்பில் கைதேர்ந்தவர்களின் கைவண்ணத்தில்
சகல நகைகளையும் செய்தும், இறக்குமதி செய்து வழங்குபவர்கள்



28 Ealing Road,
Wembley,
Middx. HA0 4TL
Tel: 0181-903 3063
Fax: 0181-903 9711
Mon.-Sat. 10.00 A.M. - 6.30 P.M.
Sunday 12.00 Noon - 6.30 P.M.

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

Siege Social
18 à 26, Rue Perdonnet.
75010 Paris.

RCS PARIS
B 399 673 110 (96B01491)

Directeur de la publication:
P. Velupillai

Redacteur:
P. Sivaguru

Impression:
IMPRIMERIE MEAULLE

தொடர்பு முகவரி

EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris.
France
E.Mail-eelamurasu@aol.com

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
Tel.: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
Tel: 03 04 35 29 23

Tel / Fax: 02 151 39 73 63

டென்மார்க்:
G.R. திருச்செல்வம்
Stadion Alee - 30. 1th
7430 Ikast, Danmark.
Tel + Fax: 75310546

சுவிஸ் மக்கள் கடை
Verlag: People Shop
Hemrich Str-85; 8005 Zürich.
Druckerei: Frankreich.
Tel: 01-271 7374

கனடா:
Tel: 0958906145
Tel: 0958277718

இத்தாலி:
VIA DANTE - 218A, PALERMO
Tel: 091-6824056

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22426527

நெதர்லாந்து:
Tel: 076 5425804


# லெப்.கேணல் தென்னக்கோன் புலிகளின் தாக்குதலில் பலி

சிறிலங்கா இராணுவத்தின் 4 வது களரைப் பிரிவின் உயர அதிகாரியான லெப்.கேணல் நம மிக தென்னக்கோன் பலியாகி யுள்ளார்.

'ஜெயசிக்குறுய்' படைநகர் வில் முக்கியமான அதிகாரியாக கருதப்படும் இவர் கடந்தவார முற்பகுதியில் நடைபெற்ற புலி களின் அதிரடித் தாக்குதல் ஒன் றிலேயே கொல்லப்பட்டுள்ளார். கவச வாகனமொன்றில் இரவு வேளையில் இராணுவத் தலைமையகத்தை நோக்கி சென்றபோது விடுதலைப் புலி களின் தாக்குதலுக்கு இலக்காகி கொல்லப்பட்டுள்ளார். அவரு டன் சென்ற மேலும் இரு அதி காரிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

தணிக்கை காரணமாக இச் செய்தி இருட்டடிப்புச் செய் யப்பட்ட போதிலும் தற்போது அது வெளிச்சத்திற்கு வந்துள் ளது.

# சிங்களவர்கள் ஒன்றுதிரள வேண்டும்

## - கண்டி அஸ்கிரிய பீடாதிபதி வேண்டுதல் -

பண்டைய காலம் தொட்டு இலங்கையை சிங்கள நாடு என்றுதான் அழைத்து வந்தனர். ஆனால் இன்று அரசியல்வாதி கள் சேர்ந்து இலங்கையர் என அழைக்கும் நிலையை உரு வாக்கி வருகின்றனர். சிங்கள வர் என்ற சொல் மறைந்து வரு கின்றது; சிங்கள நாடு என்ற பெயரும் மறைந்து வருகின்றது என, சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கையைக் கையேற்ற கண்டி அஸ்கிரிய பௌத்த பீடாதிபதி வண. பலிபான சந்தரவத்த தேர கவலை தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்களையும், பௌத்த மதத்தையும் சிதைப்பதற்கு வெளி நாட்டு சக்திகள் பல விதமான வேலைகளைச் செய்வதாகக் குற்றஞ்சாட்டியுள்ள இவர், சிங் கள மக்கள் ஒன்றுதிரண்டு தம் இனத்தையும், மதத்தையும் காக் கப் போராட வேண்டும் எனக் கோரியுள்ளார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### யாழ். நகர்...

பகுதியின் கட்டுப்பாட்டை முழுமையாக இராணுவம் இழந் திருக்குமென கூட்டுமென்றது எனக் கருதப்படுகின்றது. தாக்கு தல் ஆரம்பமாகிய உடன் கூட் டுத் தளத்திலும், சோதனைச் சாவடிகளிலும் நிலைகொண்டி ருந்த பல சிப்பாய்கள் பின்வாங்கி ஓடியமையாலேயே படையின ரின் உயிரிழப்புக்கள் பெரிய அளவில் ஏற்பட்டிருக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் தவிர்க்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

இத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் சிறுத்தைகள் படை யணி பங்கேற்றிருந்திருக்கலாம் என கருதப்படுகின்றது. இப் படையினரானது கடல், தரை மார்க்கமான தாக்குதலில் ஈடு படக்கூடிய விசேட கொமா ண்டோ அணியைக் கொண் டது என்பதும், இவை, புல் மோட்டைப் பகுதிகளில் கடற் பரப்பினூடாக உள்நுழைந்து தாக்குதல்களை இக் கொமா ண்டோ அணி மேற்கொண்டி ருந்ததும் குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### ஆயுதக் கொள்வனவு...

ளுக்கு ஏற்பட்ட இராணுவத் தளபாட இழப்புக்களை ஈடு செய்வதற்கான பயணம் இது என கருதப்படுகின்றது.

சீனாவில் பதவத்தை தங்கியி ருக்கும்போது ஆயுதக்கொள்ள னவு தொடர்பாக நேரடி நட வடிக்கைகளில் ஈடுபடு வார் எனவும் சொல்லப்படுகின் றது.


(1ம் பக்கத் தொடர்ச்சி)

### ஈழத் தமிழர்களு...

சிறிலங்கா நாட்டில் தமிழ் மக்க ளுக்கு காலங்காலமாக இழைக் கப்பட்டுவரும் அநீதிகளும், துன் பங்களும் நாகரீகமான எந்த வொரு சமூகத்தினாலும் ஏற் றுக்கொள்ள முடியாதவை எனக் குறிப்பிட்டு சிறிலங்கா அரச படைகள் தமிழ் மக்களுக்கு எதிராகப் புரியும் மனித உரிமை மீறல் செயல்களையிட்டு தான் மிகவும் அதிர்ச்சி அடைவதா கவும் குறிப்பிட்டிருந்தார்.

முன்னதாக கறுப்பு ஜூலை காலப்பகுதியில் கொல்லப் பட்ட மக்களுக்கும் சிறிலங்கா படையினரால் கொல்லப்பட்டு வரும் மக்களுக்கும் மௌன அஞ்சலியைச் செலுத்திய மக் கள் 15 வருடங்களுக்கு முதல் நிகழ்ந்த கொடூர காலத்தினை நினைவு கூர்ந்தனர். இக் கூட் டத்தின் முடிவில் ரொறன்ரோ நகரில் நடைபெற்ற கறுப்பு ஜூலை நிகழ்வுகளில் வாசிப்ப தற்கென ஓர் அறிக்கையினை பேராசிரியர் டி இலகுப்பிள்ளை அவர்களிடம் நிக பிரமுகர்கள் அவர்கள் கையளித்தார்.


# ரவி வாகனசேவை



உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டியது

தொலைபேசி;
0148765190 அல்லது
0607622689


(1ம் பக்கத் தொடர்ச்சி)

### மாங்குளம்...

முயற்சியை எதிர்கொண்டு சுமார் ஐந்து மணிநேரம் விடுதலைப் புலிகளின் சிறப்புப் படையணி கள் பாரிய முறியடிப்புத் தாக் குதலை மேற்கொண்டனர்.

புலிகளின் இத் தாக்குதல்க ளின் போது முப்பதிற்கு மேற் பட்ட சிறிலங்கா இராணுவத்தி னர் கொல்லப்பட்டுள்ளனர். ஏராளமானோர் புலிகளின் கன ரக படைப்பிரிவின் தாக்குதலில் அகப்பட்டு காயப்படுத்தப்பட் டதைத் தொடர்ந்து தனது முயற் சியை சிறிலங்கா இராணுவம் கைவிட்டது. கொல்லப்பட்ட வர்களில் இருவரின் சடலங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றி னர்.

ஏ.கே.எல்.எம்.ஜி, மற்றும் ஆர்.பி.ஜி உட்பட பல்வேறு ரக ஆயுத தளபாடங்களும் விடுத லைப் புலிகளினால் கைப்பற் றப்பட்டது. நான்கு விடுதலைப் புலிகள் இச் சமரில் வீரச் சாவை அடைந்துள்ளதாக அறி விக்கப்பட்டுள்ளது.

மாங்குளம் நகரை கைப்பற் றுவதற்கான சமரில் சிறிலங்கா இராணுவம் பல மாதங்களாக ஈடுபட்டு வருகின்றது. மாங் குளம் நகரானது புலிகளின் அனுபவம் மிக்க படையணிக ளான சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவு, ஜெயந்தன் படைப்பிரிவு மற்றும் சிறுத்தைகள் படைப் பிரிவுகளால் பாதுகாக்கப்படுவ தாக போராளிகள் செய்திகள் தெரிவிக்கின்றன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### மாவீரர்...

பாடும் மீன் விளையாட்டுக் கழ கத்திற்கும், பாலைதூர சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழ கத்திற்கும் இடையிலான மெலி ஏர் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி இடம்பெற உள்ளது.

இதுவரை நடந்துமுடிந்துள்ள மெல்வுப் போட்டிகளின் பிரகா ரம் ஈழவர் விளையாட்டுக் கழ கம் முதலாமிடத்திலும், பாரிஸ் தமிழர் விளையாட்டுக் கழகம் இரண்டாமிடத்திலும், தமிழர் விளையாட்டுக் கழகம் மூன் றாம் இடத்திலும் உள்ளன.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### யாழ். நகரில்...

திகளில் அமைந்திருந்த பல சோதனைச் சாவடிகள் புலிக ளின் தாக்குதலுக்கு உள்ளாகி யுள்ளன.

இத் தாக்குதல்களில் நூற்று மேற்பட்ட படையினர் கொல் லப்பட்டதாகவும், பலர் காயம டைந்ததாகவும் குடாநாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை இத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலி கள் விடுத்த அறிவித்தலில் நூற் றிற்கு மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டதாகவும், சில சுக்கடை கூட்டுத்தளம் சில மணிநேரம் தமது கட்டுப்பாட் டுக்குள் வைக்கப்பட்டிருந்ததாக வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# வாடகைக்கு RESTAURANT
# விற்பனைக்கு வீடு

பாரிஸ் 9 ல் M°: Cadet அல்லது Anvers க்கு அருகாமையில் 28 ஆசனங்களைக் கொண்ட, உடனடியாக நடத்தக்கூடிய, மிகவும் நல்ல நிலையில் உள்ள INDIAN RESTAURANT சகல தளபாடங்க ளுடனும் உடன் வாடகைக்கு உண்டு.

வாடகை: **7,000F HT.**

BAILF 3, 6, 9 வருடங்களுக்கு செய்து தரப்படும்.

விற்பனைக்கு (வீடு): RER-C - Choisy le Roi க்கு அருகாமை யில் 72M² இடவசதி கொண்ட 4 Pices வீடு விற்பனைக்கு உண்டு.

விலை: **4,50,000F**

சகல தொடர்புகளுக்கும்: சிவா

TEL: 01 46 71 66 91 - Mobile Tel: 06 09 91 12 66

புதிய வரவு IATA உடனுக்குடன் பிரயாண ரிக்கெற் பெற்றுக்கொள்ளலாம்

# ERRANCES TRAVELS

**Tel: 01 42 09 70 00**

Fax: 01 42 09 53 39

55, Rue Louis Blanc, 75010 Paris.

M°: La Chapelle *ou* Louis Blanc

*à partir de*

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs |
| Delhi | - | 3,900 Frs |
| Bangkok | - | 3,400 Frs |
| Colombo | - | 3,800 Frs |
| Singapour | - | 3,670 Frs |
| Madras | - | 4,300 Frs |
| Londres | - | 790 Frs |
| New york | - | 2,300 Frs |
| Montreal | - | 2,800 Frs |
| Oslo | - | 2,010 Frs |
| Toronto | - | 2,800 Frs |
| Nepal | - | 4,820 Frs |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Li: 075 95 01 37

# அம்பாறையில் ஊர்காவல் படையினன் பலி

அம்பாறைப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடாத்திய தாக்குதலொன்றில் சிறீலங்காவின் ஊர்காவல் படையினன் ஒருவர் பலியாகியுள்ளார். அவரிடமிருந்த ஆயுதமும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் நடமாட்டம் குறித்து தகவல் சேகரிப்பதற்காக ஊர்காவல் படையினர் ஈடுபட்டு வந்த பொழுதில் அவர்களை இலக்கு வைத்து புலிகள் தாக்குதலை நடாத்தியதாகத் தெரியவருகிறது.

# சூனியமாகக் காட்சிதரும் வாகரை

கடந்த மாதம் சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்ட வாகரைப் பிரதேசம் தற்பொழுது சூனியப் பிரதேசமாக காட்சியளிக்கிறது. 1990, 1993, 1995 ஆகிய ஆண்டுகளில் சிறீலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக்கள் காரணமாக வெளியேறாத வாகரை மக்கள் கடந்த மாதம் முதல் வெளியேறியுள்ளனர். இப் பகுதியில் வசித்த மொத்தக் குடும்பங்களில் ஏறக்குறைய பெரும்பாலானவர்கள் வெளியேறிவிட்டனர். எஞ்சிய ஒருசில குடும்பங்களும் கண்டலடி, கட்டுமுறிவு, அம்பந்தனாவெளி, பால்சேனை, கதிரவெளி போன்ற இடங்களிலும், காடுகளுக்குள்ளும் தஞ்சம்புகுந்துள்ளனர். தற்பொழுது வாகரைப் பகுதியில் நிரந்தர இடங்களில் சிறீலங்கா இராணுவம் முகாமிட்டுள்ளது. வாகரை சந்தி, வாகரை வடக்கு, ஊரி, பனிச்சங்கேணி ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகள் யாவும் வெறிச்சோடிய நிலையில் காணப்படுகிறது. தென்னந்தோப்புக்கள், நெல்வயல்கள், மாவீரர் இறால் பெயர்போன வாகரையில் இன்று உணவென்பது கேள்விக்குறியாகிவிட்டது. மீனவர்கள் பரபரப்பாக மீன்பிடிக்கும் வாடிகள் கூட வெறிச்சோடிய நிலையில் காணப்படுகிறது. தங்கியிருக்கும் ஒருசில மக்கள் வீடுகளுக்குள் முடங்கியே வாழ்கின்றனர். வாகரை மகாவித்தியாலயம் வெறிச்சோடிய நிலையில் காணப்படுகின்றது. மாணவர்கள் இல்லாது ஆசிரியர்கள் மட்டுமே அங்கு வரவைப் பதிந்து திரும்புகின்றனர்.

# வன்னிப்பகுதிக்கான எரிபொருளுக்கு வெட்டு

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு மாதாந்தம் அனுப்பப்பட்டுவந்த மிகச் சொற்ப அளவிலான எரிபொருளை மேலும் குறைப்பதற்கு சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு முடிவுசெய்துள்ளது.

வன்னி மாவட்டங்களுக்கான நிவாரண உதவிகளில் வெட்டு முறையினை அரசு அறிவித்த ஒருசில நாட்களில் இப் புதிய அறிவிப்பு வன்னி மாவட்ட தொண்டர் நிறுவனங்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. வன்னி மாவட்டத்திற்கு அனுப்பிவைக்கப்படும் எரிபொருளின் ஒரு பகுதி விடுதலைப் புலிகளின் கைகளுக்கு போய்ச் சேருகிறது எனக் கூறியே இவ் வெட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பொதுமக்களின் தேவைகளுக்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவைக் குறைத்து அதனை வன்னி படையினருக்கு வழங்கும் சாத்தியக்கூறுகள் குறித்தும் கடந்த வாரம் கொழும்பில் ஆராயப்பட்டுள்ளது.

# லண்டன் பயணிக்க இருந்தவர்கள் நாடுகடத்தப்பட்டனர்

மேற்காபிரிக்க நாடொன்றிலிருந்து கள்ள முறையாக லண்டனை நோக்கி பயணம் செய்ய முற்பட்ட 9 இலங்கையர்கள் அந்நாட்டுப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு சிறீலங்காவிற்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர். கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த இவர்களை சிறீலங்கா பொலிசார் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் நீர்கொழும்பு நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். இவர்கள் அனைவருக்கும் 50 ஆயிரம் ரூபாய் பிணைகளில் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# திருமலையில் படையினர் ஆதரவுடன் தொடர்ந்தும் சிங்களக் குடியேற்றம்

திருமலைக் கண்டி வீதியில் பாலைமோட்டை பிரதேசத்தில் உள்ள நிலங்களில் சிங்களக் குடியேற்றவாசிகள் இராணுவத்தின் ஒத்துழைப்புடன் தொடர்ந்தும் குடியேற்றப்பட்டு வருகின்றனர்.

இராணுவத்தினர் இந் நிலங்களை துப்பரவுசெய்து கொடுத்தபின்னர் அப்பகுதியில் கொட்டில்கள் அமைத்து சிங்களவர்கள் குடியேறி வருகின்றனர். இக்குடியேற்றங்கள் பற்றி பல தரப்பினரும் சுட்டிக்காட்டிய போதிலும் இதுவரை எதுவுமே நடைபெறவில்லை. தொடர்ந்தும் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள்தான் அங்கு நடைபெற்று வருகின்றன.

# இந்தியா தலையிடவேண்டுமாம் ஈ.பி.ஆர்.எல்.எவ் கோருகின்றது

சிறீலங்காவின் இனப்பிரச்சனை விடயத்தில் இந்தியாவின் மத்தியஸ்தமும் உதவியும் உடனடியாகத் தேவையென ஈ.பி.ஆர்.எல்.எவ் கோரிக்கை விடுத்துள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் பொதுச் செயலாளர் சுரேஸ் பிரேமச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கை மூலமே இக்கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் அடல் பிகாரிவாஜ்பாய் சார்க் மகாநாட்டிற்காக கொழும்பு வருகை தர இருக்கும் நேரத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இக் கோரிக்கையை விடுத்ததானது தமிழ் மக்களின் பிரச்சினையில் தனக்கும் கரிசனை இருப்பதாக காட்டிக் கொள்வதற்காகவேயென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# மில்க்வைற் தொழில் அதிபர் கலாநிதி கனகராசா காலமானார்

வட தமிழீழத்தில் உருவாக்கப்பட்ட தொழிற் துறைகளில் தனக்கென ஒரு சிறப்பான இடத்தைப்பெற்ற 'மில்க்வைற்' சவர்க்கார தொழில் அதிபர் திரு.கனகராசா அவர்கள் தான் நேசித்த யாழ். மண்ணிலேயே கடந்த 22ம் திகதி மரணமானார்.

சிவதொண்டு சேவையாளர் போன்ற பட்டங்களை தனதாக்கிக்கொண்ட கனகராசா அவர்கள் வட தமிழீழ தொழில் துறையிலும் பொருளாதார வளர்ச்சியிலும் சிங்கள அரசின் உதவிகளை எதிர்பாராது வாழவேண்டும் என்ற திடமான கொள்கையுடன் வாழ்ந்தவர். அத்துடன் அழிந்துவரும் பனைவளத்தினைத் தடுப்பதற்காக பனம் விதைகள் நாட்டும் பல திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மட்டு மாவட்டத்திற்கு மின் துண்டிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு மின்சாரம் வழங்கும் பாரிய மின்கம்பிகள் வெலிகந்த பகுதியில் அறுந்ததால் மட்டக்களப்பிற்கான மின்சாரம் முற்றாகத் தடைப்பட்டுள்ளது.

அம்பாறை இங்கினியாகல மின்நிலையத்திலிருந்து பெறப்பட்டு வரும் மின்சாரமும் தடைப்பட்டுள்ளதால் இம் மின் துண்டிப்பு ஏற்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பிரெஞ்சுப் பணியகம் நடாத்தும்



மாவீரர்நாள்

மெய்வல்லுனர் போட்டி



02.08.1998 ஞாயிறு

காலை 9.30 மணி


Stade Jules Ladoumeque

(Metro: Porte de Pantin)

பிரதம விருந்தினர்

செல்வ கௌரி

ஆசிய விளையாட்டுப் போட்டியிலும் பார்சலோனாவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியிலும் கலந்துகொண்ட வீராங்கனை



மாவீரர் நினைவு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும் இடம்பெறும்

போட்டியில் கலந்துகொள்ளும் கழகங்கள்

குருநகர் பாடும் மீன் அணி

எதிர் பாசையூர் சென் அன்ரனீஸ் அணி

மேலதிக விபரங்களுக்கு: 01 43 58 11 42

தமிழ் ஆவணக் காப்பகம் Tamileelam Archive

# இராணுவ கட்டமைப்பை சிதறடித்த விடுதலைப் புலிகளின் படையணிகள்

இராணுவத்திற்கு அதி நவீன ஆயுதங்கள் கொள்வனவு செய்வதனை ஓர் எரிபொருள் நிரப்பும் நடவடிக்கைகளுக்கு ஒப்பிடலாம். ஆதாயபரவலர் தனக்கு வெற்றி கிட்டும் வரை முறைகளை அடிக்கடி மாற்றி அறிவது வழக்கம். அதேபோன்றுதான் இராணுவமும் தனது போர் நடவடிக்கைகளில் வெற்றியீட்டும் வகையில் புதிய புதிய தளபாடங்களை தேவைக்கேற்ற முறையில் அடிக்கடி மாற்றிக் கொண்டேயிருக்கும். ஆதாயத்தில் ஈடுபட்டிருப்பவரும் ஆதாயத்தின் கவர்ப்பு என்று பிறைச்கின்றதோ அன்று அவரை விட்டுக் கடப்படும். அதேபோன்று இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைகளும் களம் [illegible] என்று பிழைக்கின்றதோ அன்று

## போரியலைப் புதிதாகப் புகட்டும் தமிழீழ போர்க்களம் IV

நாடும் அதன் மக்களும் சுபீட்சத்தை அனுபவிக்க, அதன் பொருளாதாரம் உடைய பாரமும் இதுதான் இன்றைய சிறிலங்கா இராணுவத்தின் நிலை. விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கின்றோம். நவீன ஆயுதங்கள் தேவை என்பதற்காக சிறிலங்காவில் நடைபெறும் யுத்தத்தின்



கள நிலைமையை அறிந்திராத இடைப்பருவனை மாத்திரம் எண்ணிக்கொண்டிருந்த ஆயுத தரகர்கள் நாட்டின் பொருளாதாரத்தை அடகு வைத்தது ஏதோ கொடுக்கவேண்டும் என்கின்ற நிலையில் பெரும்பான வாக்குறுதிகளை அள்ளி வழங்கிய ஆயுத வியாபாரிகள் முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் விற்பனையாகாத தளபாடங்களை சிறிலங்காவில் கொண்டு வந்து குவித்தார்கள்.

மாங்குளம், மன்னார், கிளிநொச்சி என இராணுவ வெற்றிகளை பெற்றுக்கொண்டிருந்த சிறிலங்கா இராணுவம் வன்னியில் நிலைகொண்டிருந்த விடுதலைப் புலிகளை அழித்து யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வரும் சாத்தியமற்ற ஓர் திட்டப்பாட்டை சாத்தியப்படுத்த முனைந்தனர். இதற்கு அவர்கள் வெளிநாடுகளிலிருந்து கனரக ஆயுதங்களையும், விமானப் படையையும். ஏற்கனவே யாழ் குடாவில் தங்கியிருந்த இராணுவ அணிகளுக்கு உணவு விநியோகம் வான்வழியாகவும், கடல் வழியாகவுமே மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தன.

அதிரும் பலமுறை சிறிலங்காவின் விமானங்களும், கப்பல்களும் விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்டன. நிலையில் அவர்களது யாழ்ப்பிடியோ ஆனாது கேள்விக்குறியாகியது. எப்படியாயினும் யாழ். குடாவினுடைய தரைவழிப்பாதையொன்று திறப்பது அவசியம் என்கின்ற நிலையிலும் விடுதலைப் புலிகளின் பலத்தை உடைக்கும் ஓர் நகர்வாகவும் கிளிநொச்சி நோக்கிய இராணுவ நடவடிக்கையை மிகுந்த நம்பிக்கையுடன் சிறிலங்கா ஆரம்பித்தது.

சிறிலங்கா தனது சுதந்திரத்தின் பின்னான இராணுவ நடவடிக்கைகளில் யாழ். குடாவிலேயே முதன் முறையாக மூன்று டிவிசன் படையணிகளைக் கொண்டு ரிவிரச நடவடிக்கையை நடத்தியிருந்தது. அதன் பின் கிளிநொச்சி நோக்கிய ஜெயசிக்குறுய் போர் நடவடிக்கையில் அது இரண்டு டிவிசன்களுடன் நகர்வினை ஆரம்பித்தது. இந்த இராணுவ நகர்வானது ஓமந்தை வழியாகவும் நெடுங்கேணி வழியாகவும் நகர்ந்து புளியங்குளத்தைக் கைப்பற்றுவதும் பின்னர் மாங்குளத்தைக் கைப்பற்றிப் பிடித்து கிளிநொச்சியை அடைவது என திட்டங்களைக் கொண்டிருந்தது. இதற்காக ஒவ்வொரு கட்டத்திற்கும் ஒவ்வொரு மாதம் காலக்கெடுவே கொடுக்கப்பட்டிருந்தது. மரபு ரீதியாக பெரும் கவச வாகனங்களையும், கனரக வாகனங்களையும் கொண்ட படையணிகளை தன்னகத்தே வைத்திருந்த 53வது இராணுவ டிவிசனையும், கெரில்லா எதிர்ப்பு படைப்பயிற்சியையும் கொமாண்டோ ரீதியான பயிற்சிகளையும் கொண்டிருந்த 55வது டிவிசனும் ஜெயசிக்குறுவின் நகர்வில் பெரும் பங்கினை வகித்தன. பின்னர் விடுதலைப் புலிகளின் தாக்குதல் உக்கிரமும் தமது போர்த் தோல்விகளும் காலக்கெடுவை நீடித்துச் செல்லவே மேலும் ஓர் புதிய 56வது டிவிசன் இராணுவத்தை ஜெயசிக்குறுவில் இணைத்துக் கொண்டனர். இவை தவிர்ந்த கடற்படை, விமானப் படை, பொலிஸ் அதிரடிப்படையினர் போன்றவற்றைக் கொண்டு மேலும் ஓர் புதிய டிவிசனும் ஜெயசிக்குறுவின் நகர்வில் கலந்து கொண்டுள்ளன. இவ்வாறாக சுமார் 40000 படைவீரர்கள் ஜெயசிக்குறுவின் படை நகர்வில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இப்படியிருந்தும் 97ம் ஆண்டு வைகாசி இறுதியில் மாங்குளத்



தில் கொடியேற்றுவோம் என தொடங்கிய ஜெயசிக்குறுய் 98 வைகாசி தாண்டியும் மாங்குளத்தை அண்மிக்க முடியாதுள்ளது. இன்று 14 மாதங்களைக் கடந்து தொடர்ந்து ஜெயசிக்குறுய் இடைவழியில் நிறுத்தப்பட்டிருக்கிறது.

மூன்று மாதங்களிற்குள் ஜெயசிக்குறுவை நிறைவு செய்ய சிறிலங்கா இராணுவ தலைமை முடிவுகளை எடுத்திருந்தும் அவர்களது நம்பிக்கைகளை தவிடு பொடியாக்கி சிறிலங்கா இராணுவத்தின் பலமான கட்டமைப்பை உடைத்தெறிந்து கெரில்லா மற்றும் மரபு ரீதியான இராணுவ வளர்ச்சியை விடுதலைப் புலிகள் இன்று பெற்றுக் கொண்டுள்ளனர்.

இந்த ஜெயசிக்குறுவின் படை நகர்வை விடுதலைப் புலிகள் எதிர்கொள்ளும் விதமும் அவர்களது தொடர்ந்த தாக்குதல் வெற்றிகளும் இன்று உலக ரீதியான அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டுள்ளது. சிறிலங்காவின் படைநகர்விற்கு பெரும் உதவி புரியக்கூடிய கனரக வாகனங்கள் விடுதலைப் புலிகளின் தொடர்ந்த பல முறியடிப்புத் தாக்குதல்களினாலும் ஊடுருவல் தாக்குதல்களினாலும் சிதறடிக்கப்பட்டுள்ளன. ஏராளமானவை விடுதலைப் புலிகளினால் கைப்பற்றிக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

சிறிலங்கா இராணுவம் வன்னி நோக்கிய படை நகர்விற்கான தயாரிப்பு வேலைகளை ஆரம்பித்தபோதே அதன் நோக்கத்தையும் அதனை எதிர்கொள்ள வேண்டிய முறைகளையும் விடுதலைப் புலிகள் திட்டமிட்டு ஆராய்ந்துகொண்டார்கள். இந் நகர்வை தடுத்து நிறுத்தும் யுத்தத்தில் புதிய பல சிறப்புப் படையணிகளும் உருவாக்கப்பட்டன. இராணுவத்தின் பிரதான நகர்வாயுதமான தாங்கிகளைத் தகர்த்தெறியும் கவச எதிர்ப்புப் படையணி, இராணுவ அணிகளின் நகர்வை தடுத்து நிறுத்தி பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் பீரங்கிப் படையணி போன்றவை உருவாக்கப்பட்டன. வன்னியின் சுவ நிலைமைகளுக்கு தாங்கிப் படையில் அவசியம் இராணுவத்திற்கு ஏற்பட்டது. தாங்கிப் படையணியை ஜெயசிக்குறுவின் முதுகெலும்பு என்றுகூடக் கூறலாம். ஆனால் படைநகர்வு ஆரம்பம் ஆரம்பித்து மூன்றாம் நாள் முதலே தாங்கிப் படையணியின் வீழ்ச்சியும் ஆரம்பமாகியது. அன்றைய தினம் ஓமந்தைப் பகுதியில் சிறிலங்காவின் இரண்டு தாங்கிகள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டது. அடுத்ததாக இறம்பைக் குளம் சந்தியைக் கைப்பற்றும் போர் நடவடிக்கையின்போது விக்டர் கவச எதிர்ப்புப் படையணியால் இரண்டு தாங்கிகள் அழிக்கப்பட்டன. இரண்டு வாரங்களிற்குள்ளாகவே நான்கு தாங்கிகளை சிறிலங்கா இழந்திருந்தது. அத்துடன் 125 படையினர் இறந்தும் 500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் இருந்தனர். சிறிலங்கா இராணுவத்தலைமை இதனை எதிர்பார்த்திருக்கவில்லை.

இவ்வளவு விரைவாகவே 500 இராணுவத்தினர் போர்க்களத்திலிருந்து அப்புறப்படுத்தப்படுவார்கள் என அது எதிர்பார்த்திருக்கவில்லை. ஜெயசிக்குறுய் போர்க்களத்தின் அடுத்த நடவடிக்கையாக [illegible] இறம்பைக் குளத்து நிலப்பகுதியைப் பிடிக்கும் ஓர் திட்டத்தினை அதன் தளபதிகள் மேற்கொண்டனர். அதன் பிரகாரம் ஆனி மாதம் மூன்றாம் திகதி மீண்டும் இராணுவம் தனது நகர்வினை ஆரம்பித்தது. இம்முறை இராணுவத்திற்கு எதிர்பார்க்கும் அளவு மிகச் சிறியளவே இடைத் தூரம். மூன்று நாட்களில் 5 கிமீற்றர் தூரத்தை அவர்கள் கடந்திருந்தனர்.

விடுதலைப் புலிகளின் எதிர்ப் புள்ளியிலிருந்து முன்னேறி வெற்றி பெறும் இராணுவத்தினர்

### போர்முனை ஆய்வு



**பண்ணையார்**

இருந்தபோது ஆனி 10ம் திகதி சிங்களப் படைத் தலைமைக்கு மேலும் ஓர் எதிர்பாராத அதிர்ச்சியை விடுதலைப் புலிகள் ஏற்படுத்தினர். வவுனியாவின் வாசலில் ஜெயசிக்குறுவின் கட்டளைத் தலைமையகத்தைக் கொண்டிருந்த இராணுவ வளாகம் தாக்குதலுக்கு உள்ளாகியது. இதன் போது வெடிபொருள் களஞ்சியம் வெடித்துச் சிதறியது. இரண்டு தாங்கிகள் அழிக்கப்பட்டன. பல இராணுவ வாகனங்கள் தீயில் எரிந்துபோயின. மேலும் பல வாகனங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டன. தாண்டிக்குளம் மீதான தாக்குதல் நடந்து பன்னிரண்டு நாட்களின்பின் மீண்டும் இராணுவத்தினர் நகர முயன்றனர். இம்முறை புளியங்குளத்தைக் கைப்பற்றி சோர்வுற்றிருந்த இராணுவத்தினருக்கு உற்சாகத்தை ஏற்படுத்த முயன்றனர். ஆனால் நகர்வை ஆரம்பித்தவுடனேயே முன்னரங்கவிலியில் நிலை கொண்டிருந்த மாலதி படையணியினரால் தாங்கியொன்று அழிக்கப்பட்டது.


இதன் பின் இராணுவத்தின் செறிவான அடுத்த பெருந்தாக்குதல் பெரியமடுப் பகுதியில்

**அன்றைய தினம் ஓமந்தைப் பகுதியில் சிறீலங்காவின் இரண்டு தாங்கிகள் விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டது. அடுத்ததாக இறம்பைக் குளம் சந்தியைக் கைப்பற்றும் போர் நடவடிக்கையின்போது விக்டர் கவச எதிர்ப்புப் படையணியால் இரண்டு தாங்கிகள் அழிக்கப்பட்டன.**

நடந்தேறியது. இத்தாக்குதலில் பெரியமடு படைத்தள கட்டளை அதிகாரியான கேணல் [illegible] கொல்லப்பட்டார். அத்துடன் இச் சண்டையின்போது பெருமளவிலான கனரக ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. சிறிலங்கா படைகளுக்கெதிரான மற்றுமோர் தாக்குதல் ஆவணி முதலாம் நாள் ஓமந்தை - இறம்பைக்குளம் பகுதியில் நடாத்தப்பட்டது. படை நகர்வு தொடங்கி மூன்றாவது இடைவெளியில் நடந்த மூன்றாவது பெரும் தாக்குதல் இதுவாகும். இதில் 185 படையினர் கொல்லப்பட்டனர் 300 இற்கும் மேலான படையினர் காயமடைந்தனர். இதேவேளை ஆவணி 19ம் திகதி புளியங்குளம் பகுதியில் மோதல்கள் ஆரம்பமாகின.

ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையில் மிகப் பெரும் சமர் புளியங்குளத்தில ஆரம்பமாகியது. இம் மோதல்களின் மூலம் நெடுங்கேணிப் பகுதியில் இருந்து நகர்ந்த 55வது படையணியும் சிறப்பாக நகர்ந்து கொண்டிருந்த 53வது படையணியும் புளியங்குளத்தில் இணைந்து மாங்குளத்தை நோக்கி நகரும் திட்டத்தினை கொண்டிருந்தது. ஆனால் விடுதலைப்புலிகளோ இவ் இராணுவ அணிகளை புளியங்குளத்தின் உள்ளே நுழைய விடாது மறித்து தாக்கிச் சிதறடிக்கும் திட்டங்களை மேற்கொண்டிருந்தனர்.

(இன்னும் வரும்)




## பலஸ்தீனம்

# இஸ்ரேல் - பலஸ்தீனம் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பம்

பலஸ்தீனர்களுக்கும், இஸ்ரேலுக்கும் இடையே மிக நீண்டகாலமாக தடைப்பட்டிருந்த அமைதிப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கும் சாத்தியக்கூறுகள் தோன்றியுள்ளன. பல மாதங்களாக இழுபறி நிலையில் இருந்த இவ் அமைதிப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க அமெரிக்கா தொடர்ந்துகொடுத்த அழுத்தத்தின் விளைவாக இரு தரப்பினரும் பேச்சுக்களில் கலந்து கொள்ள இணங்கி உள்ளனர். ஆனால் பலஸ்தீன அதிகாரி ஒருவர் இனி ஆரம்பமாகும் பேச்சுக்களில் எவ்வாறெனினும் மேற்குக்கரையில் இருந்து இஸ்ரேலியப் படைவிலக்கல் குறித்த பேச்சுக்கள் இடம்பெறமாட்டாது எனக் கூறியுள்ளார். படைவிலக்கல் குறித்து ஏற்கெனவே முடிவுகள் எடுக்கப்பட்டுவிட்டன. தற்போது இஸ்ரேலின் பதிலையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம் எனவும் கூறினார்.

அமெரிக்கா மேற்குக் கரைப் பகுதியில் 13 வீத நிலப்பரப்பிலிருந்து இஸ்ரேல் விலகிக் கொள்ள வேண்டும் என்றும், அதற்குப் பதிலாக இஸ்ரேல் மீதான அரபுக் கெரில்லாக்களின் தாக்குதல்களை முறியடிக்க கடுமையான நடவடிக்கைகளை பலஸ்தீனியர்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் கூறியிருந்தது. இதனை பலஸ்தீனியர்கள்



ஏற்றுக் கொண்டிருந்தார்கள். ஆனால், இஸ்ரேல் இன்றுவரை அதை ஏற்றுக் கொள்ளாத நிலையில் தொடர்ந்து இழுத்தடித்து வருகிறது.

பலஸ்தீன அதிபர் யாசீர் அரபாத் கடந்த வெள்ளியன்று இஸ்ரேலிய மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அவிதோர் காஹலானியை சந்தித்து பேசினார். இதன் பின்னர் அவர் தெரிவிக்கையில் அடுத்தவாரம் முதல் இரு தரப்பினரும் பலதரப்பட்ட பிரச்சினைகள் குறித்தும் பேச்சுக்களை மேற்கொள்வார்கள் எனக்கூறினார். ஆனால், அமெரிக்காவின் கோரிக்கையை இஸ்ரேல் ஏற்றுக்கொள்ளும் வரை எந்த ஒரு உயர்மட்டப் பேச்சுக்களுக்கும் இடமில்லை எனப் பலஸ்தீன அதிகாரிகள் கூறியுள்ளனர்.

பலஸ்தீன அதிபர் யாசீர் அரபாத்தின் உதவியாளரான அபு மாஸ் இரு கிழமைகளுக்கு முந்திய வியாழன் அன்று இஸ்ரேலிய பிரதமர் பென்யமின் நெத்தன்யாகு, அரபாத்தை நேரடியான பேச்சுவார்த்தை ஒன்றிற்கு அழைத்திருந்தார். ஆனால் இவ் அழைப்பை யாசீர் அரபாத் நிராகரித்தார். அமெரிக்க அமைதி நடவடிக்கையை இஸ்ரேல் ஏற்றுக் கொண்டு மேற்குக் கரையிலிருந்து படைகளை விலக்கிக் கொள்ள சம்மதித்ததன் பின்னர் உடன்படிக்கை ஏற்பட்டால், அதன் பின் இருவரும் கலந்து கொள்ளும் மாநாடு நடக்கலாம் என்றார்.

இரு தலைவர்களும் இறுதியாக கடந்த அக்டோபர் மாதத்தில் சந்தித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ரஷ்யா

# ரஷ்ய பாதுகாப்புத் தலைவர் பதவி நீக்கம்

ரஷ்ய தேசிய பாதுகாப்பு சேவையின் தலைவர் கடந்த சனியன்று ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்சினால் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இவரது இடத்திற்கு முன்னாள் சோவியத் உளவுப்பிரிவான KGB யின் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது பற்றி ரஷ்ய செய்தி நிறுவனங்கள் செய்தி தருகையில் ரஷ்யாவின் பாதுகாப்பு சேவையின் தலைவரான நிக்கொலாய் கொவால்யோவ் ரஷ்ய அதிபர் யெல்சினால் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் இதற்கான காரணம் கூறப்படவில்லை என்ற போதிலும், கடந்த சனியன்று காலை ரஷ்யப் பிரதமர் சேர்கெய் கிரியென்கோவுடன் வடமேற்கு ரஷ்யாவில் பொறிஸ் யெல்சின் பேச்சுக்களை மேற்கொண்டார். அதன் பின்னர் எடுக்கப்பட்ட முடிவே இது என்று தெரிவித்துள்ளன. திரு. நிக்கோலாய் கொவால்யோவின் இடத்திற்கு முன்னாள் ரஷ்யாவின் இரகசியப் பொலிஸ் அதிகாரியும், அதன் உளவு நிறுவனமான KGBயின உத்தியோகத்தருமான விலாடிமீர் [illegible] யெல்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.



அண்மைக் காலமாக பொறிஸ் யெல்சின் ரஷ்ய நிர்வாக இயந்திரத்தில் பாரிய மாற்றங்களைச் செய்துள்ளார் என்பதுவும் சில மாதங்களுக்கு முன் முழு மந்திரிசபையையே கலைத்து அன்றைய பிரதமர் விக்டர் செர்னமிர்டின் பதவி விலக்கப்பட்டு சேர்கெய் கிரியென்கோ புதிய பிரதமராக நியமிக்கப்பட்டார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்கா

# ஏழு இந்திய விஞ்ஞானிகளை வெளியேற அமெரிக்கா உத்தரவு

அமெரிக்க அரச ஆய்வு நிறுவனம் ஒன்று அங்கு கடமைபுரியும் ஏழு இந்திய விஞ்ஞானிகளை எதிர்வரும் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் அமெரிக்காவைவிட்டு வெளியேறும்படி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளதாக கூறியுள்ளது. கடந்த மே மாதம் இந்தியா மேற்கொண்ட அணுப் பரிசோதனைகளுக்கு எதிராக அமெரிக்கா மேற்கொண்ட தடைகளின் விளைவே இந் நடவடிக்கை எனக் கூறப்படுகிறது.

அமெரிக்க மேரிலாண்ட் மாநிலத்தில் கைதர்ஸ்பேர்க் என்னும் இடத்தில் அமைந்துள்ள NIST என்னும் ஆய்வு மையத்தில் இந்திய தேசிய பௌதிகவியல் ஆய்வு நிலையத்துடன் இணைந்த சில திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அண்மையில் நடந்த அணுப் பரிசோதனைகளின் பின் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் இத் திட்டங்களில் சிலவற்றை நிறுத்தி வைத்துள்ளது.

இந் நிலையத்தின் பேச்சாளர் இதுபற்றிக் கூறுகையில் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அண்மையில் இந்தியா சார்பில் இங்கு தொழில்புரியும் விஞ்ஞானிகளின் விபரங்களை கோரி



யது அதன் அடிப்படையில் ஏழு இந்திய விஞ்ஞானிகளை வெளியேறும் உத்தரவு வெளியாகி உள்ளது எனத் தெரிவித்தார்.

அமெரிக்க அரசினால் வெளியேறுமாறு கூறப்பட்ட விஞ்ஞானிகள் இந்திய பாபா அணு சக்தி ஆராய்ச்சி மையத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், சிலர் பம்பாயிலுள்ள டாடா ஆய்வு மையத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்கா 62, இந்திய மற்றும் பாகிஸ்தானிய கூட்டுத் திட்டங்களை தற்போது ரத்துச் செய்துள்ளது.

## தென் அமெரிக்கா

# தென் அமெரிக்கா அமைதிப் பிராந்தியம்

## தலைவர்கள் பிரகடனம்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தென் அமெரிக்க நாடுகளின் தலைவர்கள் கடந்த வெள்ளியன்று ஆர்ஜன்ரீனாவின் தென் பகுதி தீவான தியரா டெல் புவேகோ ஒரு நாள் மாநாடு ஒன்றைக் கூட்டினர். இம் மாநாட்டில் ஆர்ஜன்ரீனா, பிறேசில், பராகுவே, உருகுவே மற்றும் பொலிவியா, சிலி போன்ற நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

'MERCOSUR' வர்த்தக கூட்டமைப்பினைச் சேர்ந்த இவ் ஆறு நாடுகளின் தலைவர்கள் தமது பிராந்தியம் அமைதிப் பிராந்தியம் என்றும், இறைவனின் கிருபை எமக்குக் கிட்டுமானால் நாம் இன்று எடுத்துள்ள முடிவின்படி 2005ம் ஆண்டிலே தென் அமெரிக்கா முழுமையான ஓர் அமைதிப் பிராந்தியமாக மாறிவிடும் என நாம் எதிர்பார்க்கிறோம் என்றனர். ஆர்ஜன்ரீனாத் தலைவர் கார்லோஸ் மெனமே தற்போது தென் அமெரிக்க வர்த்தகக் கூட்டமைப்பின் தலைவராக உள்ளார். இவர் இப் பிராந்தியம் அணுவாயுதம் அற்ற ஓர் பிராந்தியமாகவே தொடர்ந்தும் இருந்து வருகிறது. இதனை தொடர்ந்தும் காப்பாற்றிக் கொள்ளவே நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றார்.

இம் மாநாட்டிற்கு பிரதம விருந்தினராக தென்னாபிரிக்கத் தலைவர் நெல்சன் மண்டேலா அழைக்கப்பட்டிருந்தார். ஆர்ஜன்ரீனாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அதிபர் அந் நாட்டின் ஜனாதிபதி கார்லோஸ் மெனம் இன் அழைப்பை ஏற்று இச் சர்வ மகாநாட்டில் கலந்து கொண்டார். அங்கு அவர் பேசுகையில் இலத்தீன் அமெரிக்கத் தலைவர்கள் ஆபிரிக்க தலைவர்களுடன் ஒன்றிணைந்து புதிய உலக ஒழுங்கு ஒன்றினை ஏற்படுத்த வேண்டும் என்றும், வறுமை, பாதுகாப்பின்மை மற்றும் நோய்வாய்ப்பு போன்றவற்றிற்கு எதிராக போராட வேண்டும் என்றும் கோரிக் கொண்டார். அவர் தனது பேச்சில் மேலும் அபிவிருத்தியடையும் நாடுகள் ஒன்றிணைந்து ஐ.நா. சபையில் தமது செல்வாக்கை அதிகரிக்க வேண்டும் என்றும், தற்போது முழு உலகத்தாலும் ஏற்றுக் கொள்ளப்படும் விடயங்களை சில சக்திகள் தமது ஆதிக்கத்தினால் மழுங்கடிக்கின்றன. அது நிறுத்தப்பட வேண்டும் எனவும் கூறினார்.

சிவாசினி வாகன சேவை
Chivashini Transport
வாகன தேவைகளுக்கு 24 மணி சேவை
தொடர்புகட்கு: ஜெயா
0614616984 / 0611289118 /
0614424117 / 01 42 05 44 04
டிஸ்னி றெஸ்ரோறன்ட்


## சீனா

# அரச எதிர்ப்பாளர்கள் நால்வர் சீனாவில் கைது

அமெரிக்க அதிபர் பில் கிளின்டன் சீனாவிற்கு வந்து சென்றதன் பின் சில ஏராளமான அரச எதிர்ப்பாளர்கள் கைதுசெய்யப்பட்டு வருகின்றனர். இந்த வகையில் கடந்த சனியன்று நான்குபேர் சீனாவின் வடக்கில் கனான் மாகாணத்தில் சியான்ஜான் நகரில் வைத்து கைதுசெய்யப்பட்டதாக ஹொங்கொங் மனித உரிமை அமைப்பு கடந்த சனியன்று அறிவித்துள்ளது.

இவர்கள் கடந்த புதனன்று கைது செய்யப்பட்டு குற்றவியல் தடுப்புக்காவலில் இருக்கும் தொழிலாளர் சார்பு செயற்பாட்டாளர் ஒருவரின் விடுதலைக்காக அரசின் மேல் அழுத்தம் பிரயோகிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததான ஆவணங்களை பெற்றுக்கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டனர். இவர்கள் 14 கனான் பிராந்திய தொழிலாளர் செயற்பாட்டாளர்களுடன் கூடிப் புதிய அரசியல் பிரிவு ஒன்றினை அமைத்து தொழிலாளர் நலன்களை பேணும் பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தனர்.

இக் கலந்துரையாடலை ஏற்பாடு செய்தவரை கடந்த 11ம் திகதி சீனப் பொலிசார் கைது செய்தனர். கடந்த 6ம் திகதி தொடக்கம் இதுவரையான காலப் பகுதியில் 21 பேர் இவ்வாறாக கைதுசெய்யப்பட்டுள்ளனராகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செச்சினியா

# செச்சினிய ஜனாதிபதி மீது குண்டுத்தாக்குதல் முன்னாள் ஜனாதிபதிமேல் குற்றச்சாட்டு

ரஷ்யக் கூட்டமைப்பின் முன்னாள் அங்கத்துவ நாடான செச்சினியாவின் ஜனாதிபதி கடந்த வியாழனன்று குண்டுத் தாக்குதல் ஒன்றிலிருந்து உயிர் தப்பினார். இவர் இக் குண்டுத் தாக்குதலில் படுகாயமடைந்ததாக ரஷ்யத் தொலைக்காட்சி அறிவித்தபோதிலும் கடந்த வெள்ளியன்று பத்திரிகையாளர் முன் தோன்றினார். அப்போது அவர் தனது உயிருக்கு இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட இக் குண்டுத் தாக்குதலானது வெளிச்சக்தி ஒன்றின் ஆதரவுடன் உள்ளூர் குழுவொன்றினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக் கூறினார்.

இதேவேளை ஜனாதிபதி அஸ்லான் மஸ்காடோவ் மீதான இக் குண்டுத் தாக்குதலுக்கு சூத்திரதாரி எனக் குற்றஞ்சாட்டி அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி நீதி மன்றத்திற்கு வரவழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.



செச்சினியத் தலைநகர் குரோஸ்னியில் இஸ்லாமிய ஷரியா முறையிலான நீதி மன்றத்தில் ஆஜரான அவர் தனக்கும் இக் கொலை முயற்சிக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென்றும் அப்படியான ஒரு நோக்கமே தனக்கு இருக்கவில்லை என்றும் கூறினார்.

ரஷ்யப் படைகளுக்கும் செச்சினியப் படைகளுக்குமிடையே 21 மாதங்களாக தொடர்ந்த யுத்தத்தின் இறுதியில் அந்நாட்டின் தலைவர் ஜோகர் டுடாயேவ் ரஷ்யப் படைகளின் விமானத் தாக்குதலினால் கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து 1996ம் ஆண்டு ஏப்ரல் மாதம் பிரபல அரசியல்வாதியும் கவிஞருமான செலிம்கான் யென்டர்பயெவ் செச்சினியாவின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றார். அச்சமயம் ரஷ்யப் படைகளுடன் மோதிக்கொண்டிருந்த செச்சினிய இராணுவத்தின் தளபதியாக அஸ்லான் மஸ்காடோவ் பணியாற்றினார்.

ரஷ்யப் படைகள் வெளியேறிய பின்னர் கடந்த வருடம் ஜனவரியில் அங்கு நடந்த ஜனாதிபதி தேர்தலில் மஸ்காடோவ் போட்டியிட்டு அன்றைய ஜனாதிபதி யென்டர்பயெவ்வைத் தோற்கடித்து புதிய ஜனாதிபதியானார்.

மஸ்காடோவ் பதவியேற்ற பின் கடந்த 13ம் திகதி குடேர்மஸ் நகரில் இஸ்லாமியவாதிகளும் படையினரும் மோதிக்கொண்டதில் 9 பேர் இறந்தனர். இதைத் தொடர்ந்து இஸ்லாமிய மதப் பிரிவொன்றின் கடும்போக்குக்கொண்ட வஹாபி பிரிவினரைக்கொண்ட இராணுவப் படைப்பிரிவை கலைத்து அதன் தளபதிகளை வேலை நீக்கம் செய்திருந்தார். இந்த வஹாபியிசம் என்பது மத்திய கிழக்கிலிருந்து கொண்டு வரப்பட்டதாகும். சவூதிஅரேபிய அரச குடும்பத்தினரும் இதனையே பின்பற்றுகிறார்கள். இங்கு செச்சினியாவிலும் வெளிநாடொன்றின் உதவியுடனேயே இது இயங்குகிறது எனச் சொல்லப்படுகிறது. இந்த மதப் பிரிவு இராணுவ அணி கலைக்கப்பட்டதால் தோன்றிய முரண்பாடுகளே ஜனாதிபதியின் கொலை முயற்சிக்கான காரணம் என நம்பப்படுகின்றது.

## சேர்பியா

# கொசோவோவில் அமைதி முயற்சிகளுக்கு நடுவே கடும் மோதல்கள்

பல மாதங்களாக சேர்பியாவின் ஓர் பிராந்தியமாவ கொசோவோ மாநிலத்தில் பெரும்பான்மை மக்களான அல்பேனிய சமூகத்திற்கும் யூகோஸ்லாவிய கூட்டமைப்பின் சேர்பிய இராணுவத்திற்குமிடையே மோதல்கள்



தொடர்ந்தவண்ணம் உள்ளன. இதனை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சியில் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் முயற்சிகளை மேற்கொள்கின்ற வேளை கடந்த சனியன்று கொசோவோ விடுதலை இராணுவத்திற்கும் சேர்பிய பொலிஸ் மற்றும் யூகோஸ்லாவிய இராணுவ அணிகளிற்கிடையே கடுமையான மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இம் மோதல்கள் இன்றுவரை தொடருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சேர்பியாவின் இராணுவ, பொலிஸ் அணிகள் கொசோவோ மாகாண தலைநகர் பிரிஸ்டினாவிற்கு 25 கிலோ மீற்றர்கள் தென்மேற்காக அமைந்துள்ள கிலோவோ கிராமப் பகுதியில் கொசோவோ விடுதலை இராணுவ போராளிகளால் தாக்கப்பட்டன. இதைத்தொடர்ந்து யூகோஸ்லாவிய இராணுவ அணியொன்றும் இதே இடத்தில் வைத்து தாக்குதலுக்குள்ளாகியது. பின்னர் தாங்கிகள் கவச வாகனங்கள் சகிதம் முன்னேறிய யூகோஸ்லாவிய இராணுவம் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டன. இறுதியாக இப் பகுதியில் அல்பேனிய சமூக மக்களின் வீடுகள் தீ வைக்கப்பட்டுள்ளன என கொசோவோ செய்தி நிறுவனமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இப் பிராந்தியத்தின் இரண்டு மில்லியன் மக்களில் 90 வீதமானோர் அல்பேனியாவிலிருந்து நீண்ட காலத்திற்கு முன் இடம் பெயர்ந்த இஸ்லாமிய சமூகத்தினரே. இவர்களில் பெரும்பான்மையானோர் சேர்பியாவிடமிருந்து விடுதலை பெற்றுக் கொள்ளவே விரும்புகின்றனர். ஆனால் கொசோவோவிற்கு சுயாட்சி ரீதியிலான தீர்வு ஒன்றினை வழங்கவே சேர்பியா இணக்கம் தெரிவித்துள்ளது. இது போன்றதோர் தீர்வினைத்தான் ஐரோப்பிய ஒன்றியமும் முன்வைத்துள்ளது. இதற்கிடையே அமெரிக்க விசேட தூதுவர் கிறிஸ்தோபர் ஹில் கடந்த வெள்ளியன்று கொசோவோ அல்பேனிய மிதவாதத் தலைவரான இப்ராஹிம் ருகோவாவைச் சந்தித்து போர் நிறுத்தம் ஒன்றினையும் பிரகடனம் செய்து சேர்பியாவுடன் பேச்சுக்களில் ஈடுபடும் வழிவகைகள் பற்றி ஆராய்ந்தார். ஆனால் கொசோவோ விடுதலை இராணுவம் இப்ராஹிம் ருகோவாவின் தலைமையையோ மத்தியஸ்தத்தையோ இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

கடந்த இரு மாதங்களாக இப் பிராந்தியத்தில் நடக்கும் மோதல்களால் 300 இற்கும் அதிகமானோர் இறந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் வீடுவாசல்களைத் துறந்து அல்பேனியாவிற்குள் இடம்பெயர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரான்

# தெஹெறான் மேயருக்கு ஈரான் ஜனாதிபதி பகிரங்க ஆதரவு

ஈரானிய ஜனாதிபதி முகமட் கட்டாமி மீண்டும் தனது பகிரங்க ஆதரவை சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனையை அனுபவிக்கும் செல்வாக்கு மிக்க தெஹெறான் நகர மேயரான கார்பாஷிக்கு தெரிவித்துள்ளார். திரு கார்பாஷி அவர்கள் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டின்பேரில் விசாரிக்கப்பட்டு கடந்த வியாழனன்று ஐந்து வருட சிறைத் தண்டனையும், 20 வருட அரச உத்தியோக பிரவேசத் தடையையும் தண்டனையாகப் பெற்றுக்கொண்டார்.

குலாம்ஹுசைன் கார்பாஷி மிதபோக்குக் கொள்கைகளைக் கொண்டவர். இவர் பிரபல வர்த்தகர்களினதும், தொழில் நுட்ப வல்லுநர்களினதும் செல்வாக்கினைப் பெற்றவர். இவரது 9 வருட பதவிக் காலத்திலே ஈரானியத் தலைநகர் தெஹெறான் புதுப் பொலிவினைப் பெற்றுக்கொண்டது என்பது இவரது அயராத உழைப்பை தலைமைகளின் [illegible] நிலையிலிருந்து அறியக்கூடியதாய் உள்ளது என ஈரானியத் தலைவர் கட்டாமி தெரிவித்தார்.

திரு. கார்பாஷிக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனையை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் மீள் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக அவரது வழக்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர் மீது விதிக்கப்பட்டுள்ள இத் தீர்ப்பானது, உயர் நீதிமன்றத்திலோ அல்லது உயர் தலைவரான அயதுல்லா அலி கமேனியினாலோ மாற்றப்படலாம். இதேவேளை கடந்த திங்களன்று கட்டாமியின் அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிகள் புதிய உள்துறை அமைச்சரை நியமிக்கும் வேளையில் கார்பாஷிக்கு பகிரங்க ஆதரவினைத் தெரிவித்ததும் குறிப்பிடத்தக்கது.

## பங்களாதேஷ்

# வெள்ளப் பெருக்கினால் நூற்றுக்கு மேற்பட்டோர் மரணம்

பங்களாதேஷ் சென்ற பத்து வருட காலத்தில் கடந்த இரண்டு வாரங்களில் பெய்த மிகக் கடுமையான மழையினாலும், வெள்ளப்பெருக்கினாலும் மிகப் பாரிய உயிர் உடமை இழப்புக்களை சந்தித்துள்ளது. இம்முறை பெய்த பருவமழையினால் நாட்டின் அரைவாசிப் பகுதி வெள்ளத்தினால் சேதமுற்று போயுள்ளது என்றும், இரண்டு வாரங்களில் மாத்திரம் நூற்றுக்கும் அதிகமானோர் இறந்துபோயுள்ளனர் என நிவாரண உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இம்முறை கங்கை, ஜமுனா, மேக்னா நதிகள் அணைகளை உடைத்து மக்கள் வாழும் பகுதிகளில் பாய்ந்ததினால் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளை பிரதமர் ஷேக் ஹசினா உலங்குவானூர்தியில் சென்று பார்வையிட்டார். இம்முறை தென்மேற்கு மாவட்டமான கொமில்லாப் பகுதியே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இப் பகுதியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் நிவாரண உதவிக்காக காத்திருந்தனர்.

பிரதமரின் பத்திரிகைத்துறை செயலாளர் ஜுனைதுல் கரீம் கடந்த வெள்ளியன்று வெளியிட்ட ஓர் அறிக்கையில் இதுவரை 750,000 மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந் நிலை தொடர்ந்தால் நிலைமை மோசமாகிவிடும் எனத் தெரிவித்தார். ஆனால் இதுவரை பங்களாதேஷ் சர்வதேச உதவியை கோரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பங்களாதேஷில் வெள்ளப் பெருக்கினால் வருடா வருடம் நூற்றுக் கணக்கான மக்கள் பலியாவது வழக்கம்.

1988ம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் 1000 மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். எதிர்வரும் செப்டம்பர் மாதம் பங்களாதேஷ் மற்றுமோர் பாரிய வெள்ளப் பெருக்கினை எதிர்கொள்ளும் என்றும் இதற்கான தயார் நடவடிக்கைகளில் அரசும், உதவி வழங்கும் நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் — ஜேர்மனிக்கிளை

நடாத்தும்

# புனர்வாழ்வுக் கலைத் தென்றல்



**நிகழ்ச்சி நிரல்**

★ அமைதியாக்கம்
★ வரவேற்புரை
★ விடுதலை நடனங்கள்
தமிழாலய மாணவரின்
★ கலைப் படைப்புக்கள்
விகடவிற்பனர் ஐசாக் இன்பராஜா
கேதீஸ்வரன் குழுவினர் வழங்கும்
★ நகைச்சுவைக் கதம்பம்
தமிழீழ இசைக்குழுவின்
★ பாச இசைமழை
கலைபண்பாட்டுக்கழக நடன ஆசிரியை
சாவித்திரி இமானுவேல் அவர்களின் நடன
வடிவமைப்பில், அவரது மாணவர் வழங்கும்
★ நாட்டிய நாடகம்
★ வெற்றி நிச்சயம் நன்றியுரை

**BURGERSAALES ZUR POST**
**Kirchenplatz 1, 85540 Haar**
**காலம்: 01.08.1998 சனிக்கிழமை 16.30 மணி**

வெடித்த போர்
அனர்த்தமெல்லாம்
அழுத்தமாய் எமது
மண்ணின்
மக்களில் வீழ்ந்திடாமல்
ஒத்தடம் போட்டுக்
காப்போம்




பாசத்தை பொழிவோம்! பங்களித்து மகிழ்வோம்!!



பிராங்பேர்பட் மாநகரில்

# ஆதவா

## ஆசியா சென்ரர்



**தங்க மாளிகை**

- ஜவுளியகம், நூலகம்
- விமானப் பயணச் சீட்டுக்கள்
- வீடியோ ஓடியோ விஷன்
- எவர் சில்வர் பாத்திரங்கள்
- மளிகைப் பொருட்கள்
- மரக்கறி வகைகள்
- கடலுணவுப் பொருட்கள்
- தொலைபேசி அட்டைகள்
- அன்பளிப்பு - அலங்காரப் பொருட்கள்

உங்கள் அனைத்துத் தேவைகளையும் ஒரே இடத்தில் மன நிறைவுடன் பூர்த்தி செய்ய நாடவேண்டிய ஒரே இடம்.

**Adavaa Asiya Centar**

Taunusstr. 19, 60329 Frankfurt/Main
Tel: 069/250361 + 250362 / Fax: 069/234045
Travels - 069/92919139

நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதம்



பிரித்தானியாவில் ஆரம்பமாகிவிட்டது

# GNANAM Telecom Centers




| | |
|---|---|
| *சிறீலங்கா | - 1min - 0.35p |
| *இந்தியா | - 1min - 0.30p |
| கனடா | - 1min - 0.05p |
| அமெரிக்கா | - 1min - 0.05p |
| ஜேர்மனி | - 1min - 6p |
| பிரான்ஸ் | - 1min - 0.06p |

| | |
|---|---|
| லண்டன் Mobile | - 1min- 0.15p |
| லண்டன் National | - 1min- 0.03p |
| அவுஸ்திரேலியா | - 1min- 0.08p |
| சிங்கப்பூர் | - 1min- 0.20p |
| சுவிற்சர்லாந்து | - 1min- 0.08p |

வர்த்தகர்களுக்கு விசேட கழிவு உண்டு. கீழ்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்

# GNANAM Telecom Centers

180 High Street North,
East Ham, London E6, U.K.
Tel: 0181-4708844 Fax: 0181-4708777

* இரவு 6 மணி முதல் காலை 7 மணி வரை

பாரிசில் மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஞானம் தொலைபேசி அட்டைகளை இப்பொழுது லண்டனில் சகல வணிக நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.



ஈழமுரசு
Eelamurasu Weekly
"உண்மையின் முன்னால் நடுநிலைமை என்பது இல்லை"

# தொடர்கின்ற துயரங்கள்

1983 ஜூலையில் இடம்பெற்ற தமிழினப் படுகொலை, 1995 ஜூலையில் இடம் பெற்ற நவாலிப் படுகொலை, 1996 ஜூலையில் இடம்பெற்ற நாகர் கோவில் படுகொலை என்பவற்றால் தமிழ் மக்களுடைய மனதில் 'கறுப்பு மாதமாக' இடம்பெற்றுவிட்ட ஜூலை மாதம், இவ்வாண்டில் மற்றொரு துயர வரலாற்றைப் பதிவாக்கியுள்ளது.

உலகெங்குமுள்ள தமிழர்கள் 1983 கறுப்பு ஜூலையில் 15-வது ஆண்டை நினைவு கூர்ந்து கொண்டிருந்த நேரத்தில் தமிழீழத்திலிருந்து தங்கள் உயிரைக் காத்துக்கொள்ள தமிழகம் சென்ற 45 தமிழர்கள் இராமேஸ்வரம் கடலில் மூழ்கிப் பலியான துயரச் செய்தி வெளிவந்திருக்கிறது.

வியட்நாமிய மக்களுக்கு அடுத்தபடியாக, ருவாண்டா மக்களுக்கு அடுத்த படியாக தங்கள் உயிரைக் காத்துக்கொள்ள புகலிடம் தேடி ஓடிய மக்கள் நீர் மூழ்கிப் பலியாவது ஒரு தொடர் கதையாக நடப்பது தமிழ் மக்களுக்கே என்று சொல்லக்கூடிய அளவு நிலைமை உள்ளது.

ஒரு மனிதன் தன்னுடைய தாய் நாட்டில் வாழ்வதற்கு அச்சுறுத்தல் ஏற்படும் சூழ்நிலையில் அந்த அச்சுறுத்தல் தனது அரசாங்கத்தால் ஏற்படும் சூழ் நிலையில் தனது உயிரைக் காத்துக் கொள்ள இன்னொரு நாட்டில் சென்று அரசியல் தஞ்சம் கோரலாம் என்று சொல்கிறது ஜெனிவா உடன்படிக்கை எனப்படும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சாசனம்.

ஆனால் அந்த மனிதன் உயிரைக் காத்துக்கொள்ள தப்பிச் செல்லும் சூழ்நிலையில் அந்தத் தப்பித்தல் முயற்சிகளின் போது ஏற்படும் உயிராபத்துக்களைத் தடுப்பதற்கு எந்த உடன்படிக்கையும் எந்தச் சாசனமும் இல்லை.

பொருளாதாரக் காரணங்களுக்காக தங்கள் தாய் நாட்டிலிருந்து தப்பிச் செல்லும் ஒரு சிலரைத் தவிர அரசியல் காரணங்கள் மற்றும் யுத்தச் சூழ்நிலைகளால் தப்பிச் செல்லும் ஒரு சிலரைத் தவிர அரசியல் காரணங்கள் மற்றும் யுத்தச் சூழ்நிலைகளால் தப்பிச் செல்லும் மக்கள் தங்கள் உயிரைக் காத்துக் கொள்ளவேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காகவே செல்கின்றார்கள்.

இந்தியா உட்பட பல நாடுகள் இந்த மக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அடைக்கலம் கொடுத்த போதிலும் மேலும் அகதிகள் வராமல் தடுப்பதற்கும் பல கட்டுப்பாடுகளையும் விதித்திருக்கின்றார்கள். எந்த ஒரு நாட்டுக்கும் தன்னுடைய நாட்டுக்குள் இன்னொரு நாட்டவர் சட்டவிரோதமாக குடியேறுவதைத் தடுப்பதற்குரிய சட்டங்களை இயற்றுவதற்கும், அதை கடுமையாக அமுல்படுத்துவதற்கும் உரிமையுண்டு.

ஆனால் தங்கள் உயிரைக் காத்துக்கொள்ள அடைக்கலம் தேடிவரும் அகதிகளையும் சட்டவிரோத குடியேற்றக்காரர்களையும் ஒரே பார்வையில் வைத்துப் பார்ப்பது மனிதாபிமானமற்றது.

ஈழத் தமிழ் அகதிகளைப் பொறுத்தவரை அவர்கள் தமிழகத்துக்கு தற்காலிகமாக புகலிடம் தேடியே செல்கின்றார்கள். அவர்களுக்கு அங்கே சட்டவிரோதமாகக் குடியேறும் எண்ணமோ - வேறு பொருளாதாரக் காரணமோ கிடையாது. அவர்களது ஒரே நோக்கம் தங்கள் உயிரைக் காத்துக்கொள்ள வேண்டும் என்பதே.

கடந்த காலத்தில் அகதிகளை ஏற்றி வருபவர்களின் படகுகளை பறிமுதல் செய்தல் அந்தப் படகுகளை செலுத்தி வருபவர்களுக்கு அபராதம் விதித்தல் அல்லது அவர்களை சிறையில் அடைத்தல் முதலான நடவடிக்கைகளை இந்தியக் கடற்படையும், தமிழகக் காவல் துறையினரும் செய்து வந்ததால் இந்த தடைகளை மீறி தமிழகத்திற்கு வர எத்தனித்த முயற்சியிலே நூற்றுக் கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கடலில் மூழ்கி பலியாகியிருக்கின்றார்கள்.

தற்போது மத்தியில் ஆட்சியில் இருக்கும் பாரதிய ஜனதாக் கட்சி கூட்டணி அரசு ஈழத் தமிழ் மக்களுடைய துயரங்களை நன்கு அறிந்த அரசு. குறிப்பாக ஈழத் தமிழ் மக்களின் அவலத்தைப் பற்றி மிக நன்றாக அறிந்த இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஈழத் தமிழ் மக்கள் தமிழகத்திற்கு அகதிகளாக வருவதற்கு காரணமாக இருக்கும் பொருளாதாரத் தடையை நீக்குவதோடு தமிழ்மக்கள் மீது அது பிரகடனப்படுத்தியிருக்கும் யுத்தத்தையும் நிறுத்துமாறு சிறிலங்கா அரசை நிர்ப்பந்திக்க வேண்டும் என்பதே புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் அனைவரினதும் ஒட்டுமொத்த விருப்பமாகும்.

# போர் என்றால் போர்

## பார்வை

மீசுவாகில் இடம்பெற்ற பொதுநலவாய மாநாடு ஒன்றில் சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா தனது அப்பட்டமான இனவெறி போர் ஓலத்தை மீள எழுப்பியுள்ளார். 'போர் என்றால் போர்' என்ற ஜெயவர்த்தனாவின் சிங்கள மேலாதிக்க போர் ஓலம் சந்திரிகாவின் வார்த்தைகள் ஊடாக மீள பிரதிபலித்துள்ளது. 30% தேசிய வருமானத்தை செலவுசெய்து முப்படைகளை இரட்டிப்பாக்கி தனது அரச போரை தொடர்ந்து வருவதாக சிங்கள மக்களிடம் பெருமிதமாக சந்திரிகா தம்பட்டம் அடித்துள்ளார். கறுப்பு ஜூலை அனுட்டிக்கப்படும் நாட்களில் இனவெறி ஆட்சியாளர்களுக்கே உரிய திமிருடன் தமிழர்கள் மீதான போரை வெளிப்படையாகச் சொல்வது இலங்கைத் தீவின் இரு தேசங்களும் பிரிந்தே ஆக வேண்டும் என்பதை எதுவித சந்தேகங்களுமின்றி மீள உறுதிப்படுத்துகின்றது.

இன்று தமிழ் தேசம் மீதான போர் என்பதே சிங்கள ஆட்சி அமைப்பின் பிரதான குவிமையமான தீர்மானமாகும்.

247, 500 படையினரைக் கொண்ட சிங்கள இராணுவ பலத்தின் (முப்படைகளும் பொலிசாரும் உள்ளடங்கியது) பெரும் பகுதி தமிழீழ தாயகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஜெயசிக்குறுய் சமருக்கு சுமார் 64.000 படையினர் (53– 54– 55– 56 பிரிவுகள், விசேட அதிரடிப்படையினர், பொலிசார்) ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். தமிழீழ தேசம் மீதான இப் பாரிய ஆக்கிரமிப்புக்கு சிங்கள தேசத்தின் இனவெறி அரசியல் மட்டுமல்ல பொருளாதார பண்பாட்டு தளங்களும் பக்கமாக இருக்கின்றன.

போர் என்பது தனித்த ஒரு இராணுவ விடயமல்ல. போர்புரியும் தேசத்தை- மக்கள் சமூகத்தை இது பொருளாதாரத்தினால் பாதிக்கின்றது. பண்பாட்டு மாற்றங்களை தூண்டிவிடுகின்றது. சிங்கள தேசம் போன்று நீண்டகாலம் ஆக்கிரமிப்பு போரை நடாத்தும் தேசங்கள் இப் பாதிப்புகளை பெரிய அளவில் சுமந்தே ஆகவேண்டும்.

1996-ம் ஆண்டு 165 பில்லியன் ரூபாய்கள் போருக்காக (நேரடி மற்றும் மறைமுக செலவினம்) சிங்கள தேசத்தினால் செலவிடப்பட்டுள்ளது. சிறிலங்காவின் மிகப்பெரிய அபிவிருத்தித் திட்டமான (?) மகாவலி திட்டத்திற்கு செலவிடப்பட்டதிலும் 6 மடங்கு பெரிய செலவினம் இது ஆகும். உலகின் வளர்முகநாடுகளின் பாதுகாப்புச் செலவினங்கள் அந்நாடுகளின் தேசிய உற்பத்தியில் 3.1% அதிகரிப்பை சராசரியாகக் கொண்டுள்ள வேளையில் உத்தியோகபூர்வ கணிப்புக்களில் சிறிலங்காவின் இராணுவ செலவினம் தேசிய உற்பத்தியில் 4.4% அதிகரிப்பைப்பெற்றுள்ளது. உண்மையான கணிப்புக்களில் இது இன்னமும் அதிகரித்தே காணப்படும்.

இன்று போர் ஒரு முக்கியத்துவம் மிக்க நிலையினை அடைந்துள்ளது. சிங்கள அரசின் 'ஜெயசிக்குறுய்' (வெற்றி நிச்சயம்) போர் நடவடிக்கை அமைந்துள்ள தாப்பாலை என வர்ணிக்கப்படும் முக்கியத்துவத்தை பெற்றுள்ளது. யாழ். குடா மீதான ஆக்கிரமிப்பு, மன்னார் வரையிலான நடவடிக்கை, சத்ஜெய நடவடிக்கை ஆகியவற்றை தந்திரோபாய ரீதியாக கையாண்ட தமிழர் தேசம், ஜெயசிக்குறுவை தாய்ச்சமராக கருதி முழுமையான முக்கியத்துவமான எதிர்ப்பை அதற்கு கொடுத்துவருகின்றது. இந்தப் போரை வென்றெடுப்பதற்கு ஆதாரமாக அமையப்போவது பலம்மிக்க தமிழர் இராணுவமும், அதனை பலப்படுத்தி நிற்கும் மக்கள் எழுச்சியுமே ஆகும்.

பலம்மிக்க இராணுவம் என்பது முழுமையான மரபுரீதியான போரை எதிர்கொண்டு தோற்கடிக்கத் தக்க ஆற்றலுள்ள தமிழர் இராணுவத்தையே குறிக்கின்றது. இன்று ஜெயசிக்குறுய் சமரில் சுமார் 18 படைப் பிரிவுகளை விடுதலைப் புலிகள் போரில் ஈடுபடுத்தியுள்ளனர். கடல்-தரைப் போரை நடாத்தக்கூடிய சிறுத்தை படையணி; பல சமர்களைக் கண்ட சார்ள்ஸ் அன்ரனி படையணி போன்ற பிரிவுகள் முழுமையான மரபுரீதியான சமரை நடாத்தும் ஆற்றலைக் கொண்ட அணிகளாக உருவாகியுள்ளன. கேணல் கிட்டு பீரங்கி படையணி தமிழர் இராணுவ வரலாற்றில் உருவான முதலாவது முழுமையான பீரங்கி படைப் பிரிவாகும். ஜெயசிக்குறுய் நகர்வை எதிர்த்து நின்று போராடும் புலிகளின் நடவடிக்கைக்கு முதுகெலும்பாக இது திகழ்கின்றது. விக்டர் கவச எதிர்ப்பு அணி புலிகளின் இராணுவ முதிர்வில் பிரசவமாகியுள்ள முக்கியத்துவம் மிக்க போர்ப்பிரிவாகும். சிறிலங்கா இராணுவத்தின் பிரதான பலமாகத் திகழும் டாங்கி படைப்பிரிவுகளை அழிக்கும் புலிகளின் பிரிவாக இது உருவாகியுள்ளது.


இன்று தமிழர்கள் முழுமையான போருக்கு தயாராகிவிட்டனர். ஜெயவர்த்தனா 'போர் என்றால் போர்' என கூறியபோது தமிழர்கள் வெறும் சிறு கெரில்லா அணியொன்றைக் கொண்ட விடுதலை இயக்கமாக திகழ்ந்தனர். இன்று சந்திரிகா 'போர் என்றால் போர்' என கூறுகின்றபோது தமிழர்கள் உட்கட்டுமானங்களைக் கொண்ட விடுதலை இயக்கமாக வளர்ச்சியடைந்துள்ளனர்.

இப்போரை வெல்லுவதற்கு தனது தேசியத்தை முழுமையாக சிங்கள இனவாதம் பாவிக்க தொடங்கியுள்ளது. அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் வாழும் சிங்களவர்கள் தமது தேசியத்தின் ஒடுக்குமுறைப் போரை நியாயப்படுத்தி போரை வெல்ல முயல்கின்றனர். சிங்கள இடதுசாரிகளும், வலதுசாரிகளும் போரை பல்வேறு கோட்பாடுகள் ஊடாக நியாயப்படுத்த துடிக்கின்றனர்.

தமிழ் தேசியம் இன்று முன்னைய பதிலும் உறுதியாக தமிழீழ விடுதலையை ஆதரிக்கின்றது. சிறிலங்காவின் முழுமையான இராணுவத்தின் அழுத்தங்களின் மத்தியிலும் எல்லைகளை தாண்டி தமிழ் தேசியம் போரை வென்று தமிழீழ தேசத்தை மீட்க துடிக்கின்றது.

சிங்கள தேசியத்தின் தளம் ஒடுக்குமுறையாகவும் தமிழ் தேசியத்தின் தளம் விடுதலைக்கான வேட்கையாகவும் உள்ளதால் இறுதியில் வெல்லப்போவது தமிழர் தேசியமே!

— ராஜா



சிறு கதை

# புதிரான ஒரு கொலை

என்றும் போல அன்றும் ஒரு நாள். நெப்டியூன் மூட்டையிலிருந்து மெல்லமே வெளிவந்தது போல, இரண்டு இளைஞர்கள் சாதாரண இளைஞர்கள். அவர்களது பெயர் அப்படியொன்றும் புதுமையானது அல்ல.

அவர்கள் சந்தோஷ் மற்றும் நரேந்திரா.

சந்தோஷ் கடவுள் பக்தி மிக்கவன், பொய் சொல்லமாட்டான். ஒடிசலான தேகம், கல்யாணமும் ஆனவன், ஏதேனும் வியாபாரத்தில் ஈடுபடவேண்டும் என்றிருக்கிறான். கருவாடு கடித்துக்கொண்டு கஞ்சி குடித்து வந்திருக்கிறான். நரேந்திரா சந்தோஷைவிடச் சின்னவன். நிறையக் குடிக்கிறான். மணமாகாதவன், அறிவியல் வல்லவன், விட்டுவிட்டுப் பேசுவான். நேற்றிரவின் மிஸ்விட்டுப்போன சப்பாத்தியையும் காய்கறியும் தின்றுவிட்டு வந்திருக்கிறான்.

அவர்கள் தங்கள் பைக்கிளின் மீது உட்கார்ந்து கிரிக்கட்டைப் பற்றி, ஸ்கூட்டர் ஓட்டும் பெண்ணைப் பற்றி, கல்கத்தாவிலிருந்து திரும்பிவரும் ஒரு மூட்டைப்பூச்சியைப் பற்றி, அப்பவும் பெற்ற பள்ளிக்கூட ஆசிரியரின் நாற்றம் பற்றி பேசினார்கள், சிரித்தார்கள், அவர்களுக்கே சலிப்பாயிருந்தது. அப்போது காலை பத்துமணி.

ஊர்வலம் ஒன்று வந்தது. அவ்வளவு பெரிதானது அல்ல; கூட்டம் பெரிதாகத் தெரியட்டும் என்று இடைவெளி விட்டு மக்கள் நடந்தார்கள்; ஊர்வலத்திற்கு முன்னால் யாரோ கோஷம் எழுப்பினார்கள். சந்தோஷுக்கும் நரேந்திராவுக்கும் அது கேட்கவேயில்லை.

நரேந்திரா உறுதியாகச் சொன்னான் 'நான் சொல்கிறேன். அது ஒரு இடம். ஆந்திராவில் அல்லது தமிழ்நாட்டில்' தலைவனைப்போலிருந்தவன் 'நான் ஆந்திராவுக்கோ தமிழ் நாட்டுக்கோ போனதில்லை' என்றான்.

நகரத்தின் பெரிய மைதானத்திற்கு நீண்டுபோன ஊர்வலம், அதனுள்ளே சுருங்கிப் போயிற்று. யாரோ ஒருவர் பேசினார். சந்தோஷ் நரேந்திரனைத்தேடி, அவனைக் கண்டுபிடித்துச் சொன்னான். 'நம்மைவிட முட்டாள்தனமான, முட்டாள் எவனும் இருக்கமாட்டான்.'



நரேந்திரா சொன்னான். 'எனக்குப் பசிக்கிறது, உனக்கு?'

சூரியன் மேலே ஏறினான். வியர்த்துக்கொட்டியது. மக்கள் பேச்சுக்களைக் கவனிக்கவில்லை. புகைவண்டி போல வளையமிட்டு வார்த்தைகள் வானுக்கு ஏறி மறைந்தன.

நண்பர்கள் நகரத்தில் உள்ள நிஜமானதும், கற்பனையானதுமான உணவு விடுதிகளையும், தமது சொந்த ஊருக்கான்ற செல்வந்தர்களாயும் வேறு நகரத்தில் இருப்பவர்களையும் நினைத்துக்கொண்டு இன்னும் அதிகப் பசியடைந்தார்கள். சூரியன் இறங்கினான். களையின் நிழல் நீண்டன.

திடீரென்று அல்ல மெதுவாக, கூட்டத்து நடுவே ஒரு கலவரம் தோன்றி, நடுவே கல்லெறிந்தால் குளக்கரையை நோக்கிப் பெருகும் நீர் வளையம் போல, மங்கலான மைதான விளிம்புக்குத் தள்ளியது. இந்தக் கற்கள் யாருக்கும் சொந்தமானதல்ல புயலில் அலைகளைப் போல கூட்டம் சிதறியடிக்கப்பட்டது. நரேந்திராவின் கால் அருகே, ஒரு கல் வந்து விழுந்தது.

சந்தோஷ் நுணுக்கமாக அந்தக் கல்லை ஆராய்ந்தான். 'எந்த மண்டை மீதாவது இந்தக்கல் விழுந்திருந்தால் அது மூன்றாற்று ஏழாறு துண்டுகளாக சிதறியிருக்கும்' என்று சொன்னான்.

அந்த நேரம், கல்லைப் பிடித்துக்கொண்டிருந்த சந்தோஷின் இடது கரத்தை போலீஸ் லத்தி ஒன்று தட்டியது. போலீஸ்காரனைத் திட்டுவதற்கு அவன் திரும்பும் முன்பு, நரேந்திரா அவனை வெளியே இழுத்தான். அப்புறம், இரண்டு நண்பர்களும் ஓடினார்கள். அப்படி ஓடி அவர்கள் மார்க்கெட் பகுதியை அடைந்தார்கள். அவர்கள் பல நண்பர்களையும் தெரிந்தவர்களையும் சந்தித்தார்கள். யாரோ ஒருவர் டைக்ளஸ் எடுக்கச்சொன்னார். இன்னும் யாரோ, 'அவே பதிவை நம்பாதிங்க, ஹோமியோபதிக்கு போங்க, ஆர்னிகா 30 சாப்பிட்டால் சரியாகிப் போகும் என்றார். மற்றொருவர் மூலிகை மருத்துவத்தை சிபார்சு செய்தார். சந்தோஷ் இந்த மருத்துவங்களைப் பின்பற்றவில்லை. இரண்டு நண்பர்களும் வடை சாப்பிட்டார்கள். பஜாரில் இருந்த சினிமா போஸ்டர்களைப் பார்த்தார்கள். ஒரு இரும்புத்தடி ரோட்டில் கிடந்தது. நரேந்திரா அதை கையில் எடுத்தான்.

நெடுஞ்சாலையை விடுத்து இருவரும் ஒரு சந்தில் நுழைந்தார்கள். சந்தில் தெருவிளக்கு இல்லை. நெடுஞ்சாலை விளக்கிலிருந்து அடித்த கொஞ்சம் திருட்டு வெளிச்சம்தான். மங்கலான அந்த வெளிச்சத்தில், காக்கி உடுப்போடு ஒரு நபர் வந்து கொண்டிருப்பதை நண்பர்கள் பார்த்தார்கள்.

'போலீஸ்'. சந்தோஷ் முணுமுணுத்தான்.

'போலீஸ், நானும் அப்படித்தான் நினைக்கிறேன்' நரேந்திரா சேர்த்துகொண்டான். சந்தோஷ் கேட்டான், 'அவன்தானே இன்று என்னை அடித்தவன்?'

நரேந்திரா ஓடிப்போய், இரும்புத்தடியால் அந்த மனிதனை பின்னால் இருந்து தாக்கினான். அந்த மனிதன் மயக்கமுற்று விழுந்தான். இரண்டு நண்பர்களும் தங்கள் வீட்டுக்கு ஓடிப்போனார்கள்.

அடுத்த நாள்-

யாரோ ஒரு ஆள் ரோட்டில் நினைவற்று விழுந்து கிடக்கிறான் என்று, அநாமதேயத் தகவல் ஒன்று, போன் மூலமாக போலீசுக்கு கிடைத்தது. நினைவற்ற நிலையில் அவன் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டு அடையாளம் காணப்பட்டான். அவன் இறந்துபோய்விட்டதாக அங்கே கண்டுபிடித்தார்கள்.

அந்த மனிதனை திகம்பர் என்று அழைப்பார்கள். திகம்பர் ஒரு போலீஸ்காரன் அல்ல. உண்மையில், அவன் ஒரு அரசாங்க அலுவலகத்தில் கடை நிலை ஊழியன். அவனுக்கு பக்கமாய்த்தான் கல்யாணம் ஆயிற்று.

ஆண்டுதோறும் இந்தியாவில் நடப்பதுபோல, மற்ற முப்பதுபேரும் பெண்களைப் போல திகம்பரின் மனைவியும் தன் வளையலை உடைத்தாள், குங்குமத்தை அழித்தாள். அழுதாள், தொடர்ந்து அழுதாள். வண்ணத் துணிகளுக்குப் பதில் வெள்ளைக்கு மாறினாள். விதவை ஆனாள்.

ரொம்ப நாளைக்குப் பிறகு திகம்பரைக் கொன்றது யார் என்று ஒருவருக்கும் தெரியாது. ஒரு நாளிதழில் நடுப்பகுதியில் அந்தச் செய்தி வந்தபோது கூட அந்த நண்பர்கள் அந்தக் கொலையைப் பற்றி தெரிந்திருக்கவில்லை. இந்த இரண்டுபேரும் ஒருபோதும் செய்தித்தாள் படிப்பதில்லை. மேலும், விரிவான கவனமும் ஆராய்ச்சியும் தேவைப்படும் அளவிக்கு திகம்பரின் சாவு பெரியதல்ல. அவன் ஒரு ராஜாவோ சக்கரவர்த்தியோ அல்ல. இரண்டு நண்பர்களும் பாதையோரமாக சாத்தப்பட்டிருக்கும் சைக்கிளின் மீது, உட்கார்ந்து பொழுது போக்குவதைத் தொடர்ந்தார்கள். காரண காரியமற்று, நன்மையும் அற்று, அத்தகைய ஊர்வலங்களில் முட்டாள்தனமாக நடமாடுவார்கள். அப்படிப் பங்கேற்பதினால் யாருக்கு லாபம், யாருக்கு நட்டம் என்றுகூட அவர்களுக்குத் தெரியாது.

திகம்பரின் மனைவி பென்சன், கிராஜுயிட்டி, இன்சூரன்ஸ் கொஞ்சம் இழப்பீட்டுத் தொகை, அப்புறம் வாழ்க்கை முழுவதற்குமான விதவை கோலமும் பெற்றாள்.

ஒரிய மொழிச் சிறுகதை
மூலம்: சிசேகேந்திர பண்டா
தமிழில்-கவிஞர் தமிழ்நாடன்


## ஐரோப்பா தழுவிய குறும்பட போட்டி - 1998

**கலைஞர்களே!**

உங்கள் கமராக் கண்களைத் திறவுங்கள். எங்கள் முன்னால் விரிந்து கிடக்கும் எம்மவர் பற்றிய பிரச்சினைகளை படமாக்கிக் கொள்ளுங்கள். சமூகத்தைப் பற்றிய பார்வையும் எதிர்காலம் பற்றிய தெளிவும் உங்கள் குறும்படத்தில் பிரதிபலிக்கட்டும்.

**குறும்படப் போட்டியில் பங்குபற்றுபவர்களுக்கான விதிமுறைகள்**

1. இவ்வருட ஜூலை மாத இறுதிப் பகுதிக்குள் போட்டியில் பங்குபற்றும் அனைவரும் தங்களது விண்ணப்பங்களை தொலைபேசி மூலமாக பதிவு செய்து கொள்ளுங்கள்
2. குறும்படங்கள் எம்மை வந்து சேரவேண்டிய இறுதித் திகதி ஒக்ரோபர் 15 இற்கு முன்.
3. ஆக்க தளம் - புலம் பெயர் வாழ்வின் அவலங்களை வெளிப்படுத்துவதாக இருத்தல் விரும்பத்தக்கது.
4. திரைக்கதை, இசை, பாடல், நெறியாள்கை யாவும் சுயமானதாக இருத்தல் வேண்டும்.
5. இப்போட்டியில் கலைக்குழுக்களாகவோ, தனிநபர்களாகவோ கலந்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு: தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ் (01 43 58 11 42)



# பெண் பிள்ளைகளை உருவாக்குவதில் ஒரு தாயின் பங்கு

இங்கு புலம் பெயர்ந்து வாழும் எம் சமுதாயத்துக்கிடையில், நாளாந்த வாழ்க்கையில் ஏராளமான நடைமுறைப் பிரச்சினைகள் தோன்றிய வண்ணமே இருக்கிறது. இதற்குக் காரணம் தமிழீழத்தில் வாழ்ந்த கலாச்சார பண்பாடுகளின் மத்தியில் வளர்ந்த பெற்றோரும், அவர்களிடையே வளர்ந்துவரும் இங்குள்ள மேற்கத்தைய கலாச்சாரங்களோடு ஒன்று பட விரும்பும் குழந்தைகளின் விருப்பங்களும்தான்.

இன்று அநேக குடும்பங்களிலும் பெற்றோருக்கும் குழந்தைகளுக்குமிடையில் பெரியளவில் மனக்கசப்புகள் உருவாகுவதற்கு இவ் வேறுபட்ட கலாச்சாரம் முக்கியதொரு காரணியாக இருந்து வருகிறது. எனவே இதைத் தீர்க்க வளரும் இத் தலைமுறையினரும் அவர்களை வளர்த்துவரும் பெற்றோரும் பரஸ்பரம் பூரணமான புரிந்துணர்வொன்றைத் தமக்குள் கொள்ள வேண்டும்.

அதிலும் குழந்தைகளோடு அதிக நேரம் செலவிடும் தாய்மார்களே இந்தப் பிரச்சினையை வெல்லமையான அணுகுமுறையால் சீர்திருத்திக் கொள்ளல் வேண்டும். குறிப்பாக இங்கு உள்ள தாய்மார் ஆண் குழந்தையைவிட பெண் குழந்தையைத்தான் அதிகளவில் கட்டுப்படுத்திவிட வேண்டுமென நினைக்கிறார்கள். காரணம், ஒரு குடும்பத்தின் கௌரவம் பெண்பிள்ளை மூலம்தான் மற்றவர்களிடத்தே நிரூபிக்க வேண்டுமென்ற ஆதங்கந்தான்.

இப்படியான சிந்தனைகளிற்கு சில பெற்றோர்கள் விதிவிலக்காக இருந்தாலும் அநேகரின் விருப்பம் மேற்கூறப்பட்ட விதமாகவே காணப்படுகிறது. எனவே அதிக கட்டுப்பாடுகளால் சூழப்படும் பிள்ளையின் மனம் எப்போ இவர்களிடத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று எண்ணுமே தவிர, இதை என்ன காரணத்திற்காகத் தடை செய்கிறார்கள் என்று சிந்திக்க முற்படமாட்டார்கள்.


ஆகவே பெண்பிள்ளைகளிடையே தாய்மாரின் உறவென்பது நல்ல அன்பான தாய் மட்டுமல்லாமல் அனுசரணையான தோழியாகவும் இருக்க வேண்டும் அவர்களின் கல்வியோடு மட்டும் நில்லாது, சாதாரணமாக தம் பிள்ளைகள் நாளாந்தம் செய்யும் அனைத்து விடயங்களிலும் தாமும் கலந்து கொண்டு சிலசமயம் அவர்கள் விடும் தவறுகளை இதமான முறையில் சொல்லித் திருத்த வேண்டும். அதுமட்டுமல்லாமல் ஆழமான எமது பண்பாடுகளை எல்லாம் நிச்சயம் உங்கள் மகளும் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு. காரணம் கலாச்சாரங்கள் கொண்டிருக்கும் எல்லா முறைகளும் முற்றிலும் சரியானவை என்று சொல்ல முடியாது. அவற்றில் கூட இன்னும் மூட நம்பிக்கை சார்ந்ததே உள்ளது. எம் தேவைகளுக்கேற்பமாற்ற வேண்டியதும் உண்டு.

முடிவாக ஒரு தாயின் நல்லதொரு வளர்ப்பு எங்கே வெற்றியளிக்க வேண்டுமெனில், அப்பிள்ளையின் மூலமோ யாருடைய ஆலோசனைகளும் இன்றி என்னுடைய அம்மா அன்பேயில் நிறைந்த பாசத்தை மட்டுமல்ல பூரணமான புரிந்துணர்வு, நம்பிக்கையையும் வைத்துள்ளா எனவே இவளை நான் ஒரு போதும் ஏமாற்ற நினைக்கவே கூடாதென்று தமக்குள்ளே சிந்திக்க வைக்கும்படியான மனநிலையை பிள்ளையிடம் உருவாக்கிக் கொள்ளுவதில தான்.

# இரு மாறுபட்ட கொள்கையின் அடிப்படையில் வாழும் துருக்கிய பெண்கள்

இஸ்லாமிய மதத்தைப் பொறுத்த வரை பெண்களிற்கான கட்டுப்பாடுகள் ஏராளம் உள்ளதை எல்லோரும் அறிவர். ஆனால் அவர்களிற்குள் வேறு அம் மதத்திலுள்ள கட்டுப்பாடுகளால் சொல்ல முடியாதளவிற்கு அடக்கப்பட்டவர்களும் இருக்கின்றனர். இதை உடைத்து வெளியேறத் துடித்துக் கொண்டிருக்கின்ற பெரும் பெண்ணினவாதிகளும் உள்ளனர். எனவே இந்த இருவகையினரையும் சமஅளவில் கொண்டவளவிற் கூடுதலான அளவில் உயர் கல்வி பயிலுவதிலும் தொழில் புரிவதிலும் ஈடுபாடாக இருக்கிறார்கள். இதனால் ஒரு குறிப்பிட்ட அளவு பெண்களைவிட அநேகம் பேர் இம் மதத்தைவிட்டு வெளியே வந்து சுதந்திரமாக வாழவே விரும்புகின்றனர்.

அவர்களின் இக் கருத்திற்கு ஆதரவு கொடுக்கும் முகமாக அங்கு இயங்கும் நாத்திக வழிமுறை இராணுவம் கைகொடுத்தாலும் இன்னொரு பகுதியு



டிருக்கின்ற துருக்கியில் இன்று அப் பெண்களின் வாழ்க்கை நிலை எவ்வாறு உள்ளதென்பதைப் பார்த்தால், நாட்டைப் பிளவுபடும் அளவிற்கு எதிரும் புதிருமான இரு தரப்பட்ட வாழ்க்கை முறை அவர்களிடையே நிலவுவதைக் காணலாம்.

அங்கு வாழும் பெண்கள் மற்றைய இஸ்லாமியப் பெண்களாக பழமைவாதிகளின் தடையையும் எதிர்கொள்ள வேண்டியவர்களாகவே இப்பெண்கள் இருக்கின்றனர்.

இதையடுத்து இப் பெண்களின் யூதமதமரபான மதக் கொள்கைகளைப் பின்பற்றும் ஏனைய பெண்களோ, சுதந்திரமாக தாம் தம் மதக்கட்டுப்பாடுகளைக் கைவிடத் தயாரில்லாத நிலையில் இராணுவ அடக்கு முறையையும் அதன் நாத்திக வழிக் கொள்கைகளையும் எதிர்த்துள்ளனர். ஆரம்பத்தில் இவ் எதிர்ப்புப் போட்டியான நிலை சற்று மந்த நிலையில் இருந்தாலும் தற்போது மிகவும் உக்கிரமான நிலையையே துருக்கி அடைந்து வருகிறது.

உதாரணத்திற்கு அண்மையில் மருத்துவ பீட மாணவி ஒருவர் தலையில் முக்காடிட்ட வண்ணம் பரீட்சை நடைபெறும் மண்டபத்திற்குள் பரீட்சை செய்ய நுழைந்ததால் அவரை அங்கிருந்த ஆசிரியர் பரீட்சைக்கு அனுமதிக்காது வெளியே அனுப்பிவிட்டார்.

இதில் சம்பந்தப்பட்ட மாணவி, இன்று அங்கு உள்ள மனித உரிமை அமைப்புக்களிடம் சென்று முறையிட்டுள்ளார். இதற்கு எதிர்மாறாக இன்னுமொரு மாணவியோ தனக்குப் பாடம் நடத்தும் ஆசிரியையிடம் சென்று தன் எதிர்காலத்திற்கு தேவையான வசதிகளை உங்களிடமிருந்து கிடைக்கும்வரைத்து என் வீட்டையும் அது சார்ந்த மதக் கட்டுப்பாடுகளையும் தூக்கி எறிந்துவிட்டு வெளியே வரத் தயாரெனக் கூறியிருக்கிறார்.


எனினும் இவற்றை பார்க்கும் போது அங்கு விரைவில் மதத்தை அடிப்படையாகக் கொண்ட பெரும் பிளவு ஏற்படும் என்ற அச்சத்தால், அண்மையில் அங்குள்ள 71 பல்கலைக்கழக பேராசிரியர்கள் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர். அதன் முடிவில் அவர்கள் வெளியிட்ட கருத்துக்களும் சரியான ஒரு தீர்வைச் சொல்லாது பூசி மெழுகுபவையாகவே இருக்கிறன. அதாவது அவர்களின் கருத்துப்படி விரும்புபவர்கள் மதக் கொள்கையைப் பின்பற்றலாம். ஆனால் அதனுள் ஈடுபாடில்லாதவரை வற்புறுத்தக் கூடாது என்றும், மற்றும் கல்விக்கூடங்களை மதம் சார்பாகப் பார்க்க வேண்டாம் என்றும் அதை தனிமைப்படுத்தும் படியும் கூறியுள்ளனர்.

இவர்களின் இக்கூற்று பாடசாலை மட்டத்தில் பிரச்சினைகளைக் குறைத்தாலும் இனிவரும் காலங்களில் நாட்டில் வாழும் முழு மக்களிடையேயுமான மோதல்களைக் குறைப்பவையாக அமையவில்லை என்றே தெரிகிறது.

# மார்க்ரெட் தட்சரின் வரலாற்றை எழுத அனுமதிபெற்ற சார்லஸ் மூர்

பிரிட்டிஷ் நாட்டில் 1979 தொடக்கம் 1990 வரை பிரதமராக இருந்த மார்க்ரெட் தட்சரை எல்லோருக்கும் நினைவு இருக்கிறதல்லவா. அவர் இப்போது தன்னைப் பற்றிய வாழ்க்கை வரலாற்றை எழுத விரும்பினார்.

இவரின் இவ்வாழ்க்கை கதையை எழுதிக்கொடுக்க ஏராளமான பிரிட்டிஷ் பத்திரிகையாளர்கள் போட்டியில் இருந்தாலும் 'டெய்லி டெலி கிராப்' நாளிதழின் ஆசிரியர் சார்லஸ் மூருக்குத்தான் தட்சரால் பூரண அனுமதி வழங்கப்பட்டதுடன்,



அவ்வரலாற்றை எழுதுவதற்கு வேண்டிய தன்னிடமுள்ள முக்கிய ஆவணங்களையும் தட்சர் கொடுத்து உதவியுள்ளார்.

ஆனால் 72 வயதுடைய மார்க்கிரெட் தட்சரைப் பற்றிய இவ்வரலாற்றுப் புத்தகம் எப்போது வெளியுலகப் பார்வைக்கு வரும் தெரியுமா? இவர் இறந்தபின்தானாம். இதை வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுதான் சார்லஸ் மூரும் இவர் வரலாற்றை இன்று எழுதிவருகிறார்.

அத்தோடு மார்க்கிரெட் தட்சர் கூட தன் கணவரை ஆதரிய 'த பாத் டு பவர்' என்ற நூலை 1995ல் வெளியிட்டதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய ஒன்றுதான்.

# ஆப்கானிஸ்தானில் பெண்களை படிக்க அனுமதித்த தனியார் பாடசாலைகளிற்கு மூடுவிழா

ஓரிரு மாதங்களின் முன் இப் பகுதியில், ஆப்கானிஸ்தானில் பெண்களை அடக்கு முறைக்கு உள்ளாக்கி வைத்திருக்கும் 'தலிபன்' தீவிரவாதிகளைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தோம் அல்லவா.

இவர்களின் இவ் ஆதிக்கம் இன்று சொல்ல முடியாதளவிற்கு மேலும் கூடியவண்ணமே உள்ளது. ஏன் தெரியுமா? ஆரம்பத்தில் ஆப்கானிஸ்தான் பெண்கள் பாடசாலைக்குச் செல்வதை தடுப்பது பெரியளவில் நடைமுறைப்படுத்தாத போதும் தீவிர கண்காணிப்புடனேயே இருந்தனர்கள். இதனால் ஓர் இரு வீதத்துப் பெண்கள் சிறிதளவாவது முறையாக கல்விகற்க முடிந்தது.

ஆனால் இதற்கும் இப்போது ஆபத்து வந்துவிட்டது. காரணம் பெண்களுடன் சம்பந்தப்பட்ட நூற்றுக்கும் மேலான தனியார் பாடசாலைகள் இவர்களின் கட்டாயத்தின் பேரில் பெண்கள் படிக்கக் கூடாதென்ற அறிவிப்புடன் நிரந்தரமாக மூடப்பட்டுள்ளது.


இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும்
**செல்வி அரிச்சந்திரன் திவ்யாவை** பல்கலையும் கற்றுச்
சிறப்புடன் வாழ்க்கையை குட்டி மாமாவும் மற்றும்
சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## கவிதை முற்றம்

**ஆக்கம்: செல்வன் கண்ணன் நவரத்தினம்**

**வயது: 09**

**இடம்: கூர், சுவிஸ்**



பல பல நல்ல கப்பலாம் கடலில்
செல்லும் கப்பலாம் ஏற்றமின்றி யாவரும்
இணைந்து செல்லும் கப்பலாம், சமுத்திரத்தின்
மீதிலே விரைந்து செல்லும் கப்பலாம்
அலைகளைக் கிழித்து மோதியே அந்தச்
செல்லும் கப்பலாம் வெளிச்சவீட்டின்
உதவியால் கரையை அடையும் கப்பலாம்.

## அறிவுள்ள அரட்டை

'அந்த நிலாவைத் தானே கையிலபிடிச்சேன்...' என்று ஜாலியா கப் பாடிக்கொண்டிருந்தான் சுரேஷ்.

'என்ன சுரேஷ்... நீ பிடிக்கிற அளவுக்குப் பக்கத்திலேயா நிலா இருக்குது? பூமிக்கும், நிலாவுக்கும் எவ்வளவு தூரம் தெரியுமா?' என்று கேட்டபடியே வந்தான், ரமேஷ்.

'இது தெரியாதா? சொன்னா என்ன தருவே?'

'ஒரு ஃபைவ் ஸ்டார், வாங்கித்தாறேன்.'

'உன் அழுகுணி ஆட்டம் எனக்குத் தெரியாதா? சரி... நான் ஒரு கேள்வி கேட்கிறேன். அதுக்குப் பதில் சொன்னா, நான் உனக்கு ஃபைவ் ஸ்டார் சாக்லேட் வாங்கித்தாறேன்'.

'ம்...கேளு'

'உலகத்திலேயே நீளமான நதி எதுன்னு சொல்லு பார்ப்போம்....'

'ஒரு ஃபைவ் ஸ்டார் சாக்லேட்டை தயாரா வச்சுக்கோ. எகிப்திலுள்ள நைல் நதிதான். மொத்த நீளம் 6650 கி.மீ.'

'நீ தாறேன்னு சொன்ன ஃபைவ் ஸ்டாருக்கும், நான் தரவேண்டியதுக்கும் சரியாப் போச்சு.'

'பழிக்குப் பழி வாங்கிட்டியே! சரி... பரவாயில்லை... உலகத்திலேயே வேகமாகப் போகக் கூடிய ரயில் எங்கே இருக்கு?'

'பிரான்ஸ் நாட்டுல டி.ஜி.வி. (T.G.V.) இரயில். இது மணிக்கு 515 கி.மீ வேகத்தில் செல்லும் உலகிலேயே அதிவேகமான பயணிகள் விமானம் தெரியுமா?'

'கொன்கோர்ட் சூப்பர் சோனிக் விமானம்தான். இதோட வேகம் மணிக்கு 2,333கி.மீ.'

'புத்திசாலிதான் நான் ஒண்ணு கேக்கிறேன். உன்னால பதில் சொல்ல முடியுமான்னு பார்க்கலாம். நீ தினமும் பார்க்கிறியே டி.வி அதைக் கண்டுபிடிச்சவர் யார் தெரியுமா?'

'இயந்திரவியல் தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தவர், ஜான் லக்கி பெயர்ட். மின்னணுவியலைக் கண்டு பிடிச்சது யார்னு உனக்குத் தெரியுமா?'


'தெரியுமே! பி.டி.பார்ன்ஸ்வொர்த்', 'கடைசியா ஒரு புதிர், சரியாச் சொல்றியான்னு பார்ப்போம், ஒன்றையும் கட்டினா வரும், எப்படி கட்டினா வரும்?'

ரமேஷ் யோசிக்கிறான்...' தெரியல்லியே...'

சுரேஷ், சமுறு தொலைவாகப் போய் நின்று கொண்டு, 'மண்டு... தலையாக் கட்டினா வரும்' னு சொல்லிக் (ஜோக்) கடிச்சுட்டு, ஓடிப்போனான்.

ரமேஷ் கடி ஜோக் தாங்காமல் மயங்கி விழுந்து விடுகிறான்.

*சுரபு*
*தமிழ்நாடு*



# பொது அறிவு

ஒலிம்பிக் போட்டிகளின் முக்கிய விளையாட்டுக்களில் ஒன்று உடற் பயிற்சிப் போட்டி. இந்த போட்டியில் முன்னணி வகிக்கும்நாடு அதுவாகும். அங்கு பல்லினத்தவரும் வாழ்கின்றனர். ஒலிம்பிக் போட்டிக்கு அந்த நாட்டின் அந்தப் பாடசாலையில் இருந்துதான் போட்டியாளர் தெரிவாவர். அங்கு எல்லா மொழியினரும் கல்வி கற்கின்றனர். ஆண்கள் மட்டுமே அந்தப் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். பாடசாலையில் வருடந் தோறும் உடற்பயிற்சி போட்டி நடக்கும். அதில் வெற்றி பெறுவோர் படிப்படியாக ஒலிம்பிக் போட்டிக்கு தெரிவாவர்.

அங்கு 10ம் வகுப்பில் தமிழழகன் படித்து வந்தான். அவனும் சிறுவயது முதல் பல உடற்பயிற்சி போட்டியில் முதலாம் இடம் பெற்றவன். அந்த வருடம் உடற்பயிற்சி போட்டி வந்தது. அந்த போட்டிக்கு தலைமை தாங்க சுகாதார, உடற்பயிற்சி அமைச்சர் நடுவராக அழைக்கப்பட்டு போட்டி தொடங்கியது. ஒவ்வொரு மாணவரும் தமது திறமையைக் காட்டினர். இறுதிப் போட்டிக்கு 10 மாணவர்கள் தெரிவாகினர். அதில் தமிழழகனும் ஒருவன்.

10 பேருக்குக் கடும்போட்டி நடந்தது. அதில் மூன்று பேர் ஒரே புள்ளியைப் பெற்று சமமாக இருந்தனர். அம்மூவரில் தமிழழகனும் ஒருவன். நடுவராக வந்திருந்த அமைச்சருக்கு ஒரே திகைப்பாக இருந்தது. மூவருக்கும் முதல்பரிசு கொடுக்கப்பட வேண்டும். அப்படி கொடுக்க அவர் விரும்பவில்லை. அவர் யோசித்துவிட்டு ஒரு முடிவு எடுத்தார். மூவரையும் அழைத்து 'மூவருக்கும் முதல் பரிசு தரப்பட வேண்டும். ஆனால் நான் அப்படித் தர விரும்பவில்லை. உங்களிடையே ஒரு போட்டி வைக்கிறேன். அதில் யார் வெல்கிறாரோ அவருக்கு பரிசு தரப்படும்' என்றார். இதற்கு மூவரும் சம்மதித்தனர்.

அவர் சொன்னார், 'நான் ஒவ்வொருவரிடமும் 5 பொது அறிவு கேள்வி கேட்பேன். அதன்படி யார் கூட பதில் சொல்கிறாரோ அவருக்கு முதல் பரிசு வழங்கப்படும்' என்றார்.

ஒவ்வொருவரையும் 5 கேள்விகள் கேட்டார். அதில் அந்த நாட்டு மாணவன் மூன்று கேள்விக்கும், தமிழழகன் இரண்டு கேள்விக்கும், இன்னொரு மாணவன் ஒரு கேள்விக்கும் பதிலளித்து பரிசைப் பெற்றனர். பரிசு பெறும்போது தமிழழகன் கவலையுடன் வாங்கினான். இதைப் பார்த்து பரிசு வழங்கிய அமைச்சர் பேசும்போது இவ்வாறு கூறினார். 'மாணவர்களே நீங்கள் மூவரும் ஒரே புள்ளி பெற்றும்கூட பரிசு மூன்றாக வழங்கப்பட்டது. நீங்கள் மூவரும் திறமையானவர்கள் அதில் சந்தேகமில்லை, ஆனால் உங்களுக்கு பொது அறிவு குறைவாகவுள்ளது. காரணம் உங்களுக்கு உங்கள் பாடப்புத்தகங்களில் தான் அதிக கவனம் உண்டு. பொது அறிவு என்பது பாடப்புத்தகங்களில் மட்டுமல்ல. படிக்காதவர்கள் கூட பொதுஅறிவுடையவர்கள். ஒவ்வொரு மாணவர்களும் பொது அறிவை வளர்த்தேயாக வேண்டும். ஏட்டுக்கல்வி மட்டும் உங்கள் வாழ்க்கைக்கு போதுமானது. பொது அறிவை வளர்க்க, நீங்கள் தொலைக்காட்சி (ரேடியோ) போன்றவற்றில் செய்திகள், உலகச் செய்திகள், பல நல்ல செய்திகள் பாருங்கள். அத்துடன், நல்ல நல்ல புத்தகங்களை தேடிப் படியுங்கள். அதற்காக நேரமெடுங்கள் பயணங்களின் போது பெரியவர்கள் பலர் அறிவு பூர்வமான கதைகளை கதைத்துச் செல்வர், அதை செவி மடுங்கள். நேரம் கிடைக்கும்போது நூலகம் செல்லுங்கள். ஆசிரியரிடம் பல பொதுக் கேள்விகளைக் கேளுங்கள். உங்கள் தேவை பொது அறிவாகும். மாணவர்களுக்குப் பொது அறிவு மிக முக்கியம்' என்றார்.

பிள்ளைகளே! அவர் சொன்னது சரிதான் பொது அறிவு குறைவானபடியால்தான் தமிழழகன் உடற்பயிற்சியில் அதிக புள்ளி எடுத்தும் இரண்டாமிடம் பெற்றான். எனவே மாணவர்களே இன்றைய வாழ்க்கைக்கு மிக முக்கியம் பொதுஅறிவே. இன்றிலிருந்து நல்ல புத்தகங்களைத் தேடிப் படியுங்கள் பொது அறிவு வாழ்க்கைக்கு வழிகாட்டும்.

\- நவீனை நாகேந்திரா
பிரான்ஸ்

## அறிவியல் முற்றம்

### மிகப்பெரிய தீவு

நாலு பக்கங்களும் கடலால் சூழப்பட்ட நிலப்பரப்பைத் தீவு என நாம் அழைக்கிறோம்.

எமது தாய்நாடாகிய தமிழீழமும் இலங்கை என்கின்ற சிறிய தீவின் ஒரு பகுதியாகும். ஆனால் உலகிலேயே மிகப்பெரிய தீவு என்பது உங்களுக்குத் தெரியுமா? கிறீன்லாந்து என்ற தேசமே உலகின் மிகப் பெரிய தீவாகும். டென்மார்க் நாட்டிற்குச் சொந்தமான இத்தீவு 2,640 கிலோ மீற்றர் நீளமும், 1280 கிலோ மீற்றர் அகலமும் உடையது. இத்தீவின் பெரும்பாலான பகுதி கூன் பனியினால் மூடப்பட்டுள்ளது.

இங்கே எஸ்கிமோ என்ற இனத்தவரும் டேனியர் என்ற இனத்தவர்களும் வாழ்கிறார்கள். இத்தீவு முழுவதும் 25,000 பேர் வரையிலேயே வாழ்கிறார்கள்.

துருவக்கரடி, துருவநரி, ஆர்ட்டிக்முயல், கலைமான் முதலிய விலங்குகள் இங்கு உயிர்வாழ்கின்றன.

இந்தப் பிரதேசத்தில் வாழும் மக்கள் கடும் குளிரைத் தாங்கிக் கொள்ளக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் திமிங்கலங்களை வேட்டையாடுவதுடன் மீன் பிடித்தல் தொழிலில் ஈடுபடுவர்.

## கட்டுரை முற்றம்

# எமது தாயகத்தில்...

இலங்கை ஒரு அழகான நாடு. இதன் வடகிழக்குப் பகுதிகள் தமிழர்களின் தாயகமாக விளங்குகிறது.

வடபகுதியை யாழ்ப்பாண தீப கற்பம் என்று அழைப்பார்கள். இங்கே வன்னி இராச்சியத்தை பண்டார வன்னியனும், யாழ்ப்பாண இராச்சியத்தை சங்கிலிய மன்னனும் ஆண்டு வந்தனர். நல்லூர், நகுலேஸ்வரம், கோணேஸ்வரம், கேதீஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் நயினை நாகபூசணி அம்மாள், தொண்டமானாறு செல்வச் சந்நிதி, கொக்கட்டிச் சோலை தான்தோன்றி ஈஸ்வரம் போன்ற திருத்தலங்களையும் கொண்டது எமது தாயகம்.

அங்கு வாழும் மக்கள் நெல், புகையிலை, வெங்காயம், பெருந்தோட்டப் பயிர்களையும் விவசாயத்தையும் நம்பி வாழ்கின்றனர். யுத்தத்தினால் இப்பகுதிகள் அழிக்கப்படுவதாக அறிந்து வேதனைப்படுகிறோம்.

இவ் அழிவுகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் என்போன்ற சிறுவர்களின் எதிர்காலத்துக்காகவும் உதவிக்கரம் நீட்டுவோம் வாருங்கள்.

*இதை எழுதி அனுப்பியவர்:*
**செல்வன் கஜிநாத் தவம்**
*என்னபெற்றால், ஜேர்மனி.*

# சிட்னியிலிருந்து - வன்னிக்கு

அவுஸ்திரேலியாவில் சிட்னியிலிருந்து இந்த நேயர் வேறு ஒரு அலுவலாக ... சென்றிருந்தார். அதன் பின் வன்னிக்கும் சென்றிருந்தார்.

அங்கு தான் கண்டவற்றை, கேட்டவற்றையும் தனக்குக் கிடைத்த அனுபவங்களையும் ஒரு பயணக் கட்டுரையாக வடித்திருக்கிறார்.

இக்கட்டுரை தொடராக ஈழமுரசில் வெளிவருகின்றது. — ஆசி.

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பயணம் தொடர்கிறது. நெடுநேரமான மழை வெளியில் இரக்கமின்றி கொட்டுகிறது. பஸ் குலுக்கல் குலுக்கில் சொல்ல முடியாத தலைவலி. அதற்குள் சிலர் நித்திரையும் கொண்டு குறட்டை விட்டு தூங்குகிறார்கள். அவர்களை பேச வேண்டும் போல் இருக்கிறது. ஆனால் என்னால் பேசமுடியவில்லை எனக்கு என்ன அருகதை இருக்கிறது அவர்களை பேச. சலித்தவாறு கண்ணாடியின் ஊடாக வெளியில் பார்க்கிறேன். முருகண்டி என்ற அடையாளம் காணமுடியாமல் போய் விட்டது. மறந்து தொலைந்தும் ஒரு கடையின் விளம்பரம் எழுதப்பட்ட தகரத்தட்டியில் ஒரு மூலையில் முருகண்டி என்று இருந்ததைக் கண்டவுடன், ஆச்சரியப்பட்டேன். பொன் விளையும் பூமி அது. நல்ல செழிப்பான நெல் விளைச்சலுக்கேற்ற வயல்நிலம். ஏக்கருக்கு 100 புசல் நெல் சாதாரணமாக விளையும் பூமி இது. எருக்கலம் காடாய் கிடக்கும் காட்சி வயிற்றைப் பற்றி எரிந்தது. கடைகளும், கட்டடங்களும், கூட்டுறவுச் சங்கங்களும், பள்ளிக்கூடங்களும், வீடுகளும், நிலைகளும் குண்டுத்தாக்குதலாலும், பீரங்கித் தாக்குதலாலும் நொருக்கப்பட்டிருந்தது. பயணம் தொடர்கிறது.

மீண்டும் அந்த பாரிய அரண்களும், முட்கம்பிகளும் இராணுவக்காவல் அரண்களுமாய் பயணம் தொடர்கிறது. இடையே ஒரு பாரிய பரந்தவெளி. அந்த வெளியில் சுமார் 50 ஏக்கர் சதுர மைல்பரப்பில் பல கட்டடங்கள், தொலைபேசி தொடர்புகள் பொருத்தப்பட்ட உயர்ந்த தூண்கள். சுற்றிவர பிரமாண்டமான காவல் அரண்கள். முட்கம்பிகள், மண்மூடைகள், மரக்குற்றிகள் தாரீப்பாக்கள் மிகவும் பாதுகாப்பான அரண் என்பதை அவதானிக்க பார்க்க முடிந்தது. இது மன்னார் கடற்கரையையும், வன்னி பெருநிலப்பரப்பையும் ஒரு புறமாகவும், மன்னார் வவுனியா வீதியை மறுபுறமாகவும், மன்னார் நகர்புறத்தினை இவ்வொரு புறமாகவும், வயல் வெளிகளையும் சதுப்பு நிலங்களையும் நான்காவது புறமாகவும் கொண்டு காணப்பட்டது. ஆர்வமாக பஸ்ஸில் இருந்தபடி எட்டி எட்டி பார்க்கின்றேன். இது என்னவாக இருக்கும் என்று தலையை உடைக்கின்றேன். நிச்சயமாக இது இராணுவ முகாமாகத்தான் இருக்கும். அருகில் இருந்தவரை மீண்டும் பார்க்கின்றேன். அவர் நித்திரைபோல் பாசாங்கு செய்வதை உணர முடிகிறது அவருக்கு என் உபத்திரவம் தாங்க முடியவில்லை போலும். நன்றாக யோசிக்கின்றேன்.

பெரிய இராணுவ முகாம் இது எனவும், அது மிகவும் பாதுகாப்பான ஒரு இராணுவ முகாம் என்பதும் நினைவுக்கு வந்தது. ஓ, இது தள்ளாடி இராணுவ முகாம் என்று வாய் திறந்து கூறிவிட்டேன். அருகில் இருந்தவர் என்னைப் பார்த்து என்ன தம்பீ பாழும் போறியே! என்று கூறிவிட்டு மறுபடியும் திரும்பி சாய்ந்து கொண்டார். பேசாமல் இருந்துவிட்டேன். ஆட்கள் என்னைப் பார்ப்பது தெரிகிறது. அது அமைக்கப்பட்ட முறையும், பாதுகாப்பு அரண்களும் இராணுவத்தின் பீதியையும் பலவீனத்தையும் காட்டுவதாகவே எனக்குப்பட்டது.

அந்த இராணுவமுகாமை கடக்க 10 — 15 நிமிடங்கள் சென்று இருக்கும் அதன் பின்னர் மன்னாரை அண்மித்து நாம் சென்றுவிட்டதை அறிய முடிந்தது. மன்னார் பாலம் தப்பி பிழைத்துவிட்டது என்னவோ சற்று மனம் நிம்மதி. மன்னார் பாலத்தை தாண்டியவுடன் சோதனைச் சாவடியில் பஸ் போய் நின்றது. பஸ்ஸிலிருந்து இறங்கி மீண்டும் வரிசையில் நிற்கின்றோம். அங்கு மீண்டும் அதே சோதனை தொடர்கின்றது கையெழுத்துக்கள் பெறப்பட்டது. பின்னர் ஒரு நீலநிற அனுமதி சீட்டு ஒன்று தந்தார்கள். அது மன்னாருக்குள் நிற்பதற்கு மட்டும், அருகில் இருந்தவர் ஒருவர் சொன்னார்.

தம்பி அந்த சிவப்பு நிற பாசும், நீல நிறப்பாசும் இணைந்தால் - அது நீர் தொலைந்ததற்குச் சரி என்றார். மிகவும் கவனமாக. அப்படியே ஒரு பொலித்தீன் உறையில் போட்டு சட்டைப்பையில் வைத்துக்கொண்டேன். இதன் பின்னர்தான் சற்று வெளியே வரமுடிந்தது. நேரம் 6 மணி இருக்கும். வெய்யில் சாய்ந்து, மின் கூழ்கட்டு வாசலையுடன் சேர்த்து வீசினாலும் சுகமாக இருந்தது. ஏதோ ஒரு பெரிய ஆபத்தில் இருந்தும் விடுபட்ட ஒரு நிலைப்பாடு. நிம்மதி. நானும் என் நண்பரும் ஆளை ஆள் பார்த்து புன்சிரிப்பு சிரிக்கின்றோம். இருவருமாய் தேநீர் கடையொன்றில் போய் தேநீர் வாங்கி குடித்துவிட்டு அந்த கடைக்காரரிடம் கேட்டோம். அண்ணை இன்று இரவுக்கு தங்க எதாவது இடவசதி கிடைக்குமா என்று? முக்குவது கஷ்டம். வவுனியாவிலேயே நிறைய ஆட்கள் இருப்பதாக கேள்வி ஆனால் இந்துவிடுதியால் போய் பாருங்கோ. இரண்டு வீட்டைவொன்று ஆக்கி வைத்திருக்கினம். சிலவேளை இடம் அங்கு இருக்கும். வெளியேல் வந்து மன்னார் நகரை நாம் மேலோட்டமாக பார்க்கின்றேன் 20 வருடங்களுக்கு முன்பு பல்கலைக்கழகத்தில் படித்த காலங்களில் இங்கு பல சக நண்பர்களின் அழைப்பின் பேரில் வந்ததும், எப்பவோ போகும்போது நாம்பச கணக்கான சக நண்பர்களுடன் வந்து குதூகலம் அடித்ததும் நினைவுக்கு வந்தது. அந்த மன்னார்? வேறு. இன்று பார்க்கும் மன்னார் வேறு என்பதை உணர முடிகிறது. வரண்டுபோய், இருண்டுபோய், களை இழந்து போய், வறுமையும், நோயும், பிணியும் சூழப்பட்ட ஒரு குணிய பிரதேசமாக தென்பட்டது. நகரத்தின் மையப்பகுதியில் இராணுவமுகாம். மீதி சொல்லவேண்டுமா? என்பதுக்கு நோய் வாய் பட்டதுபோல் காட்சிய ளித்த கழுதைகள், அங்கும் இங்குமாக அலைவதையும் சில தின் பூதிகொண்டு பத்திரிகைகளையும் அங்கு காணும் காரிப் பொருட்களையும் தின்று கொண்டு இருப்பதை காண முடிந்தது.

மன்னாரில் இறங்கி விட்டால் அன்று எத்தனை பல்கலைக்கழக நண்பர்கள் இன்முகத்தோடு அன்பாய், என் வீட்டுக்குவா இல்லை என்னுடன் நீ வா என்று போட்டி போட்டுக்கொண்டு கையைப்பிடித்து இழுப்பார்கள். அந்த ஆனந்தனும் அங்கு இல்லை. பீரிஸ்சுவும் இல்லை. ஏன் மேரி கூட அங்கில்லை. வெறுமையான உணர்வுகளோடு லொட்சுக்குள் சென்று அங்கு இருந்த பொறுப்பாளரிடம் தங்க இடம் இருக்கிறதா என்று கேட்டோம். இருக்கு ஒரு ஆளுக்கு 150 ரூபாய் ஒரு இரவுக்கு விறாந்தையில் படுக்க. ஒரு சிறிய அறை இருக்கு. ஒரு இரவுக்கு 400 ரூபாய் விறாந்தையில் படுக்க எவ்வளவோ கூச்சமாக இருந்தது. அதனால் 300 ரூபாய் கொடுத்து அந்த அறையையே வாடகைக்கு எடுத்துக் கொண்டோம். பெண்கள், குழந்தைகள், குமரிகள், பிள்ளைகள், வயோதிபர், வருத்தக்காரர் எல்லோரும் பாயை விரித்து எதுவித வேறுபாடும் இன்றி படுத்திருந்தும், இருந்து கொண்டும் தமது சோக வரலாறுகளை பக்கம் பக்கமாக புரட்டிக்கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

மன்னாரில் இறங்கி விட்டால் அன்று எத்தனை பல்கலைக்கழக நண்பர்கள் இன்முகத்தோடு அன்பாய், என் வீட்டுக்குவா. இல்லை என்னுடன் நீ வா என்று போட்டி போட்டுக்கொண்டு கையைப்பிடித்து இழுப்பார்கள். அந்த ஆனந்தனும் அங்கு இல்லை. பீரிஸ்சுவும் இல்லை. ஏன் மேரீ கூட அங்கில்லை.

பெண்கள், குழந்தைகள், குமரிகள், பிள்ளைகள், வயோதிபர், வருத்தக்காரர் எல்லோரும் பாயை விரித்து எதுவித வேறுபாடும் இன்றி படுத்திருந்தும், இருந்து கொண்டும் தமது சோக வரலாறுகளை பக்கம் பக்கமாக புரட்டிக் கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

இடையிடையே சிலர் தம் பிள்ளைகள் வெளிநாட்டில் என்றும் சகோதரர்கள், சொந்தக்காரர்கள் வெளிநாட்டில் என்றும் தம்பட்டம் அடித்து மற்றவர்களின் வயிற்று எரிச்சலை கிளறிய வண்ணம் இருந்தார்கள். ஆனால் அவர்களுக்கும் தெரியவில்லை நாட்டின் குழப்ப நிலை காரணமாக வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்த எம்மவர் படும் துயரங்களும், வேதனைகளும், ஆனால் அதனை அவர்களுக்கு புரியவைக்காமல் செய்வதும், அந்தவெளிநாட்டில் இருப்பவர்களே!

எவ்வாறு எல்லாம் ஆடம்பரமாக திருமண வைபவங்களும், விழாக்களும், உல்லாசப் பயணங்களும் நடத்தி — படம் எடுத்து ஊரில் உள்ளவருக்கு அனுப்ப முடியுமோ அனுப்புவது — தேவைப்படும் போதெல்லாம் கடன் வாங்கியோ அன்னியோ பாசம் சிந்துவதால் பணம் அனுப்புவது. அதனால் அவர்கள் நினைக்கின்றார்கள் வெளிநாட்டில் பணம் சும்மா குவிந்து கிடக்கின்றது என்று. தவறான வழிகளில் பணம் சேர்ப்பவருக்கு பணம் குவிந்துகிடப்பது என்னவோ உண்மைதான். கஷ்டப்பட்டு நேர்மையாய் உழைப்பவருக்கு பணம் வெளிநாட்டில் சேமிப்பது என்பது கல்லில் நார் உரிப்பதுபோல் என்பது அவர்களுக்கு, எங்கே புரியப்போகிறது?

(தொடரும்)

அனைத்து - அச்சு வேலைகளும் குறித்த தவணையில் மிகக் குறைந்த விலையில் சிறந்த தரத்துடன் செய்து கொடுக்கப்படும்.

உங்கள் அனைத்து விதமான அச்சுத் தேவைகளுக்கும்

தமிழ் அச்சகம்

(மக்கள் கடையருகில்)

இலண்டன், இந்தியா, இலங்கை, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் 500-க்கு மேற்பட்ட திருமண அழைப்பிதழ் மாதிரிகள் உங்கள் தெரிவிற்காக உள்ளன.

திங்கள் முதல் - சனி வரை 09.00 — 22.00 மணிவரை

60, Rue Louis Blanc, 75010 Paris

Tel & Fax: 01 42 09 60 64 ou 06 13 12 35 42

24 மணி நேரத்தில் உங்கள் அழைப்பிதழ்கள் அனைத்தும் Print செய்து கொடுக்கப்படும்.

தமிழ் அச்சகத்தின் கிளை நிறுவனம் Marcadet Poissonniers இல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.


20 Rue Labat, 75018 Paris


M: Marcadet Poissonniers

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு! திருமண அழைப்பிதழ், பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள், பிறந்த தின விழா அழைப்பிதழ், முதல் நன்மை அழைப்பிதழ், கேக் பெட்டிகள் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

அழைப்பிதழ் மாதிரித்தாள் தெரிவிற்காக இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

# ஓயாத சத்தம் அலட்சியமான போக்கு காதுகளைப் பாதிக்கும்





சத்தம் காதுகளை செயலிழக்க வைக்கும் என்பது பலருக்கும் இன்னும் கூட ஒரு புதிய செய்தியாகத்தான் இருக்கிறது. (Noise Pollution) இதனால் பலரும் செவிப்புலன் இழப்புக்கு ஆளாகிறார்கள். இதுபற்றி இளவடி[?] மருத்துவத்துறையில் நல்ல அனுபவம் பெற்ற டாக்டர் கே.கே. இராமலிங்கம் அவர்களிடம் கலந்துரையாடினோம். காது கேட்கும் திறன் எப்படி பாதிக்கப்படுகிறது? அதனை எப்படி தடுக்கலாம்? புதிய சிகிச்சை முறைகள் என்னென்ன என்பன போன்ற நமது கேள்விகளுக்கு பொறுமையாகவும், பொறுப்புணர்வோடும் பதில் அளித்தார்.

Noise Pollution - சுற்றுப்புறச் சூழல் பாதிப்பு எந்த அளவுக்கு காதுகளை பாதிக்கிறது? எங்கு திரும்பினாலும் வாகனங்களின் சத்தம், தொழிற்சாலையில் பேரிரைச்சல் இதை எப்படி சமாளிப்பது.

நமது வாழ்க்கையில் இவைகள் சொன்னவைபோலவோம் சில சாதாரண ஒன்றாக நம்மோடு இணைந்துவிட்டன. இதனை முற்றிலும் தவிர்க்க முடியாது. ஆனால் பாதிப்பு வராமல் நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அதற்கு முன் பாதிப்புகள் எந்த சூழ்நிலையில் வரலாம் என்பதை புரிந்துகொள்ள வேண்டும்.

தொழிற்சாலை, போக்குவரத்து இரைச்சல் இவைபோல் வாம் வெளிப்புறங்களில் உள்ளவை. முதலில் நமது வீட்டில் என்ன நடக்கிறது. வால்யூமை எவ்வளவு அதிகமாக வைத்துக் கேட்கலாமோ அவ்வளவு அதிகமாக வைத்து டேப்ரெக்காடரை கேட்கிறோம், டி.வி. பார்க்கிறோம். இதை முதலில் கணிசமாக குறைத்துக் கேட்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

காதிலுள்ளே பெரிய பிளக்கினை வைத்துக்கொண்டு நடந்து போனால் என்ன ஆகும். வோக்மேனைத்தான் சொல்கிறேன். இசையைக் கேட்டுரசிக்க வேண்டியதுதான். அதற்காக அதை காதுகிழியத்தான் கேட்க வேண்டும் என்றால் நிச்சயம் காது கேட்கும் திறன் பாதிப்படையும். வோக்மேனை கூடுமானவரை உபயோகப்படுத்துவதை குறைத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்த தொழிற்சாலைகளில் பணியாற்றுவோர் பற்றி முக்கியமாக குறிப்பிட வேண்டும். பலவகை சத்தத்துடன் இயங்கக்கூடிய தொழிற்சாலைகளில் பணியாற்றுவோர் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். அதிகபட்சமாக எவ்வளவு டெசிபல் (அளவு) சத்தத்தை ஒரு நாளைக்கு கேட்கலாம் என்பதை தெரிந்துகொண்டு செயல்பட வேண்டும். சாதாரணமாக 90 டெசிபல் அளவை ஒரு நாளைக்கு 8 மணி நேரம் கேட்கலாம். தவிர்க்க முடியாமல் 100 டெசிபல் சத்தத்தை கேட்க வேண்டி வந்தால், இரண்டு மணி நேரத்துக்குமேல் கேட்கக் கூடாது.

இதைவிட அதிக அளவில் 115 டெசிபல சத்தத்தை கேட்கும்படியான நிலை ஏற்பட்டால் 15 நிமிடம் வரை பொறுத்துக்கொள்ளலாம். அதற்கு மேலும் கஷ்டப்பட்டு கேட்கக் கூடாது.

டெசிபல் கணக்கு பார்த்தெல்லாம் மனிதன் வேலை செய்ய முடியுமா டாக்டர்..!

நடைமுறையில் சில சிக்கல்கள் இருக்கலாம். அதற்காக அலட்சியம் செய்ய முடியுமா? உதாரணமாக பெருத்த சத்தத்தை கேட்கும்போது காது நாளங்களை அடைப்பது போன்று இருக்கும். தொடர்ந்து கேட்க வேண்டி வந்தால் காது அடைப்பானை பொருத்திக்கொள்ள வேண்டும். காது அடைப்பான் ஒன்றும் அதிக விலையில்லை. அவற்றை வாங்கி பொருத்திக் கொள்ளலாம்.

காதுகளை சுத்தம் செய்கிறேன் என்று பேனா மூடி, பென்சில், தீக்குச்சி, பட்ஸ் போன்றவற்றை உபயோகிக்கிறார்களே! இது நல்லது தானா..?

முதலில் பட்ஸை எடுத்துக்கொள்வோம். பிரபலமான கம்பனிகள் கூட பெரிய அளவில் பட்ஸை (BUDS) போடுகிறார்கள். அது உபயோகிக்கத்தக்கதல்ல. மேலும் பேனா, பென்சில் எல்லாம் எழுதுவதற்குத்தானே தவிர காது குடைய அல்ல. அப்படி நுழைந்தால் காதின் செவிப்பறை கிழிந்து போக வாய்ப்பு உண்டு. எக்காரணத்தைக் கொண்டும் எந்த பொருளையும் காதில் விடக்கூடாது. காதில் இயற்கையாகத் தோன்றும் மெழுகின் சுரப்பு பாதுகாப்பதற்காகவே உற்பத்தியாகிறது. அதனால் ஏதாவது தொந்தரவு என்று கருதினால் டாக்டரை அணுகி சுத்தம் செய்து கொள்வதே நல்லது.

காதில் சீழ்வடிவது பலருக்கும் வரும் ஒரு தொந்தரவாகும். இதனை சரி செய்ய முடியுமா?

நகரங்களில் காதுக்கு ஏதாவது சின்ன தொந்தரவு என்றால்கூட உடனே டாக்டரை அணுகிவிடுகிறார்கள். கிராமப்புறங்களில் அப்படி இல்லை. காதில் சீழ் வடிவதை சாதாரணமாக நினைத்து அலட்சியம் செய்து விடக்கூடாது. காதின் நடுச் செவியில் தொற்று ஏற்பட்டிருந்தால் அவ்வாறு சீழ் வடிய வாய்ப்பு உண்டு. மேலும் காதின் பின் புறம் உள்ள எலும்பில் நோய்த்தொற்றும் செவிப்பறையில் துளையும் உண்டாகி இருக்கலாம். இதுபோன்ற பிரச்சினைகள் காதில் சீழ் வடிவதை சாதாரணமாக நினைத்து அலட்சியம் செய்துவிடக் கூடாது. காதின் நடுச் செவியில் தொற்று ஏற்பட்டிருந்தால் அவ்வாறு சீழ் வடிய வாய்ப்பு உண்டு.

குழந்தைகளுக்குத்தான் அதிகம் காணப்படுகிறது. இந்நோய் பல டான்சில் பிரச்சினையும், அடினாய்டுகளிலிருந்து நோய்த் தொற்று பரவுவதும் ஒரு முக்கிய காரணம். மூக்கு மற்றும் சைனஸ்களின் நோய்த் தொற்று, மூக்கில் ஒவ்வாமை போன்றவையும் குழந்தையின் காதில் சீழ்வடிதல் காரணமாக இருக்கின்றன. இவற்றின் மூலம் மூக்கு மற்றும் காது இவ்விரண்டுக்கிடையே உள்ள இணைப்புக் குழாய் அடைபட்டு காதில் உள்ள காற்றின் அளவு குறைந்து விடுகிறது. மேலும் காயமடைதல், கன்னத்தில் பலமாக அடித்தல் போன்றவற்றால் செவிப்பறை கிழிந்து பல்வேறு தொந்தரவு களை உண்டு பண்ணலாம். இதற்கு அறுவை சிகிச்சை மூலம் தீர்வு காணமுடியும்.

காதின் சீழ்வடிதலை கவனிக்காமல் விட்டு விட்டால் காது கேட்கும் திறன் படிப்படியாக குறையும். பையன் படிக்கவில்லை. பேசினால் சரியாக புரிந்து சொன்ன முடியவில்லை போன்ற பிரச்சினை சிறுவர்களுக்கு இருந்தால் Tonsils பிரச்சினையால் அப்படி இருக்கலாம். இருந்தால் உடனே சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

காதின் உட்செவியில் மிகச் சிறிய வடிவில் உள்ள எலும்புகள் மிகவும் முக்கியமானவை. அது சமயத்தில் வைப்ரேஷன் ஆகாமல் இருக்கும். 60%க்கு மேல் அப்படி இருக்கும் பட்சத்தில் லேசர் சிகிச்சை கொடுக்கலாம்.

செவியின் உட்பகுதியில் நீர் சேர்த்துக்கொள்வதுண்டு. இதனால் காதில் இரைச்சல் உண்டாகும். சமயத்தில் காதே கேட்காது. காது கேட்கும் திறன் பொதுவாகவே பாதிக்கப்பட்டிருக்கும். இது வயது ஆக, ஆக அதிக தொந்தரவு கொடுக்கக்கூடியதாக அமைந்துவிடும். எனவே தகுந்த நேரத்தில் உரிய சிகிச்சை எடுக்க தாமதிக்கக்கூடாது.

## குழந்தைகளுக்கு தலைக் காயங்கள்! கவனிப்பது தலையாய கடமை!

டாக்டர் எஸ். கல்யாணராமன்

தலையில் அடிபடுவது, காயம் ஏற்படுவது பிள்ளைகளின் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும் என்று அனைவரும் உணர்ந்திருக்கிறோம். சிலர் அலட்சியப்படுத்தியிருக்கிறோம். பெரியவர்களுக்கு ஏற்படும் மூளைக் காயங்களின் பாதிப்பிற்கும், குழந்தைகளுக்கு உண்டாகும் பாதிப்பிற்கும் வேறுபாடுகள் உண்டு. கண்டறியும் முறை, பாதிப்பின் அளவு, சிகிச்சைமுறை என அனைத்திலும் மாற்றங்கள் உண்டு.

பிறந்த குழந்தையின் மூளையில் 90% நீர் உள்ளது. பதின்வயர் பருவத்தில் நீரின் அளவு 75% ஆகி விடுகிறது. மைலின் என்கிற நரம்புறை உறை பிறந்தவுடன் உருவாகத்தொடங்கி நான்கு வயதிற்குள் வளர்ச்சியை நிறுத்திக் கொள்கிறது. சுமார் எலும்பின் இணைப்பு முதலாண்டு வரை அசைவுடன் இருக்கும். தலை உச்சியிலுள்ள ஓட்டைப் பகுதி மெல்லவே மூடிக் கொள்கிறது. இது முழுவதுமாக மூடிக்கொள்ள ஓராண்டு ஆகிவிடும்.

மூளையில் ஏற்படும் பாதிப்பு பெரும்பாலும் வளர்ச்சியடைந்த பிறகுதான் தெரிய வருவதால் உயரத்திலிருந்து கீழே விழுந்த குழந்தையின் தலையில் அடிபட்டால் கூட, குழந்தை நினைவிழக்காமல் இருந்தால், பெற்றோர்கள் அலட்சியமாகவே இருந்து விடுகிறார்கள். மகப்பேறு மருத்துவத்தில் வளர்ச்சியடைந்திருந்தாலும் கூட, பிரசவங்களின்போது ஆயுதங்கள் பயன்படுத்துவதால் தலைக் காயம் உண்டாகிறது. இதனுடைய பாதிப்பு அப்போது தெரியாவிட்டாலும் பின்னர் குழந்தை வளர்ந்த பின்னர்தான் தெரியவருகிறது.

சில விபத்துக்கள் குழந்தைகளுக்குச் சர்வசாதாரணமாக நடக்கின்றன. தொட்டிலில் இருந்து விழுவது, கட்டிலில் இருந்து கீழே விழுவது, மேடைகளில் இருந்தும் மாடிப் படிக்கட்டுகளில் இருந்தும் விழுவது பெரும்பாலும் அடிக்கடி நடைபெறும் செயலாகும்.



சில பெற்றோர்கள் தங்களின் கோபத்திற்கு குழந்தைகளை பலிக்கடாவாக்கி விடுகின்றனர். குடித்துவிட்டு வரும் கணவன், குழந்தைகளின் மழலையைக்கூட ரசிக்காமல் அடித்துவிடுவான். தாய்மார்கள் கூட கோபத்தை வெளிக்காட்டத் தங்களின் கைவிசையை குழந்தையின் மீது காட்டிவிடுகின்றனர். குழந்தைகள் வேலைசெய்யும் இடங்களிலும் இது போன்ற கொடுமைகள் நடக்கின்றன. நிறைய எழுத்தறிவு, மருத்துவ மனைக்குக் கொண்டு வரப்படும் குழந்தைகளின் எண்ணிக்கையின் அதிகரிப்பே இதற்குச் சாட்சியம். கருப்பு:

பெற்றோர்கள் இருவரும் பணிக்குச் சென்றுவிடுவதால், குழந்தைகளை செவிலியர்களிடமும், வேலைசெய்யும் பெண்களிடமும் குழந்தைகள் ஒப்படைக்கப்பட்டு விடுகின்றனர். அக்குழந்தைகளிடம் சில பெண்கள் குழந்தையின் அழுகையைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் தூக்கிப் போடுவது, பலமாக ஆட்டுவது, தலையில் குட்டுவது போன்ற செயல்களின் மூலம் அடக்கி வைக்கின்றனர். இது பிஞ்சு மூளையை பாதிக்கும் என்பதை அவர்கள் அறிந்திருக்க நியாயமில்லை.

தலையில் அடிபட்ட குழந்தையைக் கண்காணிப்பதில் அதிக கவனமும் நுணுக்கமும் தேவை. மூளையின் செயல்பாடும், நரம்பு மண்டலமும் பாதிக்கப்படுவதால் ஏற்படும் பின் விளைவுகள் கொடுமையானவை. மேலும் 'தலைக்காயம் தானே!' என்கின்ற மனப்பான்மையை பெற்றோர்கள் அறவே தவிர்க்க வேண்டும்.

நன்றி: ஜனசக்தி

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

# கால்பந்தின்...

தோற்றேன். உலகைச் சாதித்தேன், என்று பிற்பாடு சொல்லியிருக்கிறார் ரொனால்டோ.

கால்பந்து விளையாட்டின் மீது பகாசுர நிறுவனங்களின் நிர்ப்பந்தத்திற்கும் கட்டுப்பாட்டிற்கும் இதற்கு மேல் சான்று தேவையில்லை.

மூன்றாவதாக கால்பந்து விளையாட்டின் அரசியல் அம்சம் பற்றியது:— ஆர்ஜென்டினா இங்கிலாந்து இடையிலான போட்டியில் இங்கிலாந்தின் கோல் ஒன்றை நடுவர் நிராகரித்தபோது பிரித்தானிய மகாராணியார் நாற்காலியில் துள்ளிக்குதித்து No one amused by that என்று நடுவரைச் சாடியிருக்கிறார். கால்பந்து கழகப் பேச்சாளர் 'பாட்டியை விட பேரனுக்கு கால் பந்து அதிகம் தெரிந்திருக்கும், ராணிக்கு கால்பந்து நடுவரை விட அதிகம் தெரிந்திருக்கும் என்று நான் நம்பவில்லை', என்று அறிக்கை விட்டிருக்கின்றார். 'கால்பந்து காலிகள் தமது தேசத்துக்கு அவமானம் என ரோனி பிளேயரும், ஹெல்மட் கோலும் அறிக்கை விடுக்கிறார்கள், தேசிய கீதம் பாடாத வீரர் தேசவிரோதி என இங்கிலாந்து பத்திரிகைகள் விமர்சிக்கின்றன. 'யாரோ ஒருவரின் ஆலோசனையின் படி நடுவர் இயங்குகிறார்' எனக் குற்றம் சாட்டுகிறார் ஜேர்மன் அணியின் பயிற்றுவிப்பாளர். 'இன அடையாளம் பற்றிக் கவலையில்லை தேசபக்தி (Patriotism) இருந்தால் போதும்' என்கிறார் 'நஷனல் புரொண்ட்' தலைவரான பிரெஞ்சு பாசிஸ்ட் லூபென். பிரெஞ்சு அணியின் வெற்றி பல்கலாச்சார பிரான்ஸ் எதிர்காலத்துக்கான வெற்றி என்கிறார் ஜக் சிராக், டொனாலு, ஜியாபாப்டிஸ்டே போன்ற நடிகை, நடிகர்கள் தேசியப் பெருமிதம் வெளிக்காட்டுகிறார்கள்.

இதைப் போலவே ஐரோப்பியக் கிண்ணப் போட்டியின் போது இங்கிலாந்தின் நிறவெறிப் பத்திரிகை The sun நடத்திக் கொண்ட விதம் ஞாபகம் வருகிறது. இங்கிலாந்து அணியோடு ஜேர்மன் ஸ்பானிய அணிகள் மோதியபோது அது இரண்டாம் போர்க்கால யுத்த வெறியைத் தூண்டிவிட்டது. ஜேர்மன் ஸ்பானிய அணிகளை 'பாசிஸ்ட்' அணி என்று வசை பாடியது. எரிக் கான்டனோவை ஒரு ஆங்கில ரசிகன் இனத்துவேசத்தால் வசை செய்தது. மிகப்பெரிய பிரச்சனையாக, கான்டனோ எட்டியுதைத்த அவருக்கு தண்டனையும் தரப்பட்டது. இன்னும் கூட இங்கிலாந்தில் கால்பந்து விளையாட்டை ஆசியர்கள் விளையாட்டு மைதானம் சென்று பார்க்க முடியாமல் தான் இருக்கிறது. கால்பந்தின் அரசியல் என்பது தேசிய வெறியுடன், தேசியப்பெருமிதத்துடன் தவிர்க்கவியலாமல் பிணைக்கப் பட்டிருக்கிறது. ஆகவேதான் அமெரிக்க அணிக்கு எதிரான ஈரானது வெற்றியை [illegible] களுக்கு எதிரான வெற்றி என அறிவிக்கிறது ஈரானிய அதிபர் [illegible]. கால்பந்து என்பது இன்று இன, தேசிய, பல்கலாச்சார, இனவாத, பாசிச அரசியலுடன் தவிர்க்கவியலாமல் பிணைக்கப்பட்டிருப்பதைத்தான் அனுபவங்கள் காட்டுகிறது. அன்பும் சமாதானமும் நிலவுகிற உலகளாவிய கால்பந்துக்காக நாம் இன்னும் தொலைதூரம் பயணம் செய்ய வேண்டும்.

நான்காவது பிரச்சனையான பல்கலாச்சாரம் பற்றிய விவாதங்களின் மையமாக பிரெஞ்சு அணியின் வெற்றி இருந்தது. பங்கு பெற்ற நாடுகளிலேயே பல்கலாச்சார இன வேர்களைக் கொண்டவர்களை அதிகமாகக் கொண்ட நாடாக பிரான்ஸ் நாடு தான் திகழ்ந்திருக்கிறது. பல் கலாச்சாரம் தேசியம் பற்றிய விவாதங்கள் பிரான்சின் வெற்றியைத் தொடர்ந்து நடந்திருக்கிறது. இதுமட்டுமன்றி பெரும்பாலான ஐரோப்பிய அணிகளில் கறுப்பர்கள் அதிக அளவில் பங்குபற்றியிருக்கின்றார்கள்.

எந்த உலகக் கோப்பையை விடவும் இந்த உலகக் கோப்பை விளையாட்டில் தான் பல்வேறு இனக் குழுக்களும் பங்கு பெற்றிருக்கிறார்கள். மிகச் சமீபத்திய தேசமான குரோஷியா மூன்றாம் இடம் பெற்றிருப்பது இந்த விளையாட்டில்தான். ஒரு வகையில் உலக அரசியலின் உடனடி விளைவுக்களமாக உலகக் கோப்பை விளையாட்டு ஆகியிருக்கிறது.

ஐந்தாவதான தத்துவ அம்சம் பற்றிய விவாதம் 'எனக்குத் தோல்வி, பயமும் எனது இரண்டு பக்கங்கள் இரண்டில் ஏதாவது ஒன்று நிகழ்ந்தால் நானில்லை' என்கிறார் எரிக் கான்டனோ. மனிதனுக்கும் மனிதனுக்குமான உறவில் எதிர்கொள்வதும் உறவு கொள்வதும் தவிர்க்கவியலாமல் நிகழ்கிறது. உண்மையில் இது வாழ்வியல் அம்சம் மட்டுமல்ல வாழ்வின் அரசியல் அம்சமும் கூடத்தான். கால்பந்தில் குறிப்பிட்ட கால அவகாசம் வெற்றி தோல்வி நிச்சயிக்கப்பட்டு ஆக வேண்டும். எதிரி உண்டு ஆனால் வன்முறை இல்லை. வெல்லும் உத்வேகம் வேண்டும். அதேவேளை எதிரியின் மீது மரியாதையும், வீழ்ந்து விட்டால் கைகொடுத்து தூக்கிவிடும் நெருக்கமும் வேண்டும். முரட்டு நடவடிக்கை கொடுக்கவேண்டும். கட்டுப்பாட்டால் தன் அகத்தையும் வரைந்துக் கொள்ள வேண்டும். போராடும் குணமும் கட்டுப்படுத்திக் கொள்வதும் சமகாலத்தில் நிகழவேண்டும். வெற்றியும் தோல்வியும் ஒன்றென ஏற்கும் மனநிலை வேண்டும். முரண்பாடும் தீர்வும் மகிழ்வுமயில் தொடங்கிக் கொண்டிருக்கிறது எனும் சித்தம் வேண்டும்.

கால்பந்து கற்றுக் கொடுக்கும் இத்தனை காலம் குறித்த சிந்தனையும், வாழ்வு குறித்த அழகியல் அம்சமும் தான் தத்துவாதிகளையும் இடதுசாரிகளையும் இதன்மீது ஈடுபாடு கொள்ள வைக்கிறது. இந்தத் தத்துவ அம்சம் தான் கால் பந்து குறித்த எனது காதல் தன்மையை நிர்ணயிக்கிறது என்று நான் நம்புகிறேன். முதலிலிருந்தே கடைசிவரையிலும் ஐரோப்பிய அணி எதுவும் வரக்கூடாது. அது தவிர்த்த மூன்றாம் உலக அணியே வரவேண்டும் என நான் விரும்பினேன். இறுதியாட்டத்தில் பிரேசில் வரவேண்டும் என விரும்பினேன். பிரான்ஸ் வென்ற போதும் மகிழ்ச்சியடைந்தேன். காரணம் அல்ஜீரிய வேர்களைக் கொண்ட ஜிடானின் இரண்டு கோல்கள் தான் பிரெஞ்சு அணி வெற்றிபெறக் காரணமாக அமைந்தது. ஜிடான் நம்மில் ஒருவர்.




# அறுவடைக் காலம் வந்தா எலிக்கும் எட்டுக் கூத்தியார்...

மனுஷர் பெய்து முடிஞ்ச மாதிரி ஒரு மாசமா 'புட்போலிலை' ஆர் வெல்லுவினம் எண்டு பேசேக்கு... எதிர்பாத்து ஒரு மாதிரி முடிவுகளும் தெரியவந்திட்டுது. இங்கினை நாங்கதானாமோ என்னமோ எங்கட சனங்களும் உதிலை வலு மாடு பாட்டோட ரசிச்சதை இந்தமுறைதான் அதிகமாகக் காண முடிஞ்சது பாருங்கோ! இருந்தாலும் சில பெருக்கு உதுகளிலை 'இன்ரெஸ்ட்' இல்லையெண்டாலும் நேரம் தவறாம தொலைக்காட்சி பெட்டிக்கு முன்னாலை போய்க் குந்திவிடுவினம்! ஏனெண்டுக்கெண்டு கேட்டா, 'வெளியிலை போய் வார இடங்களிலை ஆரும் உதுகளைப் பற்றி கேட்டு, தெரியேல்லை எண்டா, பட்டிக்காடா நினைப்பினமாம். அதாலை வேற வேலையெல்லாம் விட்டிட்டு பாக்க வேண்டிக்கிடக்கு எண்டுச்சினம். இதைவிட கொஞ்சப் பேயள் உந்த பரீஸ் லாச்சப்பலிலை 'குவாட்ட பைனலிலை' (கால் இறுதி) வெண்டதுக்கு 'குவாட்டரும்', 'செமி பைனலிலை' (அரை இறுதி) வெண்டதுக்கு தொப்பி(பியர்) அடிச்ச வெறி முகப்பாத்திரம் கொண்டினமாங்கள். இன்னும் கொஞ்சப் பேர் பந்தயங்கள் கட்டி காசுகளை வாழைத்திக் கொண்டினம். சிலபேர் உதுகளைப் பாக்க முதலாளிமார் விடுமுறை தருகினம் இல்லை எண்டு முறைக்கிக்கொண்டு திரிஞ்சினம். எது எப்பிடியோ எங்கட சனங்களிலை முக்கால்வாசிக்கு மேலை நேரங்களை ஒதுக்கி ஒருமாதிரி பாத்து முடிச்சிட்டினம். உதுகள் எல்லாம் நடந்து முடிஞ்சி நாலு ஆறு முடியாம இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிற விசயங்கள் எங்களிட்ட நிறையா இருக்குது பாருங்கோ.

'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது' மனித நாகரிகம், குடும்ப வாழ்க்கை தொடங்கினதுக்கு ரெண்டாயிரம் ஆண்டுக்கு முன்னாலையே வள்ளுவர் சொல்லிவைச்சிட்டு போனவரெண்டு பெருமையா சொல்லிக் கொள்ளுறம். ஆனா நடைமுறை வாழ்க்கையிலை எல்லாம் இது சரிப்பட்டு வாறதெண்டா, அதுவும் இங்கினை குதிரைக் கொம்பாத்தான் இருக்குது! சிங்களவன் வெட்டுறான், சுடுறான் கொல்லுறான் எண்டு சொந்தம் அம்மான் தம்பி, மாமன் மச்சான்... எண்டு ஆளாளுக்கு சிதறிக்கொண்டு திசை போனவ 'இன்ரநெஷனல் லெவலிலை' பரந்து பட்டு வாழத்தொடங்கியிட்டம். அங்கையிருக்கேக்கை உடுபுடைவையிலை இருந்து உணவு வரைக்கும் வெளிநாட்டான் எண்டா வலு பெருமையா நினைச்சுக் கொண்டிருந்திட்டு, இங்கை வந்தாப்பிறகு இக்கரைக்கு அக்கரை மாதிரி கறிவேப்பிலை வரை [illegible] மரக்கறியளும், உடுபுடைவையளும், உடல் சினிமாக்களும் சிலபேருக்கு திகட்டிறதுக்கு வருகுது. பாத்தவதப் பாத்தாலே ஒரு சாதனை மாதிரி, இப்பிடி எல்லாத்தையும் அங்கினை இருந்து இறக்குமதி செய்து நாட்டை மட்டும் மாத்திக்கொண்டு எங்கட கலாச்சாரங்கள் கட்டுப்பாடுகள் எங்களைவிட்டுப் போகாமல் பேணி வாக்கிறம் எண்டு சொல்லி, இன்னொரு பக்கத்தாலை வேதனையான கன விசயங்களையும் வைத்துக்கொண்டுதான் வாறம்!

கலியாணம் ஆயிரங்காலத்து பயிரெண்டு பேச்சுக்கு மட்டும் சொல்லிக்கொள்ளுறம். இப்ப ஆயிரம் நாள் வாழுறதே பெரும்பாடாவெல்லோ கிடக்குது! நாள்கோள் பாத்து, பத்தாதுக்கு நல்ல நேரமும் குறிச்சு தாலி பேரை சொத்தோட 'வீடியோ'க்களும் எடுத்து வலு விமரிசையாகத்தான் வாழத் தொடங்கிறம். ஆனா எடுத்த 'வீடியோ' கொப்பி வாறதுக்குள்ளை (அது ஒரு ஆறுமாசம் ஒரு மாசம் செல்லும்) பிரிஞ்சு போறதுகளைத்தானே காண முடியுது! விவாகரத்தெண்டாலும் இப்ப எங்களுக்கு ஒரு பஷனாத்தான் போச்சுது கண்டா. ஜேர்மன், பிரான்ஸ், சுவிஸ் எண்டு நாட்டுக்குநாடு [illegible] பெருகிக் கொண்டுதான் போகுது!

வருமானத்துக்காவேண்டி ஒரு பக்கத்தாலை 'சட்டபூர்வமா' மட்டும் பிரிஞ்சிருக்கிறவையை விட, மனப்பூர்வமா பிரியிறவைதான் இப்ப எக்கச்சக்கமா வரும்போலகிடக்கு.

போனகிழமை உங்கைபொரு நாட்டிலை போனவிடத்திலை தெரிஞ்ச பெடியன் ஒருத்தனை சந்திக்க முடிஞ்சது. அவனுக்கு கலியாணம் நடந்தும் இப்ப ரெண்டு மூண்டு வருசமிருக்கும். அன்னைக்கு கண்டாப்போல எப்பிடியப்பா குடும்பம் போகுது, குழந்தைகுட்டி ஏதாவது இருக்கோ எண்டன். விவாகரத்துக்கு பதிவு செய்யிற நிலைமையிலை வந்து நிக்கிறம் எண்டுறான்! ஒருத்தரை உழைப்பிலை குடும்பத்தை கொண்டிழுக்கிறது கஷ்டமெண்டுதான் ரெண்டு பேரும் உழைக்க வெளிக்கிட்டது. இப்ப அது பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்கான கதையா எப்பவோ ஆகிப்போச்சுது! மனிசிக்காரி வேலை செய்யிற இடத்திலை தெரிஞ்ச தமிழர் ஒருத்தரும் வேலை செய்யிறார். போக்குவரத்துக்கு வசதியா இருக்குமெண்டு அவரை 'காரிலை'தான் போய்வரவிட்டது அவருக்கும் ரெண்டு மூண்டு பிள்ளையளுக்கு தேப்பன், ஒரு நம்பிக்கையிலைதான்..... இந்த நாளையிலை ஆரை நம்ப முடியுது...? இப்ப அவை ரெண்டு பேரும் சேர்ந்து வாழப் பிரியப்படுகினமாம்! இதுக்கை நான் ஏன் இடைஞ்சலா இருப்பான்? மனம் ஒத்துப் போகாம கீரியும் பாம்புமா சேர்ந்து வாழுறதைவிட பிரிஞ்சு போறது நிம்மதியும் நல்லதும்தானே எண்டு நான். அப்ப பாருங்கோவன்.... ரெண்டு குடும்பம் பிரிஞ்சு ஒரு குடும்பம் வாழப்போகுது. தங்கட குழந்தையளைப் பற்றி கூட அவையளுக்கு அக்கறை கிடையாது. உப்பிடித்தான் முன்னமும் ஒரு குடும்பம் பிரிஞ்சுபோனது. அவைக்கும் ரெண்டு பிள்ளையள். சட்டப்படி விவாகரத்து வாங்கிக் குடுத்த

> அவரை 'காரிலை'தான் போய்வரவிட்டது அவரும் ரெண்டு மூண்டு பிள்ளையளுக்கு தேப்பன், ஒரு நம்பிக்கையிலைதான்... இந்த நாளையிலை ஆரை நம்ப முடியுது...? இப்ப அவை ரெண்டு பேரும் சேர்ந்து வாழப் பிரியப்படுகினமாம்! இதுக்கை நான் ஏன் இடைஞ்சலா இருப்பான்? மனம் ஒத்துப் போகாம கீரியும் பாம்புமா சேர்ந்து வாழுறதைவிட பிரிஞ்சு போறது நிம்மதியும் நல்லதும்தானே! என்றுறான்.

தாயை, பிள்ளையள் பதினைஞ்சு நாளைக்கு தாயோடையும், பதினைஞ்சு நாளைக்கு தேப்பனோடையும் இருக்கிறதெண்டு தீர்ப்பாகிப்போச்சு. இதுக்கை குறுப்பிட்ட நாளுக்கை குழந்தையளைக் கொண்டு போய் விடாததாலை திரும்பவும் வழக்கு வைச்சு, கடைசியா இவையளின்ர பிடுங்குப்பாடுகளாலை அதுகளை அநாதை விடுதியிலை சேர்த்துப்போட்டு சனி ஒருத்தரும் ஞாயிறு ஒருத்தரும் போய்ப்பாக்கலாம் எண்டு சொல்லிப் போட்டினம். தாய்தேப்பன் இருந்தும் அதுகள் அநாதை விடுதியிலை வாழவேண்டிய நிலையைப் பாருங்கோவன்.

நாட்டிலை இருக்கேக்கை உவையாலை முடிவதும் ஊரவையை நடைமுறையாதெண்டு ஆளாளுக்கு பயந்து கட்டுப்பாடுகளோட இருந்ததால உப்பிடியான சமுதாயப் பிரச்சினையள் எழும்பிறது இல்லாமல்தான் இருந்தது. இங்கினை ஆர்கேக்க, ஆர்பாக்க எண்டுவியள். மழைக்கால் இருட்டெண்டாலும் மற்றது கொப்பிழுக்க பாயுது. நோக்கமும் சிந்தனையும் தெளிவா இருந்தா உப்பிடி மனசுகள் அலைபாயாது. ஏன் தடம் மாறிப் போகுதுகள், பெத்தவையிருந்தும் பிள்ளையள் ஏன் அநாதை விடுதியளிலை வாழப்போகுதுகள்?

**அருமைத்தம்பி**

உங்கள் அனைத்து வாகனத் தேவைகளுக்கும்
நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது
ஜவ்னா இறைச்சிக்கடை

# ஜவ்னா இறைச்சிக்கடை



ஆடு, மாடு, கோழி
இறைச்சி வகைகளை
மலிவான விலையில்
பெற்றுக்கொள்ள
விஜயம் செய்யுங்கள்



திங்கட்கிழமைகளில் சபரியப்பன் மளிகை
நிறுவனத்தில் எமது இறைச்சி வகைகளை
பெற்றுக்கொள்ளலாம்

## Jaffna Boucherie

70, Rue Louis Blanc, 75010 Paris. M°: la Chapelle
Tel: 01 40 35 46 47

விசேட கொள்வனவுகளுக்கு
விசேட விலைக்கழிவுகள்



# சூரிச் மாநகரில்

மரக்கறி + பலசரக்கு + மீன் +
றெடிமேற் ஆடைத் தினுசுகள் யாவும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
இன்றே விஜயம் செய்யுங்கள்.





## Rajah Asiya Center

J. Gabrielpillai
Stauffacherstrasse 104,
8004 Zurich.
Tel: 01 242 42 60



# வெளிவந்துவிட்டன

## ரமி யின்










RAMY RECORDS






சி. காந்தன் -
பாரிஸ் 18, பிரான்ஸ்.

❖ சந்திரிகாவுக்கும் ரதவத்தையாருக்கும் மோதலாமே உண்மையா குப்தனாரே?

✍ உண்மைதான், மாமா தனக்கு ருரிபறிக்கிறார் என்ற எண்ணம் மருமகளுக்கு வந்து விட்டதாம்.

வ. முரளிதரன் - பேர்ண், சூரிச்.

❖ எங்கே கதிர்காமரை இப்போதெல்லாம் காணவில்லையே?

✍ ரூபா பிரதமராகலாம் என்று எதிர்பார்த்தாராம். ரத்வத்தையார் போட்டிக்கு வந்துவிட்டதால் இலவுகாத்த கிளி கதை போல் சோகத்தில் மூழ்கி இருப்பதாக கேள்வி.

ம. பிரதீபன் - பாசல், சுவிஸ்.

❖ தங்களது தவறை திருத்திக் கொள்ள தயாராக இல்லாதவர்களிடம் நாம் செய்யக் கூடாதவை என்ன குப்தா?

✍ அவர்களுக்கு அறிவுரை கூறாமல் இருப்பது. அவர்களுடன் விவாதத்துக்குப் போகாமல் இருப்பது. அதிகமாகப் போகாமல் இருப்பது.

க. மங்கை -
சென்ஜேர்மன், பிரான்ஸ்.

❖ ஒரு மனிதன் எப்போது தவறு செய்ய ஆரம்பிக்கின்றான்?

✍ என்னை யாரும் அசைக்க முடியாது என்ற தவறான நினைப்பு வரும்போது.

த. இராஜையா - லண்டன்.

❖ இந்தியாவும், பாகிஸ்தானும் அணு ஆயுதங்களால் மோதினால் என்ன நடக்கும்?

✍ கோடிக்கணக்கான அப்பாவி மக்கள் அழிவார்கள்.

மு. கணேசலிங்கம் -
பாரிஸ் 18, பிரான்ஸ்.

❖ ஐரோப்பாவில் சீட்டுப் பிடிப்பது குற்றமா?

✍ சட்டப்படி பதிவு செய்யாத பெரிய அளவிலான பணக் கொடுக்கல் வாங்கல்கள் எல்லாம் சட்டவிரோதமானவை.

வ. ராஜீவ் - ஒஸ்லோ, நோர்வே.

❖ நமது தேசியத் தலைவரின் பெயரையும், மாவீரர்களின் தியாகத்தையும், தங்கள் சுயஇலாபத்துக்கு பாவிப்பவர்களையும் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

✍ நேரடியான எதிரியை விட இவர்கள் ஆபத்தானவர்கள்.

கி. ரொபின்சன் -
பலர்மோ, இத்தாலி.

❖ கவலையை அடக்க என்ன விருது குப்தா?

✍ கண்ணீர் விட்டு அழுங்கள். அல்லது உங்களுக்கு மிக வேண்டிய நம்பிக்கையான ஒருவரிடம் மனதில் உள்ள எதையெல்லாம் கொட்டித் தீர்த்துவிடுங்கள். இது நான் சொல்லவில்லை மனோதத்துவ நிபுணர்கள் சொன்னது.

ப. சுதாகரன் பேர்லின் ஜேர்மனி

❖ சிலர் தாங்கள் சாதி பார்ப்பதில்லை என்று சொல்கின்றனர். ஆனால் அவர்களுடைய செயல்கள் எல்லாம் 'சாதி' பார்க்கும் விதத்திலேயே அமைந்திருக்கிறது. இவர்கள் உண்மையில் நடிக்கிறார்களா? அல்லது அறியாமல் செய்கிறார்களா?

✍ இதிலே இரண்டு வகை உண்டு. முதலாவதுவகை நடிப்பவர்கள். இரண்டாவது வகையினர் அவர்களை அறியாமலே அப்படிச் செய்பவர்கள் பாம்புக்கு பல்லைப் பிடுங்கினாலும் கிட்டப்போனால் அது சீறிக்கொண்டு கடிக்கத்தான் வரும். அதுபோல்தான் இவர்களும். பழக்க தோசத்தை அவ்வளவு சுலபத்தில் மாற்ற முடியாது.

மு.கேதுராமன் -
புதுவை, இந்தியா.

❖ தன்னைத் தமிழினத் தலைவர் என்று சொல்லிக்கொள்கின்ற கருணாநிதி, வன்னியில் பல இலட்சக் கணக்கான மக்கள் பட்டினி கிடக்க தனது பிறந்தநாள் பவளவிழா நிகழ்ச்சிகளை ஆடம்பரமாக கொண்டாடியது முறையா?

✍ அவர் தான் தமிழினத் தலைவர் என்று சொல்லவில்லையே கழகக் கண்மணிகள் அல்லவா சொன்னார்கள்.

கி. சுமதி லவுசான் சுவிஸ்

❖ சாவைத் தடுக்க ஒரு வழி சொல்லுவீரோ குப்தனாரே?

✍ ஒரு வழியும் இல்லை. ஏனெனில் பிறந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிமிடமும் செத்துக்கொண்டுதான் இருக்கின்றோம்.

மு.சிவராம் -பாரிஸ் 20

❖ நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அந்தப் பெண் என்னைவிட சாதியில் குறைந்தவர். எனக்கு ஒரு தங்கை இருக்கிறார். நான் எனது காதலியை திருமணம் செய்துகொண்டால் எனது தங்கையின் வாழ்வு பாழாகிவிடும் என்று எனது பெற்றோர்கள் சொல்கின்றார்கள். எனக்கு உமது ஆலோசனை என்ன குப்தனாரே!

✍ பிரச்சினை உமது பெற்றோர்களின் மனத்தில்தான் இருக்கிறது. அவர்கள் தங்கள் சாதிப் பெருமையை நிலைநாட்ட நினைக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அவர்களது தவறை அவர்களுக்கு உணர்த்துவதற்கு போராட வேண்டும்.


## கீபோட் வகுப்புகள்

குறுகிய காலத்தில் சர்வதேச முறையில்
(International Method)
கீபோட் கற்பிற்கப்படும்

சனி:
ஞாயிறு: 8.00 மணி தொடக்கம் 13.00 மணிவரை

திங்கள்:
செவ்வாய்: 14.00 மணி தொடக்கம் 18.00 மணி வரை

ஆசிரியர் S.S தில்லைச்சிவம்
56, Rue Riquet, 75019 Paris. M°: Riquet
Tel: 01 40 37 56 69


# மரண அறிவித்தல்

இறப்பு: 26.07.98



இராஜேஸ்வரி
பொன்னுத்துரை



பொன்னுத்துரை
விஜியகுமார்

சுன்னாகம் ஈஸ்வரி காட் வெயர் ஸ்ரோர்ஸ் உரிமையாளரும், தெல்லிப்பளை விராங்கொடையைச் சேர்ந்தவருமான திரு. பொன்னுத்துரையின் மனைவியார் திருமதி இராஜேஸ்வரி அவர்களும், அவருடைய இளைய புதல்வனுமாகிய திரு. விஜியகுமாரும் 26.07.98 அன்று ராமேஸ்வரம் கடற்பரப்பில் அகால மரணமானார்கள் என்பதை மிக ஆழ்ந்த துயரத்துடன் அறியத் தருகின்றோம்.

இத்தகவலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல் தருபவர்கள்:
மகன் சிவகுமார், நந்தகுமார், ஜெயக்குமார் (பிரான்ஸ்), மகள் சிவனேஸ்வரி (இந்தியா), மகள் ஞானேஸ்வரி (லண்டன்), மருமகன் சிவராஜா (இந்தியா), மருமகன் பிருந்தாபன் (லண்டன்), மருமகள் விசாலினி (பிரான்ஸ்), மருமகள் அமுதராணி (பிரான்ஸ்) மற்றும் பேரப்பிள்ளைகளும்

# கடலில் மூழ்கிய கப்பலிலிருந்து தப்பிய ஒருவர் தனது உயிரை அர்ப்பணித்தார்

திருமணமாகி இரண்டு குழந்தைகளின் தந்தையான 48 வயதுடைய பில் குயின்லான் எனிபவர் தனது மருமகனான டேவிட் துக்காஸ் உடன் கலிபோர்னியாவில் உள்ள சான்டியாகோ என்ற இடத்திலிருந்து 4000 மைல் தூரமுள்ள கலபாகொஸ் என்ற தீவுக்கு கப்பலோட்டிச் சென்றனர்.

400 மைல்கள் தாண்டியபோது பெரும் புயல் காற்று வீசியதால் அவர்கள் சென்ற அந்த சிறிய கப்பல் சரிந்து கடலில் மூழ்கியது. பில் குயின்லானும் மருமகனும் ஒன்றுபட்டு தமது கப்பலின் கீழ்ப்பக்கமாக உள் சென்று அங்கிருந்த ஆபத்திற்கு உதவும் சிறிய படகை எடுத்துக்கொண்டு ஒரு மணித்தியாலம் நீருக்குள் போராடி வெளியே வந்து படகில் ஏறிக்கொண்டார்கள். அப்போது தங்கள் உணவு, தண்ணீர் தேவைகளை நினைத்து மீண்டும் இருவரும் போய் மூழ்கிய கப்பலின் உள்ளே இருந்த உணவு வகைகளையும் தண்ணீரையும் எடுத்துக்கொண்டு வந்தார்கள்.

இரண்டாவது தடவை மருமகன் படகில் இருந்து கொண்டு மாமனின் இடுப்பில் கயிற்றைக் கட்டி கயிற்றின் ஒரு பக்கத்தைப் பிடித்துக்கொண்டிருக்க, பில் நீந்திச் சென்று உணவை எடுக்க முயன்றபோது அவரின் காலில் காயம் உண்டாகி இரத்தம் வெளியேறியது. இந்த இரத்த வாடையால் கவரப்பட்ட சுறாமீன், மாமனை கொல்ல வருவதைக் கண்ட மருமகன், தான் பிடித்திருந்த கயிற்றை மிக விரைவாக இழுத்து மாமனைத் தப்ப வைத்து விட்டான். ஆனால் அவரால் போதிய அளவு உணவை கப்பலில் இருந்து கொண்டுவர முடியவில்லை. பின்பு அவர்கள் சிறிய படகில் பயணத்தைத் தொடர்ந்தனர்.

காற்றுக் குறைந்தது. ஆனால் குளிர் மிகவும் தொடங்கியது. ஆபத்திற்கு உதவும் அந்த சிறிய படகின் மேல் இருவரும் குளிர் தாங்க முடியாமல் 3 நாட்கள் மிகவும் அல்லல்பட்டனர். சாதாரணமாக கப்பல்கள் செல்லும் பாதையை விட்டு இவர்கள் அப்பால் சென்றுவிட்டபடியால், வேறு கப்பல்களின் உதவியும் கிடைக்கவில்லை. அந்த நேரம் ஒரு தண்ணீர் போத்தலும், 2 பெட்டி சாப்பாடும் மாத்திரமே அவர்கள் வசம் இருந்தது.

இதனால் கவலையடைந்த பில், 'நாங்கள் இப்படி எத்தனை நாட்களுக்கு படகில் நிற்கதியாக இருக்கப் போகிறோம் என்பது கடவுளுக்குத்தான் தெரியும்' என மருமகனின் காதில் மெதுவாகக் கூறிய பின், திடீரென குதித்து மூழ்கிவிட்டார். மருமகன், 'மாமா திரும்பி வாருங்கள் வாருங்கள்' என்று அலறினான். பாவம் அவனுக்கு நீந்தவும் தெரியாது. 'எனது மாமனைப் போல் துணிவுள்ளவர்கள் யாருமில்லை. என்னைக் காப்பாற்றத் தனது உயிரையே போக்கி விட்டார்' என வேதனைப்பட்டான்.

ஆனால் அடுத்த நாள் மெக்சிகோவில் மீன் பிடிக்கும் படகில் சென்றவர்கள் அவனைக் கண்டு காப்பாற்றி விட்டனர். ஒரு நாள் கூடுதலாக பொறுத்திருந்தால் இருவரும் காப்பாற்றப்பட்டிருப்பார்கள். ஆனால், மாமன் பில் அவசரப்பட்டு செய்த தவறினால் அவருடைய உயிர் பிரிந்துவிட்டது. துக்காஸ், மாமன் தனக்காக வைத்த உணவையோ, நீரையோ சாப்பிடவில்லை. அவன் காப்பாற்றப்பட்டு மயங்கி வந்து தனது மாமனாரின் வீட்டுக்குச் சென்று, அவர் தன்னிடம் கொடுத்திருந்த இரண்டு பொருட்களைத் தனது மாமியிடம் கையளித்தான். அதில் ஒன்று மாமனாரின் கையிலிருந்த திருமண மோதிரம் அடுத்தது 'I love You, I am sorry' என்று வாக நகத்தால் பதிக்கப்பட்ட ஒரு தாள்.

மாமனார் செய்த தவறை நினைத்து எல்லோரும் கவலைப்பட்டனர்.

- கவிதா -

**வரலாற்றில் பதிவாகிய அழிவுகளும் தவறுகளும்**

# நெதர்லாந்தில் 83 ஜூலை படுகொலை ஒன்றுகூடல்

சிறிலங்காப் பேரினவாத அரசின் தமிழ் மக்களுக்கெதிராக நடாத்தப்பட்ட படுகொலைகளில் உச்சக்கட்டப் படுகொலையான 83 ஜூலைப் படுகொலையை நினைவு கூர்ந்து கடந்த 23-07.98 வியாழன் காலை 11 மணி முதல் 3 மணி வரை மாபெரும் ஒன்றுகூடல் டென்காக் நகரில் பாராளுமன்றத்தின் முன்பு தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவால் நடாத்தப்பட்டது. நெதர்லாந்தின் பல பிரதேசங்களில் இருந்தும் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் உணர்வு பூர்வமாக இதில் கலந்து கொண்டனர்.

'சிறிலங்கா அரச படைகள் தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும்' என எழுதப்பட்ட கறுப்புப் பட்டியினை அணிந்து கொண்டும், தமிழ் மக்களுக்கெதிரான சிங்கள அரச பயங்கரவாதத்தினை சித்தரிக்கும் நிழற்படங்கள், பதாகைகளைத் தாங்கியவண்ணமும் 'சிங்கள இராணுவமே தமிழ்ப் பகுதிகளைவிட்டு வெளியேறு', 'சந்திரிகா பேசுவது சமாதானம் செய்வது போர்' போன்ற இன்னும் பல கோஷங்களை எழுப்பிய வண்ணமும் தமிழ் மக்கள் அங்கு காணப்பட்டனர்.

பிற்பகல் 2 மணியளவில் நெதர்லாந்துப் பாராளுமன்றக்குழுவிடம் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுப் பொறுப்பாளர் திரு. போல் அருமைநாயகம் அவர்களால் தமிழ்த்தேசிய இனத்தின் பல கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றும் கையளிக்கப்பட்டது. பின்பு அங்கு கூடியிருந்த தமிழ் மக்கள் மத்தியில் உரையாற்றிய பொறுப்பாளர், பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்ற போதும் சில நூறுபேரே இதில் கலந்துகொண்டது மிகவும் மனவருத்தத்திற்குரியது என்பதனையும் சந்திரிகா அரசு சமாதானத்திற்கான போர் என சர்வதேச அரங்கில் பொய்வேடம் பூண்டு தனது சகல வளங்களையும் ஒன்றுதிரட்டி எம் தாயகத்தில் எம்மினத்தை அழித்தொழிப்பு வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் இவ்வேளையில், எம் தாயக மண்ணை விட்டு புலம்பெயர்ந்து அந்நிய மண்ணில் வாழ்ந்து வருகின்ற தமிழர்களாகிய நாங்கள் சந்திரிகா அரசின் பொய் முகத்திரையை கிழித்தெறிந்து உண்மை முகத்தினை வெளிக்கொணர சர்வதேச அரங்கில் கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது. எனவே இப்படியான ஒன்றுகூடல்களில் ஒருமித்துக் குரல்கொடுக்க பெருந்திரளாக தமிழ்மக்கள் அணிதிரள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

நெதர்லாந்து மக்களுக்கு நெதர்லாந்து மொழியில் ஆயிரக்கணக்கான துண்டுப்பிரசுரங்கள் அங்கு விநியோகிக்கப்பட்டது. இவ் ஒன்றுகூடலுக்கு நெதர்லாந்தின் தேசிய வானொலி மற்றும் பல தேசியப் பத்திரிகைகளின் நிருபர்கள் சமூகம் அளித்திருந்தனர். இவ் ஒன்றுகூடலுக்கு முக்கியத்துவம் கொடுத்து நெதர்லாந்து தேசிய வானொலி 22.07.98 புதன் இரவு தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் நேரடி தொலைபேசிப் பேட்டியினையும் ஒலிபரப்பியிருந்தது குறிப்பிடத்தக்கது.


இப் பேட்டியின்போது 83 ஜூலைப் படுகொலை பற்றியும் தமிழ்த்தேசிய இனத்தின் தவிர்க்கமுடியாத ஆயுதப் போராட்டத்தின் பிரசவம் பற்றியும் விபரமாக எடுத்துரைக்கப்பட்டது.

Tamileelam Archive

சுளிபுரம் பறாளை சித்தி விநாயகர் துணை

கருமாரி மூவிஸ் வழங்கும்

புரட்சி தமிழன்
சத்தியராஜ்
குஷ்பூ
மந்தரா
மணிவண்ணன்
S.V சேகர்
மற்றும் பலரின்
நடிப்பில்



யுவன்சங்கர்ராஜ இசையில்
பல வெற்றிப்படங்களை வழங்கிய
ராஜ்கபூர் இயக்கத்தில்

கல்யாணம் கலாட்டா

இடம்: ESPACE CINEMA
AUBERVILLIERS QUATRE CHEMINS
M° : Quatre Chemins

01.08.98 சனி 6.15 - 9.15
02.08.98 ஞாயிறு 6.15 - 9.15
03.08.98 திங்கள் 6.15 - 9.15

தொடர்புகளுக்கு அனைத்து வர்த்தக ஸ்தாபனங்களும் 24 மணி நேர தொடர்புகளுக்கு : 01 48 34 11 59

# ஈழமுரசு வாசகர் கருத்துக் கணிப்பு - 2

முதல் நாள் முதலிருந்து வெளிவரும் தமிழ் தேசியப் பத்திரிகை என்ற வகையில் ஈழமுரசு தன்னுடைய பயணப் பாதையில் தனது பணியை சுய மதிப்பீடு செய்து கொள்வதற்காக வாசகர் கருத்துக் கணிப்பு ஒன்றை நடாத்துவதற்கு முயன்றிருக்கிறது. ஈழமுரசினுடைய வளர்ச்சியிலும் அதனுடைய வருகையிலும், தரத்திலும் அக்கறை கொண்ட அனைத்து வாசகர்களும் இந்தக் கருத்துக் கணிப்பில் இயன்றவரை பங்கெடுத்து ஈழமுரசு முகவரிக்கு இந்தப் படிவத்தை அனுப்பி வைத்து எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். - ஆர்

1. நீங்கள் ஈழமுரசின் சந்தாதாரரா? ஆம் ☐ இல்லை ☐ [ஆம் எனில் சந்தா இல ......]
2. சந்தாதாரர் இல்லை எனில், மாதத்தில் எத்தனை முறை ஈழமுரசு வாங்குகின்றீர்கள்?
   வாரந்தோறும் ☐ இரண்டு வாரத்துக்கு ஒரு முறை ☐ ஒரு மாதம் மட்டும் ☐ எப்போதாவது ☐
3. ஈழமுரசு இதழைப் படிக்க எவ்வளவு நேரம் செலவு செய்கின்றீர்கள்?
   1/2 மணி நேரம் ☐ 1 மணிநேரம் ☐ 2 மணிநேரமும் ☐ அதற்கு மேலும் ☐
4. கீழே தரப்பட்டுள்ள ஈழமுரசின் பக்கங்களை எப்படிப்படித்து வருகின்றீர்கள்?

| | வழக்கமாக | எப்போதாவது | படிப்பதேயில்லை |
|---|---|---|---|
| சாஸ்திரம் ...... | ☐ | ☐ | ☐ |
| சினிமா ...... | ☐ | ☐ | ☐ |
| சிறுகதை ...... | ☐ | ☐ | ☐ |
| பெண்கள் ...... | ☐ | ☐ | ☐ |
| சிறுவர் ...... | ☐ | ☐ | ☐ |
| நெடுங்கதை ...... | ☐ | ☐ | ☐ |
| தொடர்கதை ...... | ☐ | ☐ | ☐ |
| அறிவு + நகைப்பு ...... | ☐ | ☐ | ☐ |
| அருமைத்தம்பி ...... | ☐ | ☐ | ☐ |
| [illegible] ...... | ☐ | ☐ | ☐ |
| நடைபாதைக் குறிப்பு ...... | ☐ | ☐ | ☐ |
| கேள்வி பதில் ...... | ☐ | ☐ | ☐ |
| நாற்று ...... | ☐ | ☐ | ☐ |
| விளையாட்டு ...... | ☐ | ☐ | ☐ |
| புகலிடம் ...... | ☐ | ☐ | ☐ |
| அரசியல் பார்வை ...... | ☐ | ☐ | ☐ |
| பல்சுவையர் ...... | ☐ | ☐ | ☐ |
| ஆசிரியர் தலையங்கம் ...... | ☐ | ☐ | ☐ |
| அரசியல் ஆய்வுகள் ...... | ☐ | ☐ | ☐ |

5. ஈழமுரசில் வரும் செய்திகள் எப்படியிருக்கின்றன. அவற்றை விரும்பிப் படிக்கின்றீர்களா?

| | விருப்பம் | | | தரம் | | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகம் | ஓரளவு | குறைவு | நல்லது | பரவாயில்லை | மோசம் |
| உலகம் ...... | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| இந்தியா ...... | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| தமிழீழச் செய்தி ...... | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| வாழ் செய்தி ...... | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| உட்பக்க செய்தி (பொது) ...... | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |
| முன்-பின் பக்கங்கள் ...... | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ | ☐ |

6. நீங்கள் ஈழமுரசின் நிரந்தரமான வாசகராக அல்லது சந்தாதாரராக இருந்தால் எதற்காக ஈழமுரசை வாங்குகின்றீர்கள்?
   செய்திகளுக்காக ...... ☐
   [illegible] அரசியல் ஆய்வுகளுக்காக ...... ☐
   இலக்கிய விடயங்களுக்காக ...... ☐
   வேறு விடயங்களுக்காக ...... ☐ [விபரம் குறிப்பிடவும்]
7. நீங்கள் எப்போதாவது ஈழமுரசு வாங்குபவராக அல்லது முதல் தடவையாக ஈழமுரசு வாங்குபவராக இருந்தால், எந்த அடிப்படையில் அதை வாங்கத் தீர்மானித்தீர்கள்?
   ★ தலைப்புச் செய்திகளால் ஈர்க்கப்பட்டதால் ☐
   ★ கடைகளில் ஒட்டப்பட்டிருந்த ஈழமுரசு விளம்பரப் பலகையில் உள்ள கட்டுரைத் தலைப்புகளைப் பார்த்து ☐
   ★ ஈழமுரசில் நல்ல விடயங்கள் வருவதாக நண்பர்கள் சிபாரிசு செய்ததனால் ☐
8. ஈழமுரசில் இடம்பெறும் கலைந்த சொற்கள் சொற்சிலம்பம், உங்களுக்கு திருப்தியளிக்கிறதா? ஆம் ☐ இல்லை ☐
   இல்லையென்றால் காரணம் ......
9. ஈழமுரசின் கீழ்வரும் அம்சங்களில் உங்கள் கருத்தை குறிப்பிடுங்கள்

| | மிகச் சிறந்தது | நல்லது | மோசம் |
|---|---|---|---|
| [illegible] ...... | ☐ | ☐ | ☐ |
| செய்திகளின் மொழிநடையும் அமைப்பும் ...... | ☐ | ☐ | ☐ |
| கட்டுரைகளின் [illegible] உள்ளடக்கமும் ...... | ☐ | ☐ | ☐ |
| பத்திரிகையின் வடிவமைப்பு ...... | ☐ | ☐ | ☐ |
| முன்பக்க வடிவமைப்பு ...... | ☐ | ☐ | ☐ |
| பத்திரிகையின் [illegible] ...... | ☐ | ☐ | ☐ |

10. உங்கள் வீட்டில் ஐரோப்பிய தமிழ் வானொலிகளை கேட்கும் வாய்ப்புண்டா?
    ஆம் ☐ இல்லை ☐
11. ஈழமுரசில் விசேடமான தொடர்கள் கட்டுரைகள் இடம்பெறவேண்டும் என்று விரும்புகின்றீர்களா? ஆம் ☐ இல்லை ☐
    விரும்பினால் - எந்தமாதிரியான விடயங்கள் என்று குறிப்பிடுக ......
12. ஈழமுரசு இதழை மேம்படுத்த உங்கள் ஆலோசனைகள் ......

பெயர்: ......
ஆண் ☐ பெண் ☐
முகவரி: ......
...... நாடு ......
தொலைபேசி இலக்கம்: ......
தொலைநகல் இலக்கம்: ......

வயது: 25 க்கு கீழ் ☐ 25-35 வரை ☐ 35 க்கு மேல் ☐
உங்களது வாசிப்பு நிலை
[illegible] பெறுபவர் ☐
[illegible] பெறுபவர் ☐
[illegible] பத்திரிகை [illegible] ☐

ஈழமுரசு முகவரிக்கு இப் படிவத்தை அனுப்பி வைக்கவும்

# சொற்சிலம்பம்

## போட்டி எண் – 9

**ழி - அ - இ - ஏ - க - கி - த் - கு - கொ - சு - செ - த - ப - ம - வ - வி - ல் - தெ - தா.**

இங்கு காணப்படும் எழுத்துக்களைக் கொண்டு 15 சொற்கள் ஆக்கப்பட வேண்டும். சொற்கள் 5 எழுத்தில் மாத்திரம் அமைய வேண்டும். எந்த எழுத்திலும் சொற்கள் ஆக்கலாம். ஆனால் முதல் ஆக்கப்படும் சொல் எந்த இறுதி நான்கெழுத்தில் முடிகிறதோ, அதே நான்கெழுத்திலேயே ஆக்கப்படும் சொற்கள் அனைத்தும் முடிவுபெறல் வேண்டும்.

மேலதிகமான எந்த எழுத்தும் சேர்க்கக்கூடாது.

மேலுள்ள எந்த எழுத்தும் விடுபடக்கூடாது.

1) ...... 11) ......
2) ...... 12) ......
3) ...... 13) ......
4) ...... 14) ......
5) ...... 15) ......
6) ...... 16) ......
7) ...... 17) ......
8) ...... 18) ......
9) ...... 19) ......
10) ...... 20) ......

'சொற்சிலம்பம்' எண்–9 இற்கான விடைகள் வந்து சேரவேண்டிய

**இறுதி நாள்: 07.08.98**

*(போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது)*

**விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:**

சொற்சிலம்பம்

ஈழமுரசு - **22, Rue Perdonnet, 75010 Paris, France.**

பெயர்: ......
முகவரி: ......
......
......
பிறந்த திகதி: ......
சந்தாதாரராயின் சந்தா இல: ......

**சொற்சிலம்பம் போட்டி எண்: 8 இற்கான மாதிரி விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| கர்வம் | கலகம் | கம்பம் | கதுப்பு |
| கலசம் | கப்பம் | கலசம் | கயல்ம் |
| கருமம் | கரகம் | கழகம் | கவனம் |
| கதம்பம் | கம்பளம் | கர்ப்பம் | கற்பகம் |

இன்னும் பல...

*சொற்சிலம்பம் –8 இற்கு சரியான பதில் அனுப்பியவர்களில் குலுக்கல்முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்*

1) திருமதி இ. சற்குணதேவி
   98000 M.C.R., Monaco.
2) திருமதி V. சந்திரகாசன்
   75019 Paris, France.
3) பிரான்கோ கிறிஸ்ரியன்
   51429 Bergisch Gladbach, Germany.
4) ஜோன் பப்டிஸ் தவமணி
   95800 Cergy St. Christophe, France.
5) இராசேந்திரன் ரேவதி
   3800 Interlaken, Swiss.

*இவர்களுக்குரிய பரிசு காலக்கிரமத்தில் பாரிஸ் மக்கள் கடை நிறுவனத்தினரால் அனுப்பிவைக்கப்படும்.*

போட்டியில் கலந்துகொண்டு சரியான விடைகளை எழுதி அனுப்பும் வாசகர்களில், குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்தெடுக்கப்படும் ஐவருக்கு **பாரிஸ் மக்கள் கடை** தாபனத்தினரால் பெறுமதி மிக்க பரிசில்கள் அனுப்பி வைக்கப்படும்.

சொற்சிலம்பம் எண்–9 இற்கான விடையும், சொற்சிலம்பம் எண்–10 உம், 13 - 19 ஓகஸ்ட் 98 ஈழமுரசில் வெளிவரும்.

**ஆக்கம்: சவேபு. சஞ்சுராஜா**




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



## நாணயமாற்று விகிதம்

| | $ | DM | £ | FFr | S.Fr |
|---|---|---|---|---|---|
| நியூயோர்க் | – | 1.78 | 0.60 | 5.97 | 1.49 |
| பிராங்பேட் | 0.56 | – | 2.95 | 0.30 | 1.19 |
| லண்டன் | 1.66 | 0.34 | – | 0.10 | 0.40 |
| பாரிஸ் | 0.17 | 3.35 | 9.89 | – | 0.25 |
| சூரிச் | 0.67 | 0.84 | 2.48 | 3.99 | – |
| பம்பாய் | 42.39 | 23.80 | 70.31 | 7.09 | 28.34 |
| கொழும்பு | 65.40 | 36.73 | 108.48 | 10.95 | 43.72 |


## வாகனங்கள் விற்பனைக்கு

நல்லநிலையில் உள்ள Ford Transit Diesal வான் (9 இருக்கைகள் கொண்டது) (Année 91, Km 135000) விற்பனைக்குண்டு.

**விலை பேசித்தீர்மானிக்கலாம்.**

Audi 80 Diseal வாகனம் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு: 06 11 36 94 44


# 15 பொலிஸ் அதிகாரிகள் அமெரிக்கா சென்றனர்

குண்டுத் தாக்குதல் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொள்ளவென சிறீலங்காவிலிருந்து 15 பொலிஸ் அதிகாரிகள் அமெரிக்காவிற்குச் சென்றுள்ளதாகத் தெரியவருகிறது. கடந்த 25ம் திகதியன்று அமெரிக்கா பயணமாகிய பொலிஸ் அதிகாரிகள் குண்டுத் தாக்குதல்களை எவ்வாறு தடுப்பது என்பது குறித்தான பல பயிற்சிக் கருத்தரங்குகளில் கலந்துகொள்ள உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு நகரில் அடிக்கடி மேற்கொள்ளப்படும் குண்டுத் தாக்குதல்கள் சிறீலங்கா அரசிற்கு பெரும் இழப்புக்களை ஏற்படுத்தி வருவதால் இது தொடர்பான தடுப்பு நடவடிக்கைகளில் சிறீலங்கா அரசு ஈடுபட வேண்டும் என்ற அமெரிக்க அரசின் கரிசனையின் விளைவே இப் பயிற்சி கருத்தரங்கு எனவும் தெரியவருகிறது.




சார்க் உறுப்பினர்களை வரவேற்க சிறீலங்கா செங்கம்பளத்தை விரிக்கிறது

—செய்தி

நன்றி: 'TWT'

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### சார்க் மாநாட்டு....

தெரிவித்துள்ளார். சார்க் மாநாட்டுப் பிரதிநிதிகள் தங்கியிருக்கும் தாஜ்சமுத்திரா விடுதியின் சுற்றுப் புறங்கள் வாழும் பொதுமக்கள் நுழைவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன் வடகிழக்குப் பகுதிகளில் இருந்து கொழும்பிற்கு வருவோர், கொழும்பில் தங்கியிருக்கும் தமிழர்கள் ஆகியோர் மீதும் விசேட கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது. இது தொடர்பான எச்சரிக்கைகள் அரச செய்தி ஊடகங்களின் மூலம் அடிக்கடி வெளியிடப்படுவதால் சிங்கள மக்கள் யாவரும் தமிழர்கள் அனைவரையும் சந்தேகக்கண்கொண்டே நோக்கி வருகின்றனர்.

இதேவேளை தமிழ் மக்கள் பெருமளவு வசிக்கும் விடுதிகளிலும் பொலிசாரினால் முற்றுகையிடப்பட்டு கடுமையான தேடுதல் வேட்டைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். சில விடுதிகள் மூடப்பட்டதன் காரணமாக பல தமிழ் மக்கள் நிர்க்கதியான நிலையில் விடப்பட்டுள்ளனர்.

பிந்திக் கிடைத்த செய்திகளின்படி கொழும்பில் இறுக்கமான பாதுகாப்பு நிலவி வருவதனால் தமிழ் மக்கள் வீடுகளிற்குள்ளே முடங்கியுள்ளதாகவும் தெரியவருகிறது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### கறுப்பு ஜூலை....

கலந்துகொண்டிருந்தனர்.

மெழுகுவர்த்திகளை தாங்கியவாறு நடந்த இந்த ஊர்வலத்தின் முடிவில் பேரவையின் தமிழர் கூட்டமைப்பின் இணைப்பாளர் திரு பாலசுந்தரம், தமிழர் புனர்வாழ்வுக்கழக பிரான்ஸ் செயலகத்தைச் சேர்ந்த திரு விநாயகமூர்த்தி ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் சகல மெழுகுவர்த்திகளும் சதுக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுக்கல்லின் முன்னால் வைக்கப்பட்டு சர்வதேசம் எங்கும் மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாகும் மக்களும் நினைவுகூரப்பட்டனர்.

இதேவேளை ஜேர்மனியில் நூலகப் படுகொலையின் நினைவு கூரப்பட்டு ஜேர்மனியின் சகல பிரதான நகரங்களிலும் ஜேர்மன் மொழியிலான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

தமிழ் தொழிலாளர்கள் கறுப்பு ஜூலை வாரத்தில் கறுப்புப் பட்டிகளை அணிந்து வேலைக்கு சென்றனர். ஜேர்மன் தொழிலாளர்களுக்கு கறுப்பு ஜூலை பற்றி விளக்கப்பட்டது.

ஜேர்மன் தலைநகர் பொன் நகரிலுள்ள சிறீலங்கா தூதுவராலயத்தின் எதிரே கூடிய மக்கள் சிறீலங்கா அரசின் இனப் படுகொலைகளை கண்டித்து நான்கு மணிநேரமாக கோஷங்களை கோசித்தனர்.

# சிறீலங்காவின் புதிய பொலிஸ்மா அதிபராக லக்கி கொடித்துவக்கு

தற்பொழுது பதவியிலுள்ள சிறீலங்காவின் பொலிஸ்மா அதிபரான W.V. இராஜகுரு அவர்கள் ஓகஸ்ட் 31ம் திகதியுடன் ஓய்வுபெற உள்ளதால் புதிய பொலிஸ்மா அதிபராக லக்கி கொடித்துவக்கு நியமிக்கப்படலாமென பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது புதிய பொலிஸ்மா அதிபரை நியமிப்பது தொடர்பாக ஆராயப்பட்ட பின்னரே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது பொலிஸ்மா அதிபராக உள்ள இராஜகுரு மீது பல ஊழல் மோசடிக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் 60 மோப்ப நாய்கள்

கொழும்பில் நடைபெற உள்ள சார்க் உச்சி மாநாட்டிற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளின் ஒரு நடவடிக்கையாக வெடிமருந்துகளை இனம் கண்டு பிடிக்கும் 60 மோப்ப நாய்கள் கொழும்பு நகரில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. அத்துடன் 6000 பொலிசாரும் மற்றும் முப்படையினரும், விசேட அதிரடிப்படையினரும் மாநாட்டிற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### மூன்று இந்திய...

ஈழத்தமிழ் அகதிகள் பயணம் செய்த படகு மூழ்கிய செய்தி இந்திய கரையோரக் காவற்படையைத் தொடர்ந்து இந்திய பாதுகாப்பு அமைச்சு இவ் விவகாரங்கள் தொடர்பாக தீவிர கண்காணிப்புக்களை மேற்கொண்டு வருகிறது. இவ் அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் இது தொடர்பான விபரங்களை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகிறார்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### படகு விபத்திற்கு...

களைத் தெரிவித்து மதிமுக பொதுச் செயலாளர் திரு வை.கோபால்சாமி, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் ஆகியோர் அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.


*எழுத்தாளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!*

**பாரிஸ் தமிழர் கல்வி நிலையம் 12வது ஆண்டாக நடாத்தும்**

## சிறுகதை – கவிதைப் போட்டி

*தமிழ் இலக்கிய எழுத்தாளர்களிடமிருந்து தரமான, சிறந்த சிறுகதைகள், கவிதைகள் போட்டிக்காக எதிர்பார்க்கப்படுகின்றன.*

*முதலாவதாக தேர்ந்தெடுக்கப்படும் சிறுகதைக்கும், கவிதைக்கும் பாரிஸ் தமிழர் கல்வி நிலையத்தினால் தங்கப்பதக்கங்கள் பரிசாக வழங்கப்படும்.*

### எழுத்தாளர்களின் கவனத்திற்கு

- ★ போட்டியின் நெறிமுறைகளுக்கமைய 21X29 (A4) வெள்ளைத் தாளில் எழுதப்பட்டு, 10 பக்கங்களுக்கு கூடாமல் காலத்துடன் ஒட்டிய சிறுகதையாக இருக்கவேண்டும். அத்துடன் ஏற்கனவே பிரசுரிக்கப்படாத கதைகள், கவிதைகள், பிறமொழித் தழுவல்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதனையும் அறியத் தருகின்றோம். சொந்த ஆக்கங்களே போட்டிக்கு எடுத்துக் கொள்ளப்படும்.
- ★ தேர்ந்தெடுக்கப்படும் சிறுகதை, கவிதை என்பன பாரிஸ் தமிழர் கல்வி நிலையத்தின் ஆண்டு நிறைவு மலரான "உன்னையே நீ அறிவாய்" மலரில் பிரசுரிக்கப்படும்.
- ★ நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானதும், முடிவானதுமாகும். ஆக்கங்கள் யாவும் சொந்த முகவரியிட்டு 30.09.98க்கு முன்பாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

வளர்ந்துவரும் எழுத்தாளர்களே!
வளர்த்துவரும் எழுத்தாளர்களே!
உங்கள் இலக்கிய ஆற்றலை வெளிப்படுத்துங்கள்.
அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாதீர்கள்.

ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி

P.E.C.C.
C/0. Mr. R. Chestamanthan
15, Rue Desargues.
75011 Paris, France.

எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக இப்போட்டியை பாரிஸ் தமிழர் கல்வி நிலையம் தொடர்ந்து 12வது ஆண்டாக நடாத்துகின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் எழுத்தாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

இங்ஙனம் நிர்வாகக்குழு



# AMV

IMPORT - EXPORT

அனைத்து மீன் வகைகளும் மொத்த விலையில் கொடுக்கப்படும்.
மரக்கறி வகைகளும் மலிவான விலையில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். Rungis மரக்கறி வகைகளும் மொத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

208, Rue du Fbg. St. Denis,
75010 Paris.

ஏற்றுமதி இறக்குமதியாளர்கள்

Tel: 01 44 72 91 25
Fax: 01 44 72 91 30

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

மேற்கு லண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
Nº: 199, The BROADWAY, Southall, Middx. T.P: 0181 / 813 9126

# படகு கவிழ்ந்து 45 பேர் பலி

## அகதிகளாக சென்றபோது நிகழ்ந்த கொடுமை

## கரையொதுங்கும் சடலங்கள்

சிறீலங்கா அரசின் 'ஜெய சிக்குறு' அரக்கனுக்குப் பயந்து உயிரைக் காத்துக்கொள்ளும் நோக்குடன் தமிழகத்திற்கு படகு ஒன்றின் மூலமாக செல்ல முனைந்த ஈழத்தமிழர்கள் 45 பேர் ராமேஸ்வரத்திற்கு அருகே படகு கவிழ்ந்ததில் பரிதாபகரமாக கடலில் மூழ்கி பலியாகியுள்ளதாக அஞ்சப்படுகிறது. 8 பேர் மட்டும் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த சனியன்று (25.07.98) முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியை சேர்ந்த 52 பேர் (32 ஆண்கள், 15 பெண்கள் 5 குழந்தைகள்) மன்னார் இலுப்பைக்கடவை பகுதியிலிருந்து படகு ஒன்றில் ஏறி தமிழகம் நோக்கி பயணித்துள்ளனர்.

இவர்கள் பயணஞ்செய்த படகு தனுஷ்கோடியை நெருங்கிக் கொண்டிருந்தபோது கடற் கொந்தளிப்பும் காற்றும் பலமாக இருக்கவே படகில் சிறிய வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இவ் வெடிப்பினூடாக கடல் நீர் படகிற்குள் உட்புகவே படகிலுள்ளவர்கள் பீதியடைந்து படகின் மறு பக்கமாக திரளவே படகு தலை கீழாக கவிழ்ந்தது. படகிலுள்ள அனைவரும் கடலுக்குள் வீசியெறியப்பட்டனர். கடலில் மூழ்கிய இவர்கள் தம்மை காப்பாற்றக்கோரி அபயக்குரலும் எழுப்பினர்.

அப்போது அப் பகுதிக்கு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழக மீனவர்களின் காதுகளில் இவ் அவலக் குரல்கள் எழுந்தமையால் அவர்கள் தமது படகுகளில் அப்பகுதிக்கு விரைந்தபோது கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த ஏழு பேரை மட்டும் அவர்கள் மீட்டு ராமேஸ்வரம் கரைக்குகொண்டு வந்ததும் இந்த அனர்த்தம் வெளி உலகிற்கு எட்டியது.

இதனைத் தொடர்ந்து மூழ்கியவர்கள் தேடும் பணியில் இந்திய கடற்படையின் உலங்கு வானூர்திகளும், படகுகளும் தொடர்ந்தும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன. ஆயினும் இதுவரை நான்கு சடலங்கள் கரையொதுங்கியுள்ளன. மீனவர்களால் காப்பாற்றப்பட்டவர்கள் போக மேலும் ஒருவர் நீந்தி கரை சேர்ந்துள்ளார்.

### அம்மா, அம்மா என அலறியபடியே மூழ்கினார்

#### உயிர் பிழைத்தவர் தெரிவிப்பு

...படகு கவிழ்ந்ததும் கடலில் வீசியெறியப்பட்ட நான் ஒருவாறு நீந்தத் தொடங்கினேன். என் அருகே பலர் அலறியபடி மூழ்குவதும் எழும்புவதுமாக இருந்தார்கள். கடற் கொந்தளிப்பும் காற்றும் மிக அதிகமாக இருந்ததால் எனக்கு கூட நீந்துவது சிரமமாக இருந்தது. அப்போது என்னோடு கூடவே நீந்திவர ஒரு இளைஞர் முயற்சித்தார். அவர் தெல்லிப்பளையைச் சேர்ந்தவர் என்பதை நான் படகில் பயணஞ் செய்த போது அறிந்துகொண்டேன். அவரது அம்மாவுடன் படகிலே வந்திருந்தார். ஆயினும் அவரால் தொடர்ந்தும் நீந்த முடியவில்லை. எனது உடலிலும் அவரைக் காப்பாற்ற முடியுமளவிற்கு தெம்பு இருக்கவில்லை. சற்று நேரத்தில் அம்மா.. அம்மா என அலறியபடியே அந்த இளைஞர் கடலில் மூழ்கிவிட்டார்.

இவ்வாறு உயிர் பிழைத்தவரில் ஒருவர் மண்டபம் அகதி முகாமில் வைத்து தெரிவித்துள்ளார்.

### மூன்று இந்திய கடற்படை கப்பல்கள் தேடுதல்

#### இந்திய பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை

(27.07.98)

நேற்று அதிகாலை இராமேஸ்வரம் கடற்பகுதியில் மூழ்கிய ஈழத் தமிழர்களை மீட்கும் பணியில் மூன்று இந்திய கடற்படைக் கப்பல்கள் ஈடுபட்டுள்ளன என இந்திய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. மேலும் கடற்படைக்கு சொந்தமான விமானமும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

### கறுப்புயூலை நினைவாக மெழுகுவர்த்திப் போராட்டம்

(26.08.98)

சிங்கள அரசின் திட்டமிட்ட பாரிய இன அழிப்பான 1983 யூலைப் படுகொலைகளை நினைவு கூரும் முகமாக பாரிஸிலும், ஜேர்மனியிலும் அமைதிப் போராட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

பாரிஸ் மனித உரிமைச் சதுக்கத்தில் இன்று நடந்த மெழுகுவர்த்திப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள்

(தொடர்ச்சி 33ம் பக்கம்)

### 'சார்க்' மாநாட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள்

### தமிழர்கள் முடக்கம்

28.07.98

நாளை கொழும்பில் ஆரம்பமாகவுள்ள 10 வது சார்க் உச்சி மாநாட்டினை முன்னிட்டு கொழும்பில் மிகப் பாரிய எடுப்பிலான பாதுகாப்பு நடவடிக்கைகளில் சிறிலங்கா அரசு ஈடுபட்டுள்ளது. மாநாட்டைக் குழப்புவதற்கு பல அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருப்பதால் கொழும்பினதும் அதன் புறநகர் பகுதிகளினதும் பாதுகாப்பை பலப்படுத்தவேண்டிய கட்டப்பாடு அரசாங்கத்திற்கு இருப்பதால் இவ் ஏற்பாடுகளால் பாதிப்படைவோர் குறித்து கவலை அடையவேண்டிய தருணம் இதுவல்லவென கொழும்பின் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் வெளிப்படையாகவே

(தொடர்ச்சி 36ம் பக்கம்)

### படகு விபத்திற்கு வை.கோ, ராமதாஸ் இரங்கல் அறிக்கை

கடந்த ஞாயிற்றுக்கிழமை இராமேஸ்வரம் கடற்பரப்பில் ஏற்பட்ட படகு விபத்தில் பலியான ஈழத் தமிழருக்கு இரங்

(தொடர்ச்சி 33ம் பக்கம்)

லண்டனில் புதுப் பொலிவுடன்



கணபதி தமிழ்க்கடை

உடன் மரக்கறி வகைகள், கடலுணவுகள், மளிகைப் பொருட்கள்
உங்கள் அனைத்து தேவைகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்வதற்கு

Ganapathy Food & Wine
34, Ealing Road Wembley, Middx, Hao 4TL, U.K
Tel: 0181 -903 3184 / Fax: 0181 -903 3185

நண்டு £3.99
அறக்குளா (King Fish) £2.99
இறால் £1.49
விளைமீன் / கும்பிளா / சீலா £2.99
மரக்கறி (நம்நாட்டு வகை) .99Pence